Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් ஆக. 06-12, 2000

# தினமுரசு வாரமலர்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 368

## திம்புக் கோரிக்கை இப்போதும் பொருந்துமா?



## காஷ்மீரும் தமிழகக் கட்சிகளும்

## கில்லாடி கிளின்ரன்

## விருதைத் தவறவிட்ட விக்ரம்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# முரசம்

## தாழிதான் உடையும்?

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

'பழைய குருடி
கதவைத் திறவடி' என்பார்களே
அதுபோல மீண்டும் அதே
காலைவாரும் அரசியலும்
இனவாத எதிர்ப்புக்களும்
தோன்றத் தொடங்கிவிட்டன.

காலாகாலமாக,
இனப்பிரச்சனைக்கு ஏதாவது
குறைந்த பட்சத் தீர்வையாவது
எட்டுகின்ற
அரசியல் தீர்வுகள்
உருவாகும் போதெல்லாம்
இதே நிகழ்வுகள்தான் நிகழ்ந்து
அவற்றைச்
சின்னாபின்னமாகச்
சிதறடித்து வந்தன.

பண்டா–செல்வா
ஒப்பந்தம் நிகழ்ந்தபோதும்
இவ்வாறே குழப்பப்பட்டது.

டட்லி–செல்வா
ஒப்பந்தம் நிகழ்ந்தபோதும்
இப்படித்தான் நடந்தது.

ஆனால் இம்முறை
சற்று மாறுபட்ட வகையில்
இனப்பிரச்சனைத் தீர்வில்
ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும்
இணக்கப்பாடு காண்பதற்கான
நம்பிக்கைகள் தெரிந்தன.

இந்த இணக்கங்கள்
வெளிநாட்டுச் சக்திகளின்
நெருக்குதலாலேயே
ஏற்பட்டதாக எம்மால்
ஊகிக்க முடிந்தது.

அந்த இணக்கங்கள்
தமிழ் மக்களின் அபிலாஷைகளை
ஈடுகட்டுவனவாக
இல்லாதிருந்ததுடன்
ஏற்கெனவே தமிழ்க்கட்சிகளுடன்
இணங்கிய விடயங்களையும்
குறைப்பதாக இருந்தன.

இதனையிட்டு
ஈ.பி.டி.பி. கட்சியினர்
யு.என்.பி.யுடன் பேசியபோது,
இந்தத் தளர்த்தல்களுக்குத்
தாம் காரணமில்லையென
அவர்கள் கூறியதாகச்
செய்திகள் வெளியாகின.

அப்படியானால்,
முத்தரப்புப் பேச்சுவார்த்தையால்
இதனைத் தீர்த்து
பொது இணக்கத்தை ஈட்ட முடியுமென்ற
நம்பிக்கைகள் துளிர்த்தன.

அவ்வாறான
முயற்சியில் இறங்குமுன்னர்
ஐ.தே.க.
முன்னெச்சரிக்கையாக
பேச்சு வார்த்தைகளில்
தமது தலைவர்
ரணில் பங்குபற்றாது
விலகியிருக்க முடிவு செய்தது.

இதன் மூலம்
தமிழ்க் கட்சிகளுடன்
காணக்கூடிய உடன்பாட்டில்
ஐ.தே.கவுக்கு
பூரண சம்பந்தமில்லையெனத்
தம்மை விலக்கிக்காட்ட
விழைந்தது.

இந்த வகையான
பின்வாங்கலின் உச்சக்கட்டமாக
பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்
தீர்வுத் திட்டத்துக்குத்தான்
ஆதரவளிக்கப் போவதில்லையென
இப்போது அறிவித்துள்ளது.

தமிழ் கட்சிகளுடன்
பூரண உடன்பாடு
காணப்படு முன்னரே
காலைவாரிவிட்டது
எதிர்க்கட்சி.
எதிர்க்கட்சியின்
அழுத்தம் காரணமாகவே
தமிழர் கோரிக்கைகளை
மலினப் படுத்தவேண்டி
வந்ததாகக் காட்டமுனையும்
ஆளும் கட்சி,
இம் மலினப் படுத்தல்களுடன்
தீர்வை முன்வைத்தாலும்
ஐ.தே.க. எதிர்க்கவுள்ளது.

தமிழ்க் கட்சிகளின்
கோரிக்கைக்கமைய
மலினப் படுத்தல்களை
விலக்கிக் கொண்டு
தீர்வுத திட்டத்தைத்
திருத்தி அமைக்க
அரசாங்கம் முன்வந்தால்
வரவேற்கத் தக்கது.
ஆனால்
அதற்கும் தடையாக
இனவாத சக்திகள் தம்
எதிர்ப்புணர்வுகளை
இப்போதே வெளிப்படுத்த
ஆரம்பித்துள்ளன.

சிஹல உறுமய போன்ற
இனவாதக் கட்சிகளும்
பௌத்த பிக்குகளும்
தீர்வுத் திட்டத்துக்கு
எதிர்ப்புத் தெரிவித்து
வீதிக்கு இறங்கியுள்ளனர்.
தேர்தலை எதிர்நோக்கும்
நெருக்கடியான இக்காலத்தில்
சிங்கள மக்களின்
உணர்வலைகளைத் தட்டிவிடக்கூடிய
பௌத்த மதத் தலைவர்களின்
எதிர்ப்பினைச் சம்பாதிக்க
அரசாங்கம் முன்வருமென
நம்புவது கடினம்.

பாராளுமன்றத்தில்
தீர்வுத் திட்டத்தைச்
சமர்ப்பிக்கும்போது
வெற்றியை
உறுதிப்படுத்திக்கொள்வது
அரசாங்கத்துக்கு அவசியம்.
பாராளுமன்றத்தில்
தீர்வுத்திட்டம்
தோற்கடிக்கப்பட்டால்
தேர்தலிலும் அத்தோல்வி
பாதிப்பை ஏற்படுத்துமென
அரசாங்கம் அஞ்சும்.

எனவே
கடையப்பட்ட தயிரில்
வெண்ணெய் திரளப்போகிறதோ இல்லையோ,
தாழி உடையப் போகும்
அபாயம் மட்டும்
தோன்றிவிட்டது. ▬ ▬
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

**என்றென்றும் அன்புடன்,**
**ஆசிரியர்.**

# ஆன்மீகம்

## அம்பாளை வழிபடுவோம்

குழந்தை அழுகிறது. தாய் அறிவாள், ஏன் அழுகிறது என ஓடிச்சென்று பிள்ளையின் தேவையை நிறைவேற்றுகிறாள்.


எங்கேயோ புல்மேய்ந்து கொண்டு நிற்கிற பசுவுக்கு கன்று கதறும் சத்தம் கேட்கிறது. மடி சுரக்கிறது. விரைந்தோடி வந்து பால் ஊட்டுகிறது.

'அத்தாயிலும் பார்க்க மேலானவன் இறைவன்' என்கிறார் மணிவாசகர்.

பிள்ளைகள் சிறு பிழைகள், குழப்படி செய்கின்ற போது தண்டிப்பவர் அப்பா. ஆனால் அம்மா பிள்ளையிடம் அன்பு காட்டி, அணைத்து பிள்ளையின் வழியே சென்று திருத்துவாள். அதனால் பிள்ளை தாயோடு ஒட்டிக் கொள்கிறது. அம்மாவுக்கு இரக்கம் கூட. பிள்ளைகள் தாய்மூலமே தந்தையிடம் வேண்டியதைப் பெற்றுக் கொள்வர்.

ஒரு குழந்தை அழுதால் தாய் மனமிரங்கி தூக்கி, அணைத்து பாலூட்டி, சீராட்டி, அன்பு காட்டி அமைதிப்படுத்துகிறாளென்றால் உலக மாதாவாகிய அம்பாள் பக்தர்களாகிய தன் குழந்தைகளை; அவர்களின் வேண்டுதல்களைக் கேட்டு மனமிரங்கி அருள்புரிய மாட்டாளா? என காஞ்சி பரமாச்சாரிய சுவாமிகள் கூறுகிறார். அம்பாளை வழிபட்டால், தனம், கல்வி, தளர்வறியா மனம் தெய்வ வடிவம், இன்னும் என்னென்ன வேண்டுமோ அத்தனையும் தருவாள். ஆகவே அம்பாளை வழிபட்டு உய்தி பெறுவோம்.

செல்வி: பா.வேலுப்பிள்ளை.



## பொறுமையின் சிறப்புக்கள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்; "எந்த மனிதர் பொறுமையாய் இருக்க முயல்கிறாரோ, அவருக்கு அல்லாஹ் பொறுமையை அளிப்பான். பொறுமையை விட சிறந்ததும், பல நன்மைகளைக் குவிக்கக்கூடியதுமான கொடை வேறெதுவுமில்லை!"

அறிவிப்பவர் : அபூஸயீத் அல்குத்ரீ(ரலி)
ஆதாரம் : புகாரி, முஸ்லிம்

சோதனைக்குள்ளாகும் போது ஒரு மனிதர் பொறுமையை மேற்கொள்கின்றார். ஏக இறைவனின் மீது உறுதியான நம்பிக்கை வைத்து அவனையே சார்ந்திருக்கும் தன்மை ஒரு மனிதனிடம் இருக்கும்போதுதான்., அவனால் பொறுமையைக் கடைப்பிடிக்க முடிகின்றது. இத்தன்மைகள் இல்லை எனில் அவனால் பொறுமையை மேற்கொள்ள முடியாது. மேலும் எவனுக்குள் நன்றிசெலுத்தும் பண்பு இல்லையோ அவனால் ஒரு போதும் பொறுமையைக் கடைப் பிடிக்க முடியாது. இவ்வாறு பொறுமை எனும் பண்பு எத்தனையோ சிறப்புக்களைத் தன்னகத்தே குவித்து வைத்துள்ளது. எனவே இத்தகைய பொறுமை எனும் பொக்கிஷத்தை எம் வாழ்விலும் ஏற்று நடப்போமாக.

மொஹமட் இர்ஹாம்–காத்தான்குடி 05.

## மனந்திரும்புங்கள்

மனந்திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது; –மத்தேயு 3:2

இது யோவான் ஸ்நானகன் செய்த பிரசங்கத்தின் ஆரம்ப வசனம். நமது கர்த்தரும் தமது பிரசங்கத்தை இவ்வார்த்தைகளாலேயே துவக்குகிறார். ஏனெனில், நாம் தேவ ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கும் தேவ ஆசீர்வாதங்களை அனுபவிப்பதற்கும் மனந்திரும்புதலே அஸ்திவாரம். ஆரம்பத்தில் ஆதாம் ஏவாளின் பாவம் மனுக்குலத்தை தேவனை விட்டு விலகுவதற்கு ஏதுவாக மாறிவிட்டது. எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி விட்டோம். ஆனாலும் எங்கள் மேல் இரக்கமும் அன்பும் கொண்ட தேவன், எங்களுடைய பாவங்களுக்காக தன்னுடைய உயிரையே பலியாகக் கொடுத்து தன் அன்பை விளங்கப்பண்ணுகிறார். நாங்கள் எங்கள் பாவத்தைவிட்டு மனம் திரும்பும்படி விரும்புகிறார். நாம் அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற அவரோடு ஐக்கியப்படுவது அவசியம். அவருடைய ராஜ்யம் நமக்கு சமீபமாய் இருப்பது மெய்யே. ஆயினும் அதற்குள் பிரவேசிக்கப் பாவத்தினின்று மனந்திரும்புதல் இன்றியமையாதது.

ஆகையால், தேவனோடு ஐக்கியம் அடைந்து தேவ ராஜ்யத்துள் பிரவேசிக்க மனந்திரும்புதலே ஆதாரமாகும்.

தி.தேவபாலன்–மட்டக்களப்பு

## கவிதைப் போட்டி இல.368



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 12.08.2000

கவிதைப் போட்டி இல.368
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

## கவிதைப் போட்டி இல.365

### பரிசுக்குரிய கவிதை

### அகலாதோ இருள் மேகம்!

இருளெனவே
உருக்கொண்ட
கருக்கட்டும் வான்மேகம்
அருக்கன்தன் சுடர்பரவ
உருக்குலைந்து போகாதோ?

வ.ஆ.அதிரூபசிங்கம், கொழும்பு–13.

### பொழிந்துவிடு

சூழ் கொண்ட கருமுகிலே
எங்கே செல்கிறாய்...?
நம் நாட்டில்
வீரமறவர்கள் துயில்கொள்ளும்
புனித பூமியில் மழையாக
பொழிந்துவிடு;
ஏனெனில்
அவர்கள் புதைக்கப்பட்டவர்கள்
அல்ல;
விதைக்கப்பட்டவர்கள்!

ந.கிருஷ்ணா–மட்டக்களப்பு.

### கனவுகள்

வைகறையில் துயிலெழுந்து
வருகின்ற இளங்கதிரோன்
புதுமைகளில் புதுக்கோலம்
தாமரை போல் சிரிக்கையிலே
இனிமைகள் பூத்திருக்கும்
இளந்தென்றல் வரவேற்கும்
நிம்மதி வரும் என
கனவுகள் காண்கின்றேன்.

த.புருஷோத்தமன்–நாவற்குடா.

### குளிப்பு

குளி.....!
மேகத்துள்
மேனி நுளைத்து
நன்றாய்க் குளி......!
நாளை
உன் உதயம்
கழுவப்பட்ட
கதிர்களோடு மட்டும்
கனைப்பதாயிருந்தால்,
இப்போது
நன்றாய்க் குளி!

எம்.றிஸ்வான்–கம்மல்துறை.



### மழை எங்கே?

பாரிலுள்ள நீரைப்
பருகியதால்
கருக்கட்டிய நீ
கண்ணீராகவேனும்
அதைப் பிரசவிக்காமல்
அலைவதேதற்கு??

மு.மாதவி–மன்னார்.

### ஏக்கம்

கீழே பூமித்தாய் ஏங்கியிருக்க!
மேலே சூழ்ந்திருப்பது என்ன!!
யுத்த மேகமா? மழை மேகமா?

ஏ.என்.எம்.ஜவாத்–புத்தளம்.

### எப்போது?

முன்னால் தெரியும்
யுத்த இருள் மேகம்
விலகுவது எப்போது?
பின்னால் தெரியும்
சமாதான வெளிச்சம்
வருவது எப்போது?

எஸ்.பி.கணேஷ்–தாண்டியடி.

### சமரசம்

ஓ கதிரவனே......!
சில தினங்கள்
நீ மறைந்து கொள்!
அந்த இருளில் ஆவது
சமரசத்துக்கு அருகில்
வராதவர்கள்
தடுமாறி வரக்கூடும்!.

கு.சிவாஜி–சாவகச்சேரி.

### கேள்வி

இருள் நீங்குவதும்
ஒளி வீசுவதும்
இனிவரும்
தேர்தலுக்கா......?
பின்
இருள் சூழுமா?

யோகாபிரியன்–வவுனியா.

### நம் நாடு!

கறுப்பு ஜூலை கலவரத்தில்!
கருகிப் போன உயிர்களின்!
காலன் கவர்ந்துச் சென்ற....!
அக்கினி ஜுவாலை இன்று!
அவதாரம் எடுத்து இங்கு!
அடையாளம் காட்டுகிறதோ?

மனோ கோபாலன்–ஹப்புத்தளையூர்.

### யார்க்கு....!

பாரில் குமுறும் எரிமலை
உலகைச் சுடும்–தமிழர்
எம் மனதில் குமுறும்
எரி மலை யார்க்குப் புரியும்!

சி.மதியழகன்–திருகோணமலை.

# வாசக(ர்)சாலை



தித்திக்கும் தினமுரசே!
வியாழன் விடிகாலை என்றதும் வழிமேல் விழிவைத்து 'வாரமலரே' உன்னை நான் பார்த்திருப்பேன் முரசே....
நீ துணிந்து அணிந்து வரும் அத்தனை அம்சங்களும் 'மெகாகிட்' முரசே!
உன்னை நான் வாழ்த்த தமிழில் வாழ்த்தும் வார்த்தைகளே 'கம்மி' போன்று தெரிகின்றது. முரசே உன் சிஷ்யனின் அர்ப்ப வாழ்த்தினை ஏற்பாயா? நீ பல்லாண்டு காலம் பல்லாக்கிலே வாழ்க. உன் சொல் ஆக்கிலே அத்தனை இதயத்திலும் வாழ்கவே! வளர்கவே! ஆள்கவே!

க.கௌரிசங்கர்–வவுனியா.

சரியாகச் சொன்னாய் தினமுரசே!
சுமார் ஒரு வருடத்திற்கு முன் இலங்கை கிரிக்கெட் அணியில் பல மாற்றங்கள் செய்யப்பட்டது. அதிலொன்று அணியின் உபதலைவராக மஹேல ஜயவர்த்தன நியமிக்கப்பட்டதாகும்.
அப்பொழுது வெளிவந்த 318ம் முரசிலே 'முரசம்' பகுதியில் மஹேல ஜயவர்த்தனாவுக்கு துணைத் தலைவர் பதவி கொடுத்திருப்பது நேர்த்தியானதில்லை. அணியில் இணைந்து இரண்டாண்டுகளுக்கள் துணைத்தலைவர் பதவி கொடுத்திருப்பது 'குருவி தலையில் பனங்காய் போன்றது' என்று குறிப்பிடிருந்தாய்.
நீ சொன்னது போலவே தற்பொழுது மஹேல ஜயவர்த்தனவின் தலைமைப் பதவி நீக்கப்பட்டுள்ளதை யாவரும் அறிவோம். சரியாக ஆருடம் கூறிய உனக்கு எனது பாராட்டுக்கள்.

ரோஷன்–அக்குறணை.

தித்திக்கும் செய்திகளைதந்து எம்மைத் திகைக்க வைக்கும் என் அன்பின் முரசே!
நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. நீ எப்போது என் கையில் கிடைப்பாய் என தபால் காரனைப் பார்க்கிறேன். ஏனென்றால் நீ சுமந்து வரும் சம்பவங்கள் அனைத்தும் எங்கள் போன்ற மக்களுக்கு பெரும் பயனை தருகின்றதால். நீ கோடான கோடி காலம் வாழவேண்டும் என வாழ்த்துகிறேன்.

ந.ஊரவன்–ஸ்கந்தபுரம்.

தமிழருக்காய் தடை தாண்டித் தோன்றும் தமிழ்முரசே!
உன் சேவையைப் பாராட்ட எம் குடும்பத்தில் எவருக்கும் வார்த்தை தெரியவில்லை. 364ஆவது முரசில் நடிகர் ஜெயசங்கரைப் பற்றிய செய்தியை பார்த்து அழுதேவிட்டோம்.
கொடுமையானவிடயம். உன்னை மிக நேசிக்கும் எம் குடும்பம் சார்பில் அவர்மனைவி நலமடைய வாழ்த்துகிறோம்.
'தேன்கிண்ணத்தில்' 'காதலிக்காத காதலிக்கு' என்ற தலைப்பில் மன்னார் எம்.ஷிபான் எழுதிய கவிதை சூப்பர். என் மனதை என்னவோ போலாக்கிவிட்டது. கற்பனைதான் என்றாலும் அந்த வரிகள் ஒரு வஞ்சியை நையாண்டி கலந்த பரிதாபத்துடன் பார்க்கின்ற கவிஞரின் உள்ளம் தெரிகின்றது. நிறைகுடம் தளும்பாது என்பதற்கு நீயும், ஆக்கங்களும் சான்று! வாழ்த்துக்கள்.

எம்–ஷீலா–மன்றாசி.

என் இதயத்திற்குள் இருக்கும் இருளைப் போக்கி ஒளிபரப்பிய சூடு சுவை சுவாரசியம் அடங்கியுள்ள தித்திக்கும் தினமுரசே!
நீ தாங்கிவரும் அனைத்தும் அற்புதமே அற்புதம். அதிலும் 'நில்-கவனி-முன்னேறு' என்னும் பகுதியில் வரும் கட்டுரை படிப்பினையூட்டுகின்றது. 'சிந்தியா பதில்கள்' சிந்திக்கக் கூடியதாயுள்ளது. 'இலக்கிய நயம்' பகுதிக்கு கவிதையாக்கி தொகுத்துத் தரும் 'முழுடில்யன்' அவர்களைப் பாராட்டுவதோடு 'ஸ்போர்ட்ஸ்' பகுதியில் விளையாட்டில் சம்பந்தப்பட்ட வீரர்களின் குறை நிறைகளை சூடு-சுவை-சுவாரசியமாய் அறியத் தரும் தினமுரசை பாராட்ட வார்த்தையே இல்லை என்று தான் சொல்லவேண்டும். அந்தளவு அனைத்து செய்தியையும் சேர்த்துத் தருகிறது.

எஸ்.எம்.அஹமட்–ஏறாவூர்.

வாரத்தில் ஒரு முறை வாசகர் நெஞ்சங்களை வட்டமிடும் தினமுரசே!
உன் பல்லாயிரக் கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன்.
வாரத்தில் ஒரு முறை நம் இரு கரங்களையும் நீ வந்தடையும் போது, நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் எம்மைப் போன்ற இளைஞர்களின் மனதை துக்கத்தில் இருந்து மீட்டெடுக்கின்றது. இதைப்போன்று மேலும் பல சுவைமிக்க அம்சங்களை நீ ஒவ்வொரு வாரமும் சுமந்து வந்து எங்களைப் போன்ற இளைஞர்களை மகிழ்விக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

கே.எம்.அனீஸ்–புதியகாத்தான்குடி–06.

என் இனிய தினமுரசே!
உன் ஆக்கங்கள் அனைத்தும்
இனிமையிலும் இனிமை.
அதிலும் 'பாப்பா முரசு',
'தேன்கிண்ணம்', 'எக்ஸ்ரே
ரிப்போர்ட்', 'தகவல் பெட்டி'
அனைத்துமே நன்று.
இவைகளை தொடர்ந்து நீ
சுமந்து வருவாய் எனவும் என்
பல கோடி வாழ்த்துக்கள்!

ஜெ.லக்கி–கல்லாறு.

என் அபிமான முரசே!
உன்னில் அடங்கியுள்ள
அனைத்து அம்சங்களும் என்
மனதில் ஆழமாகப் பதிகின்றன.!
கிரிக்கெட் சபையின் வெப்தள
முகவரியை முன்கூட்டியே தந்த
முரசுக்கு மிக நன்றி! ஒவ்வொரு
வாரமும் உன் வருகையை
ஏக்கத்துடன்
எதிர்பார்த்திருக்கிறேன்! உன் பணி
தொடர எனது வாழ்த்துக்கள்.

எம்.எம்.எம்.இமாம் ஹஸன்–ஹெம்மாதகம.

**மடல்கள் மற்றும்**
**ஆக்கங்கள்– உட்பட சகல**
**தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல:–1772, கொழும்பு.**
**தொலைபேசி: 074–514282**
**தொலை நகல் (Fax):– 074-513266**

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# புதிய அரசியல் யாப்புச் சட்டமூலம் சட்டவடிவம் பெற வாய்ப்புண்டா?

# வாக்கு பலம் பெறுவது சந்தேகமே!

**பாராளுமன்றத்தில் புதிய அரசியல் யாப்புத் திருத்தச் சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு சில நாட்கள் மட்டுமே இருக்கும் இந்தக் காலகட்டத்தில்–, நாடெங்கிலும் பலதரப்பட்ட எதிர்ப்புக் குரல்கள் எழுந்திருக்கும் போது– அவசர அவசரமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திருத்தச் சட்டமூலம் சட்டமாக்கப்படுவதானால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகள் பெறப்பட வேண்டும். இன்றுள்ள நிலையில் இச்சட்டமூலம் சட்டமாக்கப்படுமா என்று பலத்த சந்தேகம் தோன்றியுள்ளது.**

புதிய அரசியல் யாப்பு திருத்தச் சட்ட மூலத்தை பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆகஸ்ட் 3ம் திகதி வியாழக்கிழமையன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அங்கீகாரத்தை ஜூலை 31 ஆம் திகதி திங்கட்கிழமையன்று கூடிய அமைச்சரவை சிறப்புக் கூட்டத்தில் ஏகமனதாக வழங்கியது. இந்தச் சட்ட மூலத்திற்கு நாடெங்கிலுமிருந்து பல தரப்பினரும் தங்கள் எதிர்ப்பினைத் தெரிவித்து வருகின்றனர். முக்கியமாக மூன்று பௌத்த மத உயர் பீடாதிபதிகளும் தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதுடன் இந்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ஆதரவளிக்கக் கூடாதென கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

சிங்களப் பேரினவாதச் சக்திகளும் வரிந்து கட்டிக் கொண்டு எதிர்ப்புக் களத்தில் குதித்திருக்கின்றனர்–.

கடந்த சில மாதங்களாக இப்புதிய சட்டமூலத்திற்கு ஆதரவு வழங்கும் நோக்குடன் ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஹெலவுக்கு சார்பாக ஒத்துழைப்பு நல்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி திடீரென தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது. "தற்போதுள்ள பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னதாக இந்தத் திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வந்து சட்டமாக்கப் போகிறேன்" என்று ஜனாதிபதி சந்திரிக்கா ஏற்கனவே பல தடவைகள் கூறியிருந்தார். அப்போதெல்லாம் எத்தகைய எதிர்ப்பும் காட்டாமல் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, "இந்தத் திருத்தச் சட்டமூலத்தை நாட்டிலுள்ள மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முன்னர், அவசர அவசரமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது நாட்டில் பல தரப்பட்ட சிக்கலைத் தோற்றுவிக்கும்," என்று திடீரென அறிவித்துவிட்டு சம்பந்தா சம்பந்தமில்லாத வேறு பல காரணங்களையும் கூறிவிட்டு பேச்சுவார்த்தையிலிருந்து பின் வாங்கி விட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் இந்தச் சட்ட மூலத்தை எக்காரணம் கொண்டும் தாம் ஆதரிக்கப் போவதில்லை என்றும் திட்ட வட்டமாக அறிவித்துவிட்டது.

அரசாங்கத்தைத் தொடர்ந்து ஆதரித்து வரும் முஸ்லிம் காங்கிரசும் இந்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவு வழங்குவது சந்தேகத் திற்கிடமானதாகவே இருக்கிறது.

கடந்த 1997ம் ஆண்டு பொது ஜன முன்னணி புதிதாக உருவாக்கிய அரசியல் யாப்புத் திருத்தச்சட்ட மூலத்தை தமிழ் கட்சிகள் சில சில திருத்தங்களுடன் ஆதரிக்க முன்வந்தன. ஆனால் அன்று உருவாக்கப்பட்ட அந்தச் சட்டமூலம் வெட்டிக் கொத்தி பல மாற்றங்கள் செய்யப்பட்ட பின் தங்கள் ஆதரவினை வழங்குவதற்கு மேற்படி அரசியல் கட்சிகள் தயக்கம் தெரிவித்திருந்தன.

இதற்கிடையில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் பேச்சுவார்த்தையிலிருந்து விலகியதைத் தொடர்ந்து, ஏற்கனவே 1997ல் முன் வைக்கப்பட்ட சட்ட மூலத்தையே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கபோவதாக ஜனாதிபதி சில தடவைகள் தெரிவித்து வந்தார். ஆனால் இப்பொழுது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காக அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட திருத்தச்சட்ட மூலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொண்ட சில அம்சங்களும் இணைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சிக்கு ஆக 150 ஆசனங்களே உள்ளன. இவை தவிர ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும் வெளியேறி ஆளுங் கட்சிக்கு ஆதரவாக இருக்கப் போவதாகக் கூறும் சிலரும் ஆளுங்கட்சியுடன் இணைந்து செயற்பட விருப்பதாகத் தெரிகிறது.

புதிய திருத்தச் சட்ட மூலத்தை சட்டமாக்குவதானால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றாக வேண்டும்.

இன்றுள்ள நிலையில்– சட்டமூலத்திற்கான எதிர்ப்புகள் அதிகரித்து வரும் வேளையில் மேற்படி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவது சாத்திய மாகுமா? என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது.

(இச் செய்தி ஆகஸ்ட் 1ம் திகதியன்று பிற்பகல் எமது பத்திரிகை அச்சுவாகன மேறுவதற்கு முன்னர் எழுதப்பட்டது என்பதை வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.)

## கொழும்பில் கடத்தல்....
## இலண்டனில் கப்பம்

கொழும்பு பழைய சோனகர் தெருவிலிருந்து கடத்தப்பட்ட மகாலிங்கம் சஞ்சீவன்(வயது 23) கடத்தல் தொடர்பாக மேலும் சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

15 இலட்சம் ரூபா கப்பம் பணம் கேட்டு வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்தப்பட்ட இவ்விளைஞர் ஆறு நாட்களின் பின்னர் 10 இலட்சம், கனடாவில் இருக்கும் பெற்றோரினால் இலண்டனுக்கு அனுப்பப்பட்ட பின்னரே விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு வர்த்தகரான நயினாதீவைச் சேர்ந்த மகாலிங்கம் தனது குடும்பத்துடன் ஸ்பொன்சரில் கனடா சென்றுவிட்டார். கனேடிய குடிவரவுச் சட்டத்தின்படி மகனான சஞ்சீவன் குறிப்பிட்ட வயதெல்லையைத் தாண்டியபடியால் விசா கிடைக்கவில்லை. இதனால் சஞ்சீவன் கொழும்பிலேயே தங்கி இருந்தார்.

கடத்தல்காரர்கள் கனடாவில் இருக்கும் சஞ்சீவனின் பெற்றாரிடம் இலண்டன் நகரத்தில் உள்ள ஒரு தமிழரின் தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்து, அவரிடம் தொடர்பு கொண்டு பணத்தை இலண்டனில் கொடுத்தால் மகனை விடுதலை செய்வதாகவும் கூறி இருக்கிறார்கள். இதன்படி கப்பப்பணம் இலண்டனுக்கு கனடாவில் இருந்து அனுப்பப்பட்டது. சஞ்சீவன் விடுதலையானார். கடத்தல்காரர்கள் தமிழர்கள் என்பது உறுதியாகத்தெரிகிறது. இவர்கள் யார்? இவர்கள் பின்னணி என்ன என்பது மர்மமாகவே உள்ளது.

## கடத்தப்பட்ட தமிழ் யுவதி?

கொகுவலயிலிருந்து ஹட்டனுக்கு பயணம் செய்த தமிழ் யுவதியும், தலவாக்கலைக்கு பயணம் செய்த தமிழ் இளைஞனும் கொழும்பில் சீருடையினரால் சோதனைச் சாவடியில் தாக்கப்பட்டு உடமைகள் கொள்ளையிடப்பட்டன் பின்னர் ஹட்டன் வரவிருந்த மேற்படி யுவதி, ஜீப்பில் கடத்தப்பட்டது சம்பந்தமாக நுவரெலியா பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடு செய்வதற்கான ஏற்பாட்டினை பாராளுமன்ற உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமாகிய பெ.சந்திரசேகரன் செய்துள்ளார்.

கடத்தப்பட்ட மேற்படி தமிழ் யுவதி சிவந்த, ஒரளவு உயர்ந்த,மெலிந்த தோற்றமுடையவர் என்று தெரிவித்த உயிர் தப்பிய இளைஞன், அந்த யுவதி பிலியந்தலையிலிருந்து பஸ்ஸில் வந்து கொண்டிருந்ததாகவும் அறிவித்திருக்கிறார்.

எனவே ஹட்டன் பிரதேசத்திலிருந்து பிலியந்தலை அல்லது அதற்கு அண்மித்த பகுதிகளில் தொழில் புரியும் மேற்படி அங்க அடையாளமுள்ள தமது பிள்ளைகள், குறிப்பிட்ட இடத்தில் தொழில் புரிகின்றார்களா, என்பதனை உடனடியாக உறுதி செய்து கொள்ளுமாறும், அவ்வாறு தொழில் புரிந்து வந்த யாராவது பற்றிய தகவல்கள் கிடைக்காவிட்டாலோ, அல்லது இது சம்பந்தமாக ஏதாவது சந்தேகங்கள் எழுந்தாலோ உடனடியாக தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் பெ.சந்திரசேகரன் அவர்கள் ஹட்டன் பகுதி மக்களைக் கேட்டுக் கொள்கின்றார்.

## படுகொலைகள் நிகழ்ந்து 10 ஆண்டுகள் நிறைவு

(எமது நிருபர்)

கிழக்கில் பலர் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களும், காணாமல் போன சம்பவங்களும் இடம்பெற்று இப்பொழுது பத்தாண்டுகள் நிறைவடைகின்றன.

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03ஆம் திகதி காத்தான்குடி மீரா ஜும்மாப் பள்ளி வாசலிலும், ஹுஸைனியா தைக்காவிலும் இரவு நேரத்தொழுகையில் ஈடுபட்டிருந்த 103 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

ஆகஸ்ட் 11ஆம் நாள் இரவு 9.15 மணிக்கு ஏறாவூரிலுள்ள பல கிராமங்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். அச்சம்பவத்தில் ஒரே இரவில் 121 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இவ்விதம் கொல்லப்பட்டவர்களின் 10 ஆண்டு நினைவு தினத்தை அனுஷ்டிக்குமுகமாக இரங்கல் துஆப் பிரார்த்தனையும் வேறு பல சமூக ஒற்றுமை நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

ஏறாவூர் அல்மாஸ் கலை கலாசாரப் பேரவை இந்நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

இதே வேளை 1990ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து காணாமல் போன 159 பேரின் கதி குறித்து இதுவரை எதுவித தகவலுமில்லை.

## சம்பள நிலுவைகள் கிடைக்கவில்லை?

(கண்டி நிருபர்)

அரசியல் பழி வாங்கலுக்கு உட்படுத்தப்பட்ட கண்டி மாவட்ட தமிழ்பேசும் ஆசிரியர்கள் பழிவாங்கல் தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் சிபாரசுக்கமைய பதவி உயர்வும் வருடாந்த சம்பள உயர்ச்சியும் வழங்கப்பட்டபோதிலும், இவை தொடர்பாக கிடைக்க வேண்டிய நிவாரணம் இன்னும் கிட்டவில்லை என புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்த பதவி உயர்வு சம்பள உயர்ச்சியும் பெற்ற ஆசிரியர்கள் பலரும் கல்விச் சேவைகள் ஆணைக் குழுவில் இருந்து கடிதங்களைப் பெற்ற போதிலும் இவை தொடர்பாக கிடைக்க வேண்டிய நிலுவைகள் வழங்குவதில் இழுத்தடிப்பு நடைபெறுகின்றதாம்.

மாகாண கல்வித் திணைக்களத்திற்கு உத்தேச பணிப்புரைக் கடிதங்கள் வந்து சேர்ந்த போதிலும் வலயக் கல்வித் திணைக்கள அலுவலகங்களுக்கு இதன் பிரதி இன்னும் கிடைக்கவில்லை எனக் கூறி இந்த இழுத்தடிப்பு நடைபெறுவதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் முறைப்பாடு தெரிவித்தனர்.

## கண்டியில் ஆர்ப்பாட்டங்கள்!

(கண்டி நிருபர்)

நாடாளுமன்றத் தேர்தல் அண்மித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் கண்டி நகரில் பல்வேறு அமைப்புக்களின் உறுப்பினர்கள் சம்பள அதிகரிப்பு குறித்தும் கொடுப்பனவுகள், மற்றும் தொழில் துறை வழங்கப்பட வேண்டுமெனவும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

ஓய்வூதியர் சங்கங்களின் உறுப்பினர்கள், வேலையற்ற பட்டதாரிகள், பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்கள் ஆகியோரே இந்த ஆர்ப்பாட்டங்களை நடாத்தினர். ஒன்றன் பின் ஒன்றாக ஒவ்வொருநாளும் இடம்பெற்ற இந்த சுலோக அட்டைகள் தாங்கிய ஆர்ப்பாட்டங்கள் குறித்து அதனை நோட்டமிட்ட பொதுமக்கள் 'தேர்தல் காலம் நெருங்கும் போது இப்படியான குரல்கள் ஒலிப்பது சகஜமே' எனக் கூறி சம்பவங்கள் குறித்து கவலைப் படவும் தவறவில்லை.

இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் கடந்த அரசாங்க காலப்பகுதியில் கண்டி மாவட்ட அரசாங்க அதிபராக இருந்து ஓய்வுபெற்ற திரு எம். செனவிரத்ன பண்டாவும் ஓய்வூதியம் பெறும் முன்னாள் தெல்தெனிய எம்.பி.திரு ராஜகுலத்திலக்க உட்பட வேறு பல அதிகாரிகளும் தமது ஓய்வூதியம் அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் குரல் எழுப்பினர்.

## வவுனியாவில் புலிகளின் ஊடுருவல்

வவுனியாவில் மிகக் கடுமையான பாதுகாப்புக் கெடுபிடிகள், பாஸ் நடைமுறை என்பன பொது மக்களை மிகவும் வாட்டி வதைக்கின்றன.

நாளாந்தம் பாஸ் பெறுவதற்காக பத்து வயதிற்கு மேற்பட்டோர் பாதுகாப்பு அலுவலகங்களை நோக்கிப் படையெடுக்க வேண்டியுள்ளது.

அகதிகள், பாடசாலை மாணவர்கள் அதிகாரிகள் எல்லோரும் எந்தவித வேறுபாடுமின்றிப் பாஸ் வழங்கும் அலுவலகங்களை நோக்கி அலைகிறார்கள்.

கைக் குழந்தைகளுடன், கொழுத்தும் வெயிலில், வெறும் கட்டாந்தரையில் நீண்ட வரிசையில் பொதுமக்கள் தவம் கிடக்கிறார்கள்.

வவுனியாவில் ஒருவர் பாஸ் வைத்திருக்காவிட்டால் உயிருடன் நடமாடமுடியாத அவஸ்தை.

இவ்வளவு கெடுபிடிகள் பொதுமக்கள் மீது இருந்தென்ன? ஏனைய பகுதிகளைப் போன்று சாதாரணமாகப் புலிகளும் நடமாடுகிறார்கள் என்று பொதுமக்கள் கூறுகிறார்கள்.

பாஸ் நடைமுறைக் கெடுபிடிகளும் நெருக்கடிகளும் பொதுமக்களை மாத்திரமே அவஸ்தைக்குள்ளாக்க உதவும்.

பாதுகாப்பு மட்டத்திலுள்ள ஓட்டைகளும், இலஞ்ச ஊழல் என்பனவற்றால் பலர் திடீர் பணக்காரர்களாகி விட்டார்கள்.

சமீப நாட்களாக வவுனியாவில் பல தாக்குதல்கள் சம்பவங்கள் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## அமைதிக்கான அறைகூவல் வெறும் வார்த்தை ஜாலமே
## பிரதி அமைச்சர்

"வளமிக்க ஒரு நாட்டின் அரும் பெரும் சொத்துக்களான இளம் தலைமுறையினர் யுத்தத்தினால் அழிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதியும் செல்லுமிடமெல்லாம் சமாதானத்தைப் பற்றிப் பேசுகிறார். எந்நேரமும் சமாதானக் கதவுகள் திறந்தே இருப்பதாகக் கூறுகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவரும் எந்தவொரு கூட்டத்துக்கும் சென்றாலும் சமாதானத்தை பற்றியே எடுத்துச் சொல்லுகிறார். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் 'சமாதானக் கதவுகள் திறந்தே இருக்கின்றன' என்கிறார்.

பௌத்த பிக்குகளும், இந்து மதகுருமாரும் வாய் திறக்கும் போதெல்லாம் அமைதிக்கு வழி பற்றியே பேசி வருகின்றனர்.

இப்பொழுது பாராளுமன்றம் தொடக்கம் பட்டிதொட்டியெல்லாம் சமாதானத்தைப் பற்றிய பேச்சுத்தான் அடிபடுகிறது.

ஆனால் இனப்பிரச்சனைதான் தீர்ந்த பாடில்லை.

இதய சுத்தியுடன் எவரும் இனப்பிரச்சனைத் தீர்வு பற்றி சிந்திக்குமளவில்லை, என்பதையே தொடர்ந்து செல்லும் யுத்த அழிவுகள் நிரூபிக்கின்றன.

இனி இழப்பதற்கு இந்த மக்களிடம் எதுவுமே இல்லை. யுத்தச் செலவு நாளுக்கு நாள் கோடிக் கணக்கில் அதிகரித்துச் செல்கின்றது. இதனால் அத்தியாவசியப் பொருட்களின் விலையும் அதிகரித்த வண்ணமே உள்ளது. இதய சுத்தியுடன் எவரும் சமாதானத்தைப் பற்றிப் பேச முன்வருவார்களேயானால் இனப்பிரச்சனை இலகுவாகத் தீரும்!" என்றார். கடந்த வாரம் ஓட்டமாவடியில் இடம் பெற்ற சமூர்த்தி வங்கிச் சங்கத் திறப்பு விழாவின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு உரையாற்றினார்.

## சம்பந்தர் போட்டியிடமாட்டார்?

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஆயத்தங்கள் திருகோணமலை மாவட்டத்தில் இப்போதே ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் தனது கிளைகளைப் புனரமைக்கத் தொடங்கியுள்ளது. பொது ஜன முன்னணியுடன் இணைந்து நிற்பதா தனித்து நிற்பதா என்ற விவகாரம் இன்று வரை முடிவாகாதிருக்கின்ற போதிலும் மறைமுகமாக அது தனது பிரசாரங்களை முடுக்கிவிடத் தொடங்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவில் தமிழர்களும் களத்தில் குதிக்கவிருக்கிறார்கள். ஐ.தே.க. சார்பில் பலதடவை போட்டியிட்டுத் தோல்வி கண்ட தமிழர் ஒருவரின் மகனான சட்டத்தரணியொருவர் முதன்மை வேட்பாளராக வர முயற்சி மேற்கொண்டு வருகிறார்.

மறைந்த பா.உ. ஆ.தங்கத்துரையின் அனுதாப வாக்குகளை நம்பி அவரது சகோதரரும் சுயேச்சையாகக் களத்தில் குதிப்பதற்கான ஆயத்தங்களைச் செய்து வருகிறார். மூதூரிலிருந்தும் ஒரு சுயேட்சைக் குழு போட்டியிடவிருப்பதாகத் தெரிகிறது.

புளொட், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். என்பவை இதுவரை தங்கள் நிலையைப் பகிரங்கப் படுத்தவில்லை. ஆனால் ஈ.பி.டி.பி. தனது வேட்பாளர்களை நிறுத்தும் என எதிர்பார்க்கப் படுகிறது.

தவிகூட்டணியைப் பொறுத்த மட்டில் தற்போதைய பா.உ. இரா.சம்பந்தன் இம் முறை தேர்தலில் நிற்கமாட்டார் எனத் தெரியவருகிறது. அண்மைக்கால வேலை வாய்ப்பு விடயத்தில் இவரது பெயர் மோசமாகப் பாதிக்கப்பட்டதாலேயே களத்தில் இறங்க மாட்டார் எனத் தெரிய வருகிறது. எனினும் தேசியப் பட்டியல் மூலம் இவர் தெரிவாகலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாவிட்டாலும் கூட கிளைச் செயலாளர் கே.சிறிஸ்கந்தராசா தலைமையில் தவிகூட்டணிப் பட்டியல் தயாராகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் பொது ஜன முன்னணியில் தனித்துப் போட்டியிட்டால் தற்போதைய பா.உ. ஜனாப் ரஜீப் பொது ஜன முன்னணிப் பட்டியலிலேயே போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நிதிப் பொறுப்பாளர் பலி!

எதிர்பாராத விதமாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் திடீரென நுழைந்த படையினர் பதுங்கியிருந்து சுட்டதில் புலிகளின் உள்ளூர் நிதிப் பொறுப்பாளர் ஒருவர் பலியானார் எனத் தெரிகிறது.

மட்டக்களப்பு-வாகனேரியில் கடந்த வாரம் இச்சம்பவம் நடந்தது.

புலி உறுப்பினர் மோட்டார் சைக்கிளில் வந்தபோது பதுங்கியிருந்து அவதானித்த படையினர் சரமாரியாகச் சுட்டனர். புலி உறுப்பினர் அவ்விடத்திலேயே பலியானார். அவரது மோட்டார் சைக்கிளும் தாக்குதலால் நொருங்கியது.

புலி உறுப்பினரின் சடலத்தை அவ்விடத்திலேயே கைவிட்டு விட்டுச் சடுதியாக படையினர் முகாமுக்குத் திரும்பினர். தமது உறுப்பினரின் சடலத்தை எடுத்துச் சென்று புலிகள் அஞ்சலிக்காக வைத்திருந்தனர்.

கொல்லப்பட்ட புலி உறுப்பினர் அப்பகுதியின் நிதிப் பொறுப்பாளர் ராசு என்று அறியப்படுகிறது.

இதனிடையே மட்டக்களப்பு-அம்பாறை எல்லைப்பகுதியான பெரிய புல்லுமலையில் இடம்பெற்ற சம்பவமொன்றின் போது புலிகளின் எல்லைப் படை வீரர்கள் இருவர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் புலிகளால் கண்டெடுக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டபின் அடக்கம் செய்யப்பட்டன.

## தடுத்துவைக்கப்பட்ட மாணவன் பரீட்சை எழுத அனுமதி

(காரைதீவு நிருபர்)

இங்கினியாகல இராணுவ முகாமில் நாசகாரதடுப்புப் பிரிவினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள காரைதீவு மாணவன் க.பொ.த(உ.த) பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளான்.

காரைதீவு காளிகோவிலடியைச் சேர்ந்த பேரின்பராஜா சுதாகரன் என்னும் மாணவனே இவ்விதம் அனுமதிக்கப்பட்டவராவார்.

இவரும் மேலும் இருவரும் கடந்தவாரம் கல்முனையில் வைத்து அம்பாறை நாசகாரப் பாதுகாப்புப் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். இம் மூவரில் இவர் காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரியில் உயர்தர கலைப்பிரிவில் பயின்றவர் சுதாகரன். இவருக்கான பரீட்சைக்குரிய அனுமதி அட்டையும் கிடைக்கப் பெற்றுள்ளது.

## K.N.S.SHOPPING CENTRE & TAKE AWAY - SWISS

மளிகைப் பொருட்கள், ஒறிஜினல் வீடியோ, ஓடியோ.
கசற்றுக்கள் 'COMPACT' டிஷ்குகள் வீடியோ C.Dகள், 22 கரட்டில் தங்க நகைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள். இலங்கை, இந்திய, சுவிஸ் உணவு வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் இலகுவாக நீங்கள் பெற்றுக் கொள்ள-

**K.N.S.SHOPPING CENTRE**

K.N.SUKUMARAN
ANKER - STR - 16
8004 - Zurich _ Switzerland
T.P- 01-2427111 - FAX.01-2427144

வாரத்தில் 7 நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 12 மணிவரை (ஞாயிறு உட்பட) கடை திறந்திருக்கும்.



## இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்


தபால் மூலம் தையற்கலை பயில இதோ ஓர் அரிய சந்தர்ப்பம். டிப்ளோமா ஆசிரியரால் தபால் மூலம் தையற்கலை பயிற்றுவிக்கப் படும். பயிற்சியின் முடிவில் மாபெரும் டிப்ளோமா சான்றிதழும் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 3.50 முத்திரை ஒட்டிய நீண்ட கடித உறையுடன் இன்றே தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Director: Mrs. Sithy Kamila Rafi, No: 05, Upaly Place, Vihara Road, Matale.



உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்




- காயசசல்
- தலைச்சுற்று
- ஜலதோஷம்
- மூக்கடைப்பு
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை
- தலைவலி
- தலைப்பாரம்
- இருமல்
- பல்வலி

ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்.

**SINGHA HOLDINGS (PVT) LTD**
14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984



நீங்கள் நீரிழிவு நோயால் அவதிப்படுபவரா? அல்லது உடம்பில் அதிக கொலஸ்ரால் இருப்பதால் கவலைப்படு கிறீர்களா? கவலை வேண்டாம்!

ஒவ்வொரு மருந்தும் பல மருத் துவ ஆராய்ச்சிகளிற்கும் வைத்திய பரிசோதனைகளிற்கும் உட்படுத்தப் பட்டு, அது பூரண திருப்தியளிக்கும் பட்சத்திலேயே பாவனைக்கு உகந்தது என அங்கீககரிக்கப்படுகிறது. Baraka கருஞ்சீரக எண்ணெயும் மேலுள்ள படிகளைத் தாண்டியதே.


நவீன மருத்துவ ஆராய்ச்சிகள் மூலம் கருஞ்சீர கமானது ஒமேகா –3, கொழுப்பமிலம், புரதம், கனியுப்பு, விற்றமின், போன்றவற்றைக் கொண்டிருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளதோடு அது நாளாந்த பாவனைக்கு உகந்தது எனவும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. மேலும் நோயெதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும்எனவும்நிரூபணமாகியுள்ளது.

புரதம் ✓
விற்றமின்கள் ✓
கனியுப்புகள் ✓

Baraka பாவனைக்கு முன்னும் பின்னும் கொலஸ்ரோலின் அளவு

Baraka பாவனைக்கு முன்னும் பினனும் குருதிச் சீனியின் அளவு.






ஆயுர் வேத திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது

நாடு முழுவதிலும உள்ள எல்லா பாமசிகளிலும் கிடைக்கிறது.

*Baraka* பாவித்து உங்களது வாழ்வை சுகமாக கழியுங்கள்.

- உணவு நிகரியாகவோ
- நோய் எதிர்ப்புசக்தியை அதிகரிக்கவோ
- குருதிச் சீனியை கட்டுப் படுத்தவோ
- கொலஸ்ரோலின் அளவைக்கட்டுப்படுத்தவோ பாவிக்கலாம்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேசிய மருத்துவப்பிரிவினால் (IIM) நடாத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளில் இருந்து கருஞ்சீரத எண்ணெய்யை தொடர்ந்து பாவிப்பதன மூலம் இரத்தத்திலுள்ள சீனியின் அளவையும், கொலஸ்ரோலின் அளவையும் கட்டுப்படுத்த முடியும் என நிரூபிக்கப்பட்டு ள்ளது.

EXPO LANKA

இன்னும் Baraka ஆனது சுகாதார, சுதேசிய வைத்திய அமைச்சின் ஆயுள்வேத மருத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு பல வைத்தியர் களினாலும் சிபாரிசு செய்யப்பட்டு வருகிறது.

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி,*
Customer Care, Baraka,No 11A, Mile Post Avenue, Colombo - 03



## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

**SHAKTHY SARAVANA,**
48/12, SRI WIMALASARA ROAD, KALUBOWILA, DEHIWALA.
T.P.: 723646. நேரில்-காலை 8மணி முதல் மாலை 2 மணிவரை
வியாழன் விடுமுறை



## மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P. ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

### SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடி மனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

### வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஓடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

### மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

**கொழும்பில் ஆகஸ்ட் 22 முதல் 27 திகதி வரை**

(கொழும்பு விலாசம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street,No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல்: 072-609388

**கல்முனையில் ஆகஸ்ட் 05. 06ம் திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் ஆகஸ்ட் 13, 14 திகதிகளில் சந்திக்கலாம்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21405, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
**NO.51/5. Koolavady Road,**
**Batticaloa. SRI LANKA.**



## தொலைக் கல்விச் சேவை

தபால் மூலம் ஆங்கிலத்தில் சிறந்த அறிவு பெற ஓர் அரிய வாய்ப்பு!
புதிய நூற்றாண்டின் சவால்களுக்குத் தைரியத்துடன் முகம் கொடுக்க வாரீர்!!

முன்னைநாள் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரேமதாஸ உடகம, பிரிட்டிஷ் கவுன்ஸில் அத்தியட்சகர் பிரெட் ஹன்லன், மற்றும் வெளிநாட்டில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட போதனா முறை.

### ஆரம்ப ஆங்கில டிப்ளோமா

ஆறு மாதப் பயிற்சி-ஆங்கிலத்தில் அறிவு குறைந்தோர்க்கானது.

### ஆங்கிலத்தில் டிப்ளோமா

ஆறுமாதப் பயிற்சி-க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தி பெற்றோர்க்கானது.

### ஆங்கில உயர் டிப்ளோமா

எட்டு மாதப் பயிற்சி-க.பொ.த.(சா/த) பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றோர்க்கானது
இலக்கணம்-இலக்கியம்-மொழிபெயர்ப்பு, கட்டுரை ஆகியன உள்ளடக்கிய பாடநெறி.

### கருத்தரங்குகள்

இறுதிப் பரீட்சைக்கு மாணவரைத் தயார் படுத்துமுகமாக ஒழுங்கு செய்யப்படும்.

### சான்றிதழ்கள்

சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்டவை.

மேலதிக விபரங்கட்கு:
Director
**Distant Education Service**
22D. Station Lane. Nugegoda. Tel: 856769



## தபால் மூலம் விஞ்ஞானம்

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்
Year - 9, 10, 11 ~ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
Year - 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: குமார் சிவப்பிரகாசம்

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்
**P.T.C** 14, Covington Road, Batticaloa.



## அஸ்மா நோய்க்கு வைத்தியம்



* தொய்வு * இழுப்பு
* இளைப்பு * மாய்ச்சல்
* மூச்சுத்தட்டல் * மண்டைச்சளி
* நெஞ்சுச்சளி * தடிமன்
* இருமல் * கண்கடி
* மூக்கடைப்பு * பீனிசம
* தலைவலி * தும்மல்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல்,குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்

டொக்டர்
சுறாஜ் சோமசுந்தரம்
அஸ்மா சிகிச்சை நிபுணர்
Ph.D$_E$(Ind); M.B.B.S$_{CH}$ (Cey)
Govt. Reg. No : A 1553 (1970)
25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை
மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர்-காலிவீதி)

தொலைபேசி இல: 074-201582

இவ்விடத்தில் பழைய நோயாளர்களும் முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4மணி முதல் 7மணி வரையும் செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலை 9மணி முதல் 12மணி வரையும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. புதிதாக வரும் நோயாளர்கள் மேற் கூறிய நாட்களிலும், நேரங்களிலும் தொலைபேசி மூலம்(074-201582) தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன்அனுமதி பெற்றே (பதிவு செய்து) வரவேண்டும்.







## மலையாள மாந்திரிகத்தின் வெற்றிகள்



நேற்றல்ல இன்றல்ல தொண்டு தொட்டு 33 வருடமாக உலக மாந்திரிக சக்கரவர்த்தியாக விளங்குவது டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

மாந்திரிக வேலைகளில் நன்மைக்கு இடமுண்டு தீமைக்கு இடமில்லை. இப்படி செயல் புரிவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறையில் வருமான வரி செலுத்துவது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரீக துறைக்கு வழிகாட்டியாக வரையறுக்கப்பட்ட நிறுவனமாக P. K. SAAMY ASSOCIATE (PVT) LTDஐ உருவாக்கியது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாடிக்கையாளரின் நலனை கருதி இரகசியத்தை பாதுகாப்பது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாழையடி வாழையாக மக்களுக்கு உண்மை சேவை புரிவது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

தீரும் பிரச்சினைகளுக்கு திட்ட வட்ட திகதி குறித்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசதியற்றோருக்கு தான தர்மம், இலவச சேவை செய்து கொடுப்பது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசியத்தால் திருமணம் செய்து கொள்பவருக்கும் 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மாத்திரமே! கட்டுப்பாட்டுடன் காதலன் வசியம் செய்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வெளிநாட்டவருக்கு விஷேசமாக அந்தந்த அடருக்கு உரியவரிடம் பார்சல் போய் சென்றடைய உலகலாவிய ரீதியில் பிரதிநிதித்துவம் அமைத்து வைத்திருப்பவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மதசார்பற்ற சேவை செய்பவர் யார் என்றால் அவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

செய்துகொள்ளும் மாந்திரிக வேலைகளுக்கு Gurantee Card கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

அறவிடும் பணத்திற்கு முத்திரையுடன் ரசீது வழங்குபவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே! 33 மாந்திரிகர் வேலை செய்வதும் என்றால் அது இங்கு தான்.

இனி என்ன உங்கள் பிரச்சினை? மாற்றான் மனைவி தொல்லையா, மனதுக்கு ஏற்றவரை திருமணம் செய்து கொள்ள வேண்டுமா, திருமண வயது ஏறிக் கொண்டே போகிறதா, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரிந்தவரை அழைத்து எடுக்க, விடுபட்ட திருமணம் நிறைவேற, மனதார நேசித்தவரை மற்றவர் விரும்பாமல் இருக்க, சூனியம் விடுபட, கல்வி சிறப்படைய, வியாபார விருத்தியடைய, தீராத நோய் தீர, பிரயாண தடை நீங்க, அன்றன்றாடு மனநிம்மதியுடன் மற்றவர் மனப்பொறாமை தவிர்த்து வாழ , தீயோர் நட்பு கிட்டாமல் இருக்க, மாங்கல்ய மன நிறைவு பெற உங்கள் குறைகளுக்கு முன்னறிவித்தலுடன் நேரில் வருவது சாலச்சிறந்தது. வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை தேவைகளுக்கு டாக்டர் பீ. கே. சாமி அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி இலக்கங்கள்: 466271, 466571,466620.466820 431137, 470615, 342463, 344831, இவை மட்டுமல்ல அருள் ஞானத்துடன் கூறப்படும் தெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடக்கப்போவது, திருமணம் எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிர்ஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். திகதி மாதம் குறித்து அனுப்பவும். கைரேகை என்றால் திகதி தேவையில்லை. இன்னும் சிறுவர்களுக்கு பிறந்த நாள் பரிசாக தங்க வலம்புரி சங்கு மோதிரத்தை நீங்கள் ஒரு குழந்தைக்கு அணிவிப்பது மூலம் இதன் நன்மையாக சிறுவர்களின் எதிர்காலம் சிறப்படைய நீங்கள் ஒரு தூண்டுகோள் ஆகலாம். அருள் ஞானம் பெற்ற தங்க வலம்புரி சங்கு மோதிரம் எம்மிடம் உண்டு.

கருணாகரபூசனம், உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
**Prof.Dr. P. K. Samy (J.D.G.A.N) JP**

162, Kotahena Street, Mayfield Road, Colombo 13.
Fax: 0094-1-342464 E-Mail.: drpksamy@sltnet.lk
Web site: www.imexpolanka.com/drpksami
Web site: www.lgo.slt.lk/swami

வெளிநாட்டவர்களுக்கான விஷேட சலுகை:
வெளிநாட்டவர்கள் எமது கட்டணத்தை கம்பியூட்டர் மூலம் செலுத்தி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.
வழமைபோல் நவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# திம்புக் கோரிக்கை இப்போது பொருந்துமா?

திம்புக் கோட்பாடுகள் பற்றி இப்போது பல தடவைகள் திரும்பத் திரும்பப் பேசப்பட்டு வருகிறது. அண்மையில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் 'டெக்கன் ஹெரலட்' சஞ்சிகைக்கு வழங்கியிருந்த பேட்டியிலும் திம்புக் கோட்பாடுகளை அங்கீகரிக்காதவரை அரசுடன் பேசும் வாய்ப்பு இல்லையெனத் தெரிவித்திருந்தார். இதேசமயம் மறைந்த, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலமும் திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்வு காண வேண்டுமென்றே தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

இந்தியாவுக்கு அருகே அமைந்த சிறிய நாடான பூட்டானின் தலைநகரான திம்புவில் 1985ம் ஆண்டு ஜூலை மாதம் 8ம் திகதி இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் இலங்கையின் ஜே.ஆர். அரசாங்கத்துக்கும் தமிழ் விடுதலை இயக்கங்கள், தமிழர்விடுதலைக் கூட்டணி ஆகியவை அடங்கலான தமிழ்த் தரப்பு பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைதான் திம்புப் பேச்சுவார்த்தைகள் என்று அழைக்கப்படுகின்றன.

இந்தப் பேச்சுவார்த்தைகளின்போது தமிழ்த் தரப்பினரால் இடப்பட்ட நான்கு அடிப்படைக் கோட்பாடுகளே திம்புக் கோட்பாடுகள் என வழங்கப்படுகின்றன.

இப் பேச்சுவார்த்தைகளின் முக்கியத்துவம் யாதெனில் இதன்போது சகல விடுதலை இயக்கங்களும் ஒருமித்த வகையில் தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல் தீர்வுக்கான அடிப்படைக்கொள்கைகளை முன்வைத்தமைதான். இதில் மிதவாதக் கட்சியான தமிழர் விடுதலைக்கூட்டணியும் இக் கொள்கைகளுக்கு உடன்பட்டே விடுதலை இயக்கங்களுடன் ஒத்தவாறு செயற்பட்டது. உண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணி இதில் பங்குபற்றினாலும் இப் பேச்சுவார்த்தையானது ஆயுதப் போராளிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமான பேச்சுவார்த்தையாகவே அமைந்திருந்தது. அதில் முக்கியமாக இப் பேச்சுவார்த்தைகளின் முன்நிபந்தனையாக யுத்த நிறுத்தம் அமைந்திருந்தது. அதை அமுலாக்க வேண்டிய பொறுப்பில் ஒருபுறம் விடுதலை இயக்கங்களும் மறுபுறம் அரசாங்கமுமே இருந்தன.

இருந்தும் கூட்டணியும் பங்குபற்றிய இப் பேச்சுவார்த்தையில் ஐந்து பிரதான விடுதலை இயக்கங்கள் கலந்து கொண்டன. தமிழீழ விடுதலைப்புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எப்., டெலோ, ஈரோஸ், புளொட் ஆகிய ஆயுத இயக்கங்களே அவை. இங்கு நோக்கக் கூடியதாக இருந்த மற்றொரு விடயம் என்னவென்றால் இவ் விடுதலை இயக்கங்களுள், புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எப்., டெலோ, ஈரோஸ், ஆகிய நான்கு இயக்கங்களும் அச்சமயத்தில் ஈழ தேசிய விடுதலை முன்னணி (ஈ.என்.எல்.எப்.) என்னும் கூட்டமைப்பாக இயங்கி வந்தன.

1984 ஏப்ரலில் விடுதலை இயக்கங்களுக்கிடையே அமைக்கப்பட்ட ஐக்கிய முன்னணியே ஈ.என்.எல்.எப். அதில் முதலில் ஈ.பி.ஆர்.எல்.எப்., டெலோ, ஈரோஸ் ஆகிய மூன்று இயக்கங்கள் இணைந்திருந்தன. 1985 ஏப்ரலில் தமிழீழ விடுதலைப் புலிகளும் அதில் இணைந்து கொண்டனர். திம்புப் பேச்சுவார்த்தையிலும் இவை ஐக்கிய முன்னணியாகவே முகம் கொடுத்தன.

இத் திம்பு பேச்சுவார்த்தைக்கான இராஜதந்திர முடிவுகளை வகுத்தும் இவ் ஐக்கிய முன்னணியைச் சார்ந்த விடுதலை இயக்கங்களாகவே இருந்தன. இப்பேச்சு வார்த்தையில் தமிழர் விடுலைக் கூட்டணி சார்பில் அதன் தலைவர் அ.அமிர்தலிங்கம், எம்.சிவசிதம்பரம், ஆர்.சம்பந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆனால் விடுதலை இயக்கங்கள் தமது தலைவர்களை நேரடியாக அனுப்புவதில்லையென முடிவெடுத்திருந்தன.

அதேவேளை திம்புப் பேச்சுவார்த்தைக்கு இலங்கை அரசாங்கம் சார்பில் ஒரு அமைச்சர் கூட பிரதிநிதம் செய்ய வரவில்லை. மாறாக ஜனாதிபதி ஜே.ஆரின் சகோதரர் எச்.டபிள்யு.ஜெயவர்த்தனாவும் சில இராஜதந்திரிகளும், சட்ட நிபுணர்களுமே வருகை தந்திருந்தனர்.

திம்புப் பேச்சுவார்த்தையில் புலிகள் சார்பில் முதலாவது சுற்றில் திலகர், சிவகுமாரன் ஆகியோரும், இரண்டாவது சுற்றில் யோகரட்ணம் எனும் யோகியும் பங்குபற்றினர். டெலோ சார்பில் முதலாவது சுற்றில் சார்ள்ஸ், பொபி ஆயியோரும் இரண்டாவது சுற்றில் சத்தியேந்திராவும் பங்கு பற்றினர். புளொட் சார்பில் சித்தார்தனும், வாசுதேவாவும் பங்குபற்றினர். ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பில் வரதராஜப்பெருமாளும், கேதீஸ்வரனும் பங்குபற்றினர். (ஆனால் இப்போது இதை நோக்கும்போது உடனடியாகப் புலப்படும் எமது துரதிஷ்டம் என்னவென்றால் அன்று இவ்வளவு சக்திமிக்கதாக நடத்திய அப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றியவர்களில் பலர் இப்போது அந்த இயக்கங்களில் இல்லை, சிலர் உயிருடனேயே இல்லை.'

திம்புப் பேச்சுவார்த்தையின்போதும் முதலில் தமிழ்த் தரப்பினால் முன்வைக்கப்பட்ட கருத்து என்னவென்றால் இலங்கை அரசாங்கமே எம்மால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும் என்பதே.

இதன்மூலம் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்குரிய ஆலோசனைகளை வகுக்கும் பொறுப்பை ஏற்க மறுத்து அதனைத் தரவேண்டிய பொறுப்பை இலங்கை அரசாங்கத்தின் மீது சுமத்திவிட்டு, அவ்வாறு இலங்கை அரசு முன்வைக்கும் ஆலோசனைகளை மதிப்பீடு செய்யும் நிலையில் இருப்பதையே தமிழ்த் தரப்பினர் விரும்பினர். (இந்த நிலைப்பாட்டையே தற்போதும் விடுதலைப் புலிகள் வகித்து வருகிறார்கள்.)

ஆயினும் இலங்கை அரசாங்கம் சார்பில் முன்வைக்கப்பட்ட தீர்வு ஆலோசனைகள் திரும்பத்திரும்ப முன்னரே மிதவாதத் தமிழ்க் கட்சிகளாலேயே நிராகரிக்கப்பட்ட ஆலோசனைகளாக, மாவட்ட சபைகளை மையமாகக் கொண்ட தீர்வுகளாக இருந்தன.

இதனால் தமிழ்த் தரப்பினர் தமது நிலைப்பாட்டிலிருந்து சற்று மாறி, பேச்சுவார்த்தை ஒன்றுக்கு ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய அடிப்படைச் சூத்திரமொன்றை இலங்கை அரசாங்கத்துக்கு முன்வைக்கத் தீர்மானித்தனர். இச் சூத்திரத்தின் வாயிலாகவே இனப் பிரச்சனைக்கான தீர்வு ஒன்று காணப்பட முடியுமென அவர்கள் வலியுறுத்தினர்.

அவ்வாறு முன்வைக்கப்பட்டதுதான் திம்புக் கோட்பாடுகள் என்று பலரும் சுட்டிக் காட்டுகின்ற நான்கு அடிப்படைக் கோட்பாடுகள்.

அந் நான்கு கோட்பாடுகளாவன:

1. இலங்கை வாழ் தமிழ் மக்களை ஒரு தனித் தேசிய இனமென அங்கீகரித்தல்.

2. இனங்காணப்பட்ட தமிழ்த் தாயகப் பிரதேசத்தை அங்கீகரித்து அதன் பிரதேச (ஒருமைப்பாட்டை) முழுமையை உத்தரவாதப்படுத்தல்.

3. இவற்றினடிப்படையில் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணயம் உரிமையை அங்கீகரித்தல்.

4. இலங்கைத் தீவைத் தமது நாடகக் கொண்ட சகல தமிழருக்கும் முழுமையான பிரஜா உரிமை மற்றும் ஏனைய அடிப்படை ஜனநாயக உரிமைகளை அங்கீகரித்தல்.

இந் நான்கு அடிப்படைக் கோட்பாடுகளையும் முன்வைத்த தமிழ்த்தரப்பினர் புற உலகாலும் குறிப்பாக இந்தியாவாலும் பிடிவாதக் காரராகவும் நியாயமற்றவர்களாகவும் பார்க்கப் படாதிருக்கும் வகையில் கூட்டறிக்கை ஒன்றை விடுத்திருந்தனர். அதில் தமது போராட்டமானது சுதந்திர தமிழ் அரசுக்கானதாகவே இருந்த போதிலும், வெவ்வேறு நாடுகளில் இக் கொள்கைகளை உத்தரவாதப் படுத்தக் கூடிய வெவ்வேறு ஆட்சி அமைப்புக்கள் உருவாக்கப் பட்டிருப்பதனால், தாம் முன்வைத்த இக் கொள்கைகளின் அடிப்படையிலமைந்த இலங்கை அரசின் எந்தத் தீர்வுத் திட்டத்தையும் தாம் கருத்திலெடுக்கத் தயார் என அறிவித்திருந்தார்கள்.

ஆனால் இப் பேச்சுவார்த்தை இடைநிறுத்தப் பட்டது. பேச்சுவார்த்தைகளைப் பிற்போடும் படி கூறி சிங்கள பௌத்த சக்திகள் தீர்மான அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

பயங்கரவாதம் முற்றாகத் துடைத்தெறியப்பட்டு, சிங்களவர்கள் திருகோணமலையிலும் வவுனியாவிலுமுள்ள தங்கள் சொந்த வீடுகளில் குடியேறும்வரை பேச்சுவார்த்தைகளைப் பிற்போடும் படி அத்தீர்மான அறிக்கை கூறியது. அதில் அஸ்கிரிய மகாநாயக்க தேரர் பலிப்பனே சந்தானந்த, மாதிஹே பன்னாசிஹா, சோபித தேரோ, ஆகியோருடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா மற்றும் அனுரா பண்டாரநாயக்கா ஆகியோரும் எம்.ஈ.பி. தலைவர் தினேஷ் குணவர்த்தனவும் சேர்ந்து கூட்டாகக் கையொப்பமிட்டிருந்தனர்.

இதுதான் இந் நாட்டில் எந்தவொரு சிறு சந்தர்ப்பத்தில் கூட சமாதானத்துக்கு இடம் வைக்காது அடைத்து மூடிய இனவாதத்தின் சுபாவமாக அப்போதும் இருந்தது, இப்போதும் இருந்து வருகிறது.

இருந்தாலும் இந்த இனவாதிகளால் திசைத் திருப்பப்படாமல், பிற்போடப்பட்டிருந்த பேச்சுவார்த்தை மீண்டும் 1985 ஒகஸ்ட் 12ம் திகதி ஆரம்பித்தது. இதற்கு மூல காரணம் இப் பேச்சுவார்த்தைகளை ஒழுங்கு செய்த இந்தியாவின் வற்புறுத்தலே என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு மீளத் தொடங்கிய திம்புப் பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசின் பிரதிநிதிகள் தமிழ்த் தரப்பினர் முன்வைத்த கோட்பாடுகளுக்கான தமது அழுத்தம்




திம்புப்பேச்சுவார்த்தை சமயத்தில் 'தி ஐலண்ட்' வெளியிட்ட கார்ட்டூன்

திருத்தமான பதிலைக் கொண்டுவந்தனர். அதில் அவர்கள் கடைசிக் கோட்பாடான பிரஜா உரிமை விவகாரத்தைத் தவிர ஏனைய யாவற்றையும் முற்றாக நிராகரித்தனர். பிரஜா உரிமை விடயம் அமுலாக்கப்படுவதற்கான செயற்பாடுகள் நிகழ்ந்து வருவதாகத் தெரிவித்ததோடு அது பற்றிக் குரலெழுப்பும் உரித்து வடக்கு கிழக்கைச் சார்ந்த தமிழ்த் தரப்பினர்களுக்கு இல்லையென்ற வகையில் நடந்து கொண்டனர்.

இதே வேளை ஏனைய மூன்று அடிப்படைக் கோட்பாடுகளையிட்டு இலங்கை அரசாங்கம் தெரிவித்த கருத்து இவ்வாறு இருந்தது.

"முதல் மூன்று கோட்பாடுகளையும் அவற்றால் வெளிப்படுத்தப்படும் சட்டரீதியான அர்த்தத்தில் நோக்கும் போது அவை அரசாங்கத்தால் முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாதவை. இலங்கையின் இறைமையையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் மறுதலிப்பவை, ஒன்றுபட்ட இலங்கைக்கு ஆபத்தானவை, அத்துடன் இந்நாட்டிலுள்ள பல்வேறு சமூகங்கள், இனங்கள், மதங்களின் நலன்களுக்கு எதிரானவை என்ற காரணத்தால் அவை நிராகரிக்கப் படவேண்டியவை!" என்று கூறினர்.

அத்துடன் நின்றுவிடாது மேலும் ஒரு படிமேலே சென்ற இலங்கையின் அரசாங்கப் பிரதிநிதிகள் இப்பேச்சுவார்த்தைகளால் காணப்படக்கூடிய ஏதேனும் இணக்கங்களை அமுலாக்குவதாயின் சில நிபந்தனைகளை போராளிகள் ஏற்க வேண்டுமெனவும் தெரிவித்தனர்.

அவையாவன, அனைத்துவகை இராணுவ நடவடிக்கைகளையும் போராளிகள் கைவிட வேண்டுமென்றும் அனைத்து தமிழ்ப் போராளிக் குழுக்களும் தங்கள் ஆயுதங்களையும் கருவிகளையும் கையளிக்க வேண்டுமென்றும், அத்தோடு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இருக்கக்கூடிய சகல பயிற்சி முகாம்களையும் மூடிவிடவேண்டுமென்றும் தெரிவித்தனர்.

இதற்கு மிஞ்சியும் இப்பேச்சுவார்த்தை தொடருமென நம்பினால், எட்டாத் தொலைவிலுள்ள இவ்விரு தரப்பினருக்கும் ஒரு இணக்கப்பாடு வந்து தீர்வு ஒன்று உருவாகுமென யாரும் எதிர்பார்த்தால் அவர்கள் வடிகட்டிய முட்டாள்களாகத்தான் இருக்க முடியும். எதிர்பார்த்தது போலவே, யுத்த நிறுத்தம் மீறப்பட்டது. ஒகஸ்ட் 17ம் திகதி வவுனியாவில் ஒரு கண்ணிவெடி வெடித்ததைத் தொடர்ந்து விமானப்படையினர் மேற்கொண்ட பொதுமக்கள் மீதான தாக்குதலில் 15 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இலங்கை அரசாங்கம் யுத்தநிறுத்தத்தை மீறிய இச் சூழ்நிலையில் பேச்சுவார்த்தையில் பங்கேற்க முடியாதெனக்கூறி தமிழ்த் தரப்பினர் வெளிநடப்புச் செய்தனர்.

ஆனால் திம்புப் பேச்சுவார்த்தையின் பின்னர் தமிழ்த் தரப்பினரிடையிலான ஒற்றுமையும் குலைந்தது. திம்புப் பேச்சுவார்த்தைகள் முறிந்த கையோடு 1985 செப்டம்பர் 2ம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்த (வெளிநாடுகளுக்குச் சென்று அடைக்கலம்பெறாத) இரு தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய தலைவர்கள் போராளிக் குழுவொன்றால் கொல்லப்பட்டார்கள். ஒருவர் வி.தர்மலிங்கம் (தற்போதைய புளொட் இயக்கத் தலைவர் சித்தார்த்தனின் தந்தை). மற்றவர் எ. ஆலாலசுந்தரம் இக்கொலைகளை மேற்கொண்டவர்கள் டெலோ அமைப்பினரே என்பது பின்னர் தெரிய வந்தது.

இதே வேளை பின்னர் ஏற்பட்ட இயக்க மோதல்களில் டெலோவில் தொடங்கி புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய மற்றைய ஆயுத இயக்கங்கள் புலிகளால் தடை செய்யப்பட்டன. ஈரோஸ் கலைந்து ஒருபகுதியினர் புலிகளுடன் இணைந்து கொண்டனர். அமிர்தலிங்கம் யோகேஸ்வரனாகிய கூட்டணித் தலைவர்களும் பின்னர்

**-நரன்-**

புலிகளால் அழித் தொழிக்கப்பட்டனர். ஆக மொத்தத்தில் தமிழ்த் தரப்பினர் அனைவருமாக சேர்ந்து நின்று எடுத்த கடைசி நிலைப்பாடாக திம்பு கோட்பாடே அமைந்திருந்தது. எனவே அது ஒரு தாற்பரியம் மிக்க ஒன்றாகவும் விளங்கு கின்றது.

இருந்தும் அன்றைக்கு இவ் வம்சங்களை நிராகரித்த ஜே.ஆர்.அரசாங்கம் இவ் வம்சங்களையே தீர்வுக்குத் தடையானவையாகக் காட்டி வியாக்கியானப் படுத்தியது. அதன் வியாக்கியானமானது தமிழ்மக்களை தேசிய இனமாக அங்கீகரிப்பதும் அவர்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பதும் அவர்கள் பிரிந்து செல்வதை அங்கீகரிப்பதாகுமென்றும் தாயகக் கோட்பாட்டை அங்கீகரிப்பது இலங்கையின் இறைமையைக் கைவிடுவதாகவும் சித்தரித்தது.

திம்புக் கோட்பாடுகளின் நான்கு அடிப்படைகளென்பனவே ஒரு தீர்வு அல்ல. அவை தீர்வுக்கான அடிப்படை அம்சங்களே. அவ் வம்சங்களில், காணப்படும் ஒரு தீர்வு எவ்வகையில் பேணுகிறது என்பதையே நாம் பார்க்கவேண்டும்.

உதாரணமாக, தாயகக் கோட்பாடென்பது ஒரு தீர்வில் எப்படிப் பிரதிபலிக்கிறது என்றால், அதிகாரப்பரவலுக்கான அலகு எப்படி அமைகிறது, அங்கு அமையும் ஆட்சியதிகாரம் தனக்குட்பட்ட நிலப்பரப்பில் எவ்வகைக் கட்டுப்பாடுகளையும் அதிகாரங்களையும் கொண்டிருக்கின்றன என்பதனூடாகத்தான் நடைமுறையில் மதிப்பீடு செய்யப்படுகிறது. அதாவது அமுலாக்கத்தின் போது இக் கோட்பாடுகள் எந்தளவு தூரம் திருப்தி செய்யப் படுகின்றன என்றே எடைபோட முடியும். வெறுமனே கோட்பாடுகளை கோட்பாடுகளாக அல்லாமல் தீர்வின் செயற்பாட்டுத்தளத்தில் அமுலாகிறதா என்றே பார்க்க வேண்டும்.

எனவே திம்புக் கோட்பாடுகளை காலாவதியானவை என ஓரங்கட்ட முடியாது. தற்போதைய தீர்வுத் திட்டங்களிலும் அதன் பண்புகள் அலசி ஆராயப் படவேண்டியவை. அவை திருப்தியளிக்கக் கூடியவாறு அமையாவிட்டால் கூறியவாறு பயனளிக்கப் போவதில்லை.

இதேவேளை திம்புக் கேட்பாடுகள் குறித்து இரு விடயங்களில் மாறுபாடு எழுந்து உள்ளதாக விமர்சிக்கப் படுகிறது. ஒன்று மலையகத் தமிழ் மக்கள் பற்றியது. மற்றையது முஸ்லிம்கள் பற்றியது. மலையகத் தமிழர்களின் பிரச்சனை வேறு, அவர்கள் திம்புக் கோட்பாட்டுக்குள் அடங்க மாட்டார்கள். தாயகக் கோட்பாடு, தேசிய இனக்கோட்பாடு, சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு ஆகியவை அவர்களுக்குப் பொருந்தாது. அவர்களுக்கான தீர்வுக்கு வேறு அடிப்படைகளும் அணுகு முறைகளும் வகுக்கப்பட வேண்டுமென ஒரு புறம் சுட்டிக்காட்டப்படுகிறது.

மறுபுறம், திம்புக் கோட்பாடுகள் முஸ்லிம்களின் அபிலாஷைகளை முகம் கொடுக்கவில்லையெனக் குறைகாணப்படுகிறது. சகல தீர்மானங்களிலும் 'தமிழர்கள்' என்ற பதப்பிரயோகம் பாவிக்கப்பட்டுள்ளதேயன்றி முஸ்லிம்கள் பற்றிய எவ்வகை கரிசனையும் காட்டப்படவில்லையென முறைப்பாடு செய்யப் படுகிறது.

இத்தீர்மானங்களின் பாவனை தமிழர்களுக்கான தீர்வையே முஸ்லிம்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற விதத்தில் அமைந்துள்ளதேயல்லாமல் முஸ்லிம்களையும் திருப்தி செய்யக்கூடிய வகையில் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்ற அக்கறை காட்டப்படவில்லை எனக் குறை கூறப்படுகிறது.

ஆனால் இங்கு புரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் என்னவென்றால், திம்புக் கோட்பாடுகள் தமிழீழத்துக்கு மாற்றுத் தீர்வு ஒன்றுக்கு புலப்படாத காலத்தில் முன்வைக்கப்பட்டவை. அப்போது ஈழம் என்பது முஸ்லிம்களதும் தாயகமாகவும், அவர்களினது பிரச்சனைகளுக்கான தீர்வாகவும் கொள்ளப் பட்டது. இதே வேளை முஸ்லிம்கள் தொடர்பான முரண்பாடுகள் இத்துணை வளர்ச்சி கண்டிருக்கவில்லை. அதனால்தான் திம்புக் கோட்பாடுகள் முன்வைக்கப்பட்ட போது முஸ்லிம்கள் மத்தியிலிருந்து எதிர்ப்புக்குரல் எதுவும் எழுந்திருக்கவில்லை.

மலையகத் தமிழர்களைக்கூட அப்போது பல விடுதலை இயக்கங்கள் ஈழவிடுதலைப் போராட்டத்தின் அங்கமாகக் கருதியிருந்தன. அவற்றின் ஈழ வரைபடத்தில் மலையகப் பிரதேசமும் உள்ளடங்கியிருந்தன. இவற்றின் தாக்கங் களும், இதனால் மலையக மக்கள்பால் ஏற்பட்டிருந்த கரிசனையுமே திம்புக் கோட்பாட்டில் பிரஜா உரிமைக்காக குரல் கொடுக்க வைத்தது.

இந்த யதார்த்தங்களிலிருந்து சிந்தித்தால் திம்புக் கோட்பாடுகளின் அப்போதைய நிலைப்பாட்டில் தவறுகாணுவதற்கில்லை. தற்போதைய காலகட்டத்தின் யதார்த்தங்களுக்கமைய அக்கோட்பாடுகளைச் செப்பனிட்டுக் கொள்ளுவதே சாலப்பொருத்தமானதேயன்றி ஒரு சில மாறுதல்களுக்காக நிராகரிப்பது ஏற்புடையதல்ல.

இதேவேளை அக்கோட்பாட்டின் பிரதான அம்சங்கள் இன்றும் வலுவுடையவையே. அவை ஏற்படக்கூடிய எந்தத் தீர்வுத்திட்டத்திலும் செயற்பாட்டுத்தளத்தில் அவை பேணப் படுகின்றனவா என நாம் விழிப்புணர்வுடன் அவதானிப்பது அவசியம். ○

## செய்திச் சிதறல்

✪ **வி**மானப் போக்குவரத்து சற்றுலாத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா கடந்த 24ம் திகதி திங்கட்கிழமை இரவு கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் வைத்துக் காலமானார். சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் பணி ஆற்றிய திரு.செனநாயக்கா பொதுவாக எல்லோருடனும் சுமுகமாகப் பழகுபவர் என்று கூறப்படுகிறது. எந்தப் பிரச்சனையிலும் மாட்டுப்படாதவர் என்றும் இவருடைய சகாக்கள் தெரிவிக்கின்றனர். சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற நாட்டம் கொண்டவர் என்று அவர் வர்ணிக்கப் பட்டவர். அவருடைய பூதவுடல் சனிக்கிழமை மாலையில் பூரண அரசமரியாதைகளுடன் சுதந்திர சதுக்கத்தில் தகனம் செய்யப்பட்டது.

✪ **இ**லங்கை புகையிரத சேவையைச் சேர்ந்த ஊழியர்கள் தங்களுக்கு ரூ3000/- சம்பள உயர்வு கோரி கடந்த 27ம் திகதி நள்ளிரவு முதல் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனால் ஒரு நாள் நாட்டின் போக்குவரத்தில் இடையூறுகள் ஏற்பட்டன.

✪ **வ**வுனியா-தோணிக்கல் என்ற இடத்தில் ஒரு மினிசினிமாக் கொட்டகையில் குண்டு ஒன்று வெடித்ததனால் படம் பார்த்துக் கொண்டிருந்தோரில் மூவர் கொல்லப்பட்டனர்; 9 பேர் காயமடைந்தனர். குண்டு வெடித்ததைத் தொடர்ந்து கொட்டகையை விட்டு வெளியே ஓடிய இருவர்மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோது அவ்விருவரும் பலியாகினர் என்று தெரிகிறது.

✪ **வி**டுதலைப் புலிகளின் பிரதானமான அலுவலகம் லண்டனில் இயங்கி வருவது தெரிந்ததே. பிரிட்டன் பயங்கரவாதத்தடைச் சட்டம் ஒன்றினை இயற்றியிருக்கிறது. இச்சட்டத்தின் அடிப்படையில் அந்நாட்டில் புலிகளின் இயக்க நடவடிக்கைகளைத் தடைசெய்யுமாறு, அந்நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அந்நாட்டு அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். அந்நாட்டின் இராஜாங்க வெளியுறவு அமைச்சர் பீட்டர் ஹெய்ன் அவர்களை அவருடைய அலுவலகத்தில் சந்தித்த அமைச்சர் கதிர்காமர் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

✪ **ம**ட்டக்களப்பு-கொழும்பு வீதியில் கிண்ணையடியில் இடம்பெற்ற கிளைமோர் குண்டுத்தாக்குதலில் படையினர் இருவர் கொல்லப்பட்டனர். 9 பேர் காயமடைந்தனர். விடுமுறையில் தமது வீடு செல்வோரையும் விடுமுறைமுடிந்து கடமைக்குத் திரும்புவோரையும் ஏற்றிச் செல்வதற்காக இராணுவ வாகனத் தொடரணிகள் மட்டக்களப்பிலிருந்தும் வெலிக்கந்தையிலிருந்தும் புறப்படுகின்றன. அவ்வாறு விடுமுறை முடிந்து கடமைக்குத்திரும்பிக் கொண்டிருந்த இராணுவத்தினரை வெலிக்கந்தையிலிருந்து மட்டக்களப்புக்கு ஏற்றி வந்து கொண்டிருந்த இராணுவ வாகனத் தொடரணியின் பஸ் ஒன்றே கண்ணி வெடித்தாக்குதலுக்கு இலக்கானது. கண்ணிவெடி காரணமாக வீதிப் போக்குவரத்துச் சிலமணிநேரம் தடைப்பட்டதால் ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்துக்காகச் செல்லவிருந்த பெருந்தொகையான பொதுமக்கள் சிரமப்பட்டார்கள். ■

# அண்டை மண்டலத்தில்....

கானகன்

## காஷ்மீரும் தமிழகக் கட்சிகளும்

ஜம்மு காஷ்மீர் சட்டமன்றம் கடந்த ஜூன் மாதத்தில் சுயாட்சி கோரும் தீர்மானம் ஒன்றை இயற்றியது. ஏதோ பிரளயமே வந்து விட்டது போல, நடக்கக்கூடாதது நடந்து விட்டது போல இந்தியாவில் பல்வேறு கட்சிகளும், பத்திரிகைகளும் தாண்டிக் குதித்தன. அரண்டு போன மத்திய அரசு தீர்மானத்தை முற்றிலுமாக நிராகரித்தது. இப்போது காஷ்மீர் முதல்வர் ஃபாரூக் அப்துல்லா ஒவ்வொரு மாநிலமாக காவடி எடுத்துக் கொண்டிருக்கிறார், தனது கோரிக்கையின் நியாயங்களை எடுத்துச் சொல்லி தமிழக முதல்வர் கருணாநிதியைத் தவிர இதுவரை வேறு எந்தத் தலைவரும் பகிரங்கமாக காஷ்மீர் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை. அவரே வழக்கம்போல வழுக்குகிறார். முதலில் தீர்மானத்தை விவாதிக்க முதல்வர்கள் மாநாட்டைக் கூட்ட வேண்டும் என்கிறார். பிறகு இதையெல்லாம் பிரதமரே முடிவு செய்து கொள்ளட்டும் என்கிறார்.

நரம்பு புடைக்கப் பேசும் வைகோவோ, தான் கோரும் மாநில சுயாட்சி வேறு, காஷ்மீர் கோரிக்கை வேறு, 1953க்கு முந்தைய நிலையைக் கொணரவேண்டும் எனும் கோரிக்கையை நாட்டு நலன் கருதி கைவிடவேண்டும் என்கிறார்.

தீவிர தமிழின வாதம் பேசும் டாக்டர் ராமதாஸ் தீர்மானம் பற்றி கருத்தேதும் தெரிவிக்காமல் நழுவிக் கொண்டிருக்கிறார்.

ஜெயலலிதா பற்றிக்கேட்கவே வேண்டாம், காஷ்மீர் அரசையே கலைத்துவிட வேண்டும் என்று முழுங்குகிறார்.

இலங்கைத் தமிழ் பிரச்சனையில் எப்படி தமிழகக் கட்சிகள் திடமான முடிவெடுக்க அஞ்சுகின்றனவோ, அதைவிடவும் மோசமான முறையில் காஷ்மீர் பிரச்சனையை அணுகுகின்றன. 'நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறமுமின்றி' என்று மகாகவி பாரதி மனம் கொதித்தானே, அதே நிலைதான் தமிழகத்தில் இன்றும்.

இதிலே வேடிக்கை என்னவென்றால், காஷ்மீர் சட்ட மன்றத் தீர்மானத்தில் புதிதாக எதுவுமே இல்லை என்பதுதான். ஏற்கெனவே அம் மாநிலத்திற்கு அளிக்கப்பட்ட உரிமைகளை, பின்னாலே பறிக்கப்பட்ட உரிமைகளைத்தான் அந்தத் தீர்மானம் கோருகிறது. இந்தியாவின் மற்ற மாநிலங்களைப் போல, ஜம்மு காஷ்மீர் விடுதலை பெற்ற இந்தியாவில் இரண்டறக் கலந்து விடவில்லை.

தமிழ்நாட்டில் பார்ப்பனரல்லாதார் நலன் புதிய அரசியலமைப்பில் பாதிக்கப்படும், இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தாலும் தமிழ் நாட்டை ஆங்கிலேயர் தொடர்ந்து ஆள வேண்டும் என்று பெரியார் கூறியபோது, எவரும் அவரைச் சட்டை செய்யவில்லை. ஒட்டு மொத்தமாக மக்கள் விடுதலையை விரும்பினார்கள். எனவே தமிழ்நாடு இந்தியாவின் ஒரு பகுதியாக ஆவதற்கு எதிர்ப்பில்லை.

அரசர்கள் ஆண்ட சமஸ்தானங்கள், அந்தந்த அரசர்கள் கையெழுத்திட, அவை இந்தியாவுடனோ பாகிஸ்தானுடனோ இணைந்தன. காஷ்மீர் கதை தனிக்கதை. மஹாராஜா ஹரிசிங், 'எந்தப்பக்கமும் போகாமல் தனி இராஜ்ஜியமாக ஆளுவோமா' என்று கனவு கண்டு வந்தார்.

"பாகிஸ்தானுடன் சேர்ந்து விடுவேன்", என்று மிரட்டிய ஹைதராபாத் நிஜாமின் கதையை சர்தார் பட்டேல் முடிக்க முடிந்தது, இராணுவத்தை இறக்கி, ஹைதராபாத் இந்தியாவிற்குள் சிக்கியிருந்ததன் காரணமாக, அந்த இடத்தில் பாகிஸ்தான் மூக்கை நுழைக்க முடியவில்லை. மாறாக காஷ்மீரோ இந்தியா-பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் அமைந்திருந்தது. காஷ்மீரத்தில் முஸ்லிம்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தார்கள். மஹாராஜா ஹரிசிங் இரு அரசுகளுக்கும் பெப்பே காட்டிக் கொண்டிருந்தாலும், பாகிஸ்தானுடனும் இணைந்து கொள்ளத் தயாராக இருப்பது போன்ற சமிக்ஞை செய்ய, தனது படையினரையும் பத்தானியர்களையும் இறக்கி, பாகிஸ்தான் காஷ்மீரைக் கைப்பற்ற முயன்றது.

பூமியைக் கைப்பற்றுவதற்குப் பதில், கண்ணில் பட்டதையெல்லாம் துவம்சம் செய்யத் துவங்கினார்கள் பத்தானியர்கள். காஷ்மீர் முஸ்லிம்கள் மிகவும் நாகரிகத்தில் உயர்ந்தவர்கள். இந்து மற்றும் பௌத்த மதங்களின் பல்வேறு கூறுகளால் ஈர்க்கப்பட்டவர்கள். சூஃபிக்கள் எனப்படும் துறவிகளை, எம்மதமும் சம்மதம் என்று கூறிய அவர்களை, பூஜிப்பவர்கள். பாகிஸ்தானுடன் இணைவதில் பெரும்பாலான காஷ்மீர் முஸ்லிம்களுக்கு அந்தக் கட்டத்தில் விருப்பமேயில்லை. இந்த மக்களைத்தான் பத்தானியப் பழங்குடியினரும், பாகிஸ்தான் இராணுவ வீரர்களும் கொன்று குவித்தனர், அவர்கள் பெண்களைக் கற்பழித்தனர், பல்வேறு இன்னல்களுக்குள்ளாக்கினர்.

வேறு வழியில்லாமல் ஹரிசிங் இந்தியாவுடன் இணைந்து கொள்ள முன்வந்தார். அன்று மிகுந்த மக்கள் செல்வாக்குப் படைத்தவராக இருந்த ஷேக் அப்துல்லாவும் அந்த முடிவை முழுமனதுடன் ஏற்றுக் கொண்டார். பத்தானிய வெறியாட்டத்தில் நிலைகுலைந்திருந்த காஷ்மீர முஸ்லிம்களும் அந்த முடிவை மனமார வரவேற்றார்கள்.

இது ஒரு புறமிருக்க, காஷ்மீர் அவ்வாறு இணைந்தபோது, அதற்கென்று பல்வேறு சிறப்பு உரிமைகளை ஜவஹர்லால் நேரு தலைமையிலான இந்திய அரசு அளித்தது. வெளிநாட்டு உறவு, பாதுகாப்பு, தொலைத் தொடர்பு தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் காஷ்மீர் மாநில அரசு சுதந்திரமாகச் செயல்பட அனுமதி அளிக்கப்பட்டது. அந்த உரிமைகளை உறுதிப்படுத்துவதுதான் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 370வது பிரிவு. ஆனால் பின்னர் மத்திய-காஷ்மீர் உறவுகளில் பல்வேறு சிக்கல்கள் எழுந்தன. அதிகாரங்கள் மத்திய அரசிடம் குவிய, அந்த அதிகார மமதையில் தொடர்ந்து காஷ்மீருக்கென அளிக்கப்பட்ட சிறப்புச் சலுகைகளெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக விலக்கிக் கொண்டது இந்திய அரசு. கிட்டத்தட்ட முழு சுயாட்சி பெற்ற மாநிலமாவே திகழ்ந்த காஷ்மீர், இன்று இந்திய இராணுவத்தின் கைப்பிடியில் இருக்கும் ஒரு பரிதாபத்திற்குரிய பிரதேசமாகிவிட்டது. ஃபாரூக் அப்துல்லா இழந்துவிட்ட அந்த உரிமைகளைத்தான் கோருகிறார். 1953ல் அவரது தந்தை ஷேக் அப்துல்லா நேருவினாலேயே கைது செய்யப்படுவதற்கு முன், காஷ்மீருக்கு இருந்த அந்த சிறப்பு ஏற்பாட்டினைத்தான் அவர் கோருகிறார். இதைப் பற்றி யாரும் பேசுவதில்லை. ஆஹா, ஃபாரூக் தேசத்துரோகியாகிவிட்டார், இந்தியாவிலிருந்து காஷ்மீரைப் பிரிக்கப்பார்க்கிறார் என்றெல்லாம் ஓலம்.

இதிலே இன்னொரு கொடுமை என்னவென்றால், ஃபாரூக்கே இவ்விஷயத்தில் பெரும் அக்கறை காட்டவில்லை என்பதுதான். தொடரும் மனித உரிமை மீறல்கள், பொருளாதாரத் தேக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், லஞ்சம், வெளிநாட்டுப் போராளிகள் அல்லது பயங்கரவாதிகள், பாகிஸ்தானின் அயராத பிரசாரம், ஆதரவு, சதிவேலை, இவற்றின் ஒட்டு மொத்த விளைவாக இன்று காஷ்மீர் மக்கள் இந்தியாவிலிருந்து அன்னியப்பட்டுப் போயிருக்கிறார்கள். இந்தியர்கள் என்று சொல்லிக் கொள்ளவே தயங்கும் அந்தக் காஷ்மீரிகள், இந்திய அரசின் எடுபிடியாக மாறிவிட்ட ஃபாரூக் அப்துல்லாவை எப்படி ஏற்றுக்கொள்வார்கள்?

அடுத்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன. மிகக் குறைவானவர்களே வாக்களித்தாலும்கூட, ஃபாரூக்கின் தேசீய மாநாட்டுக் கட்சியை புதிய கட்சி ஏதும் தோற்கடிக்கக்கூடும் என்றே நம்பப்படுகிறது.

அத்தகைய தோல்வி ஏற்படாமல் தன்னைக் காத்துக் கொள்வே ஃபாரூக் அப்துல்லா சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார். இழந்த செல்வாக்கினை இவ்வாறு மீட்டுக் கொள்ள முயற்சி செய்கிறார் என்பதுதான் பலருடைய கணிப்பாகும்.

அத்தகைய கணிப்பினை உறுதி செய்வது போன்று, மத்திய அரசு நிராகரித்த பின்னரும், அது மாநிலத்திற்கு இழைக்கப்படும் அநீதி என்று அப்துல்லா கொதித்தெழவில்லை. பாரதீய ஜனதாவின் பொதுச்செயலாளரும் மற்றவர்களும் நேர்மையில்லாதவர் ஃபாரூக், ஆளவே தெரியவில்லை, மக்களின் விரோதத்தை சம்பாதித்துக் கொண்டிருக்கிறார், அவர்கள் கவனத்தைத் திசைத் திருப்பவே சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார் என்றெல்லாம் தாக்கிய பிறகும், பா.ஜ.க.வின் தலைமையிலான தேசீய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து வெளியேற ஃபாரூக் அப்துல்லா தயாராகயில்லை. அவரது மகன் மத்தியில் ஒரு அமைச்சராயிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. நாங்கள் யாரோடும் மோதப் போவதில்லை, இந்தியாவிலிருந்து பிரிந்து போகும் எண்ணம் எங்களுக்கு இல்லை, 1953க்கு முந்தைய நிலையை மறுபடி கொணருமாறு நாங்கள் வற்புறுத்தவில்லை, தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கவில்லை. குறைந்த பட்சம் ஒரு அமைச்சரவைக்குழுவையாவது நியமித்து தீர்மானத்தை ஆய்வு செய்தால் என்ன, இப்படியெல்லாம் ஒரேயடியாக நிராகரிக்கலாமா என்று முறையிட்டு வருகிறார் ஃபாரூக். இப்படிப் பேசினால், அவருடைய தீர்மானத்தைப் பார்த்து யார் பயப்படப்போகிறார்கள், அவர் மீது யாருக்கு மரியாதை இருக்கும்?

இப்படித்தான் முன்னர் ஒரு முறை அவரது அரசை இந்திரா காந்தி கவிழ்க்க, மற்ற எதிர்க்கட்சிகளெல்லாம் அவருக்குப் பின்னால் அணி திரள, ஒரு கட்டத்தில் அவர்களையெல்லாம் அம்போவென்று விட்டு விட்டு, காங்கிரசோடு கூட்டணி வைத்துக் கொண்டார், ஃபாரூக். வெறுத்துப் போய்விட்டனர் மற்றத் தலைவர்கள்.

காஷ்மீரத்து சிங்கமெனப் போற்றப்பட்ட ஷேக் அப்துல்லாவே, சிறையிலிருந்து விடுதலையாகி, இந்திராவுடன் உப்பு சப்பற்ற ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்ட பின் மிகவும் தளர்ந்து போனார். அவரது நெருங்கிய சகா ஒருவர் புதுடில்லியில் தான் வசிக்க பங்களா ஒன்று வேண்டும் என்று ஒரு மூத்த அமைச்சரிடம் கூற, அவர் வேதனையுடன் கூறினாராம்- உங்கள் நிலை எப்படியாகிவிட்டது பார்த்தீர்களா? தனி நாடு, சுயாட்சி கேட்கப் புறப்பட்டவர்கள், ஒரு பங்களாவிற்காக சாதாரண அமைச்சர்களிடம் மனுப்போடும் நிலைக்கு தள்ளப்பட்டு விட்டீர்களே?"

இஸ்லாமியத் தீவிரவாதம் உலகளவில் பயங்கரமாக வளர்ந்த பிறகும் கூட காஷ்மீர் மக்களிடையே முஸ்லிம் அடிப்படை வாதத்திற்கு ஆதரவு பெரியதாக இல்லை. ஜிஹாத், புனிதப்போருக்காக பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் ஆயிரக்கணக்கில் இளைஞர்களுக்கு போர்ப்பயிற்சி கொடுக்கப்படுகிறது. தீவிரவாதிகள் காஷ்மீர் பள்ளத்தாக்கில் ஊடுருவி அட்டகாசம் செய்கிறார்கள், காஷ்மீர் இந்துக்களை குறிவைத்து தாக்குகிறார்கள். ஆயினும் அவர்களை பெரும்பாலான மக்கள் ஆதரிப்பதாகத் தெரியவில்லை. பத்து வருடங்களுக்கு காஷ்மீர் பண்டிட்கள் (இந்து பிராமணர்கள்) விரட்டப்பட்டபோது கூட அதற்கெல்லாம் காரணம் அப்போது ஆளுநராக இருந்த ஜக்மோகன் தான் என்று கூறப்பட்டது. போராளிகளுக்கும், விடுதலை கோரிய அமைப்புக்களுக்கும் கெட்ட பெயரை ஏற்படுத்தி, அவர்கள் மீது கடும் போர் தொடுக்க, பண்டிட்களை ஜக்மோகன் வெளியேறச் சொன்னார் என்று கூறப்பட்டது.

கார்கில் போரில் பாகிஸ்தான் வெற்றியடைய வேண்டுமென்று எந்த காஷ்மீர் முஸ்லிமும் வேண்டியதாக செய்தி வரவில்லையே. இந்திய இராணுவத்தினர் கொடுமைப்படுத்துகின்றனர். என்று தான் அவர்கள் குறை கூறினர்.

ஹூரியாத் எனப்படும் இந்திய எதிர்ப்பு அமைப்புக்கூட காஷ்மீரை பாகிஸ்தானோடு இணைக்கவேண்டும் என்று கூறவில்லை. "எங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்க எங்களுக்கு உரிமை உண்டு, வாக்கெடுப்பு நடத்துங்கள்" என்றுதான் கோருகிறார்கள்.

காஷ்மீரின் பெரும் பகுதியிலிருந்து பாகிஸ்தான் இராணுவத்தினரிடமிருந்து மீட்ட பிறகு, ஐக்கிய நாடுகள் அவைக்குப் பிரச்சனையை எடுத்துச் சென்றது இந்தியா.

ஆக்கிரமித்த ப்குதியிலிருந்து பாகிஸ்தான் வெளியேறிய பிறகு, மக்கள் கருத்தறிய வாக்கெடுப்பு நடத்தலாம் என்று அப்போது இந்தியா ஒத்துக் கொண்டது. மூன்றில் ஒரு பங்கை பிடித்துக் கொண்ட பாகிஸ்தானும் வெளியேறவில்லை. மக்களிடமிருந்து அந்நியப்பட, இந்திய அரசுகளும் வாக்கெடுப்பு நடத்தத் துணியவில்லை. இதில் முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்றால், பிரச்சனையைத் தீவிரப்படுத்தி, ஷேக் அப்துல்லாவிற்கு தலைவலி கொடுத்து, கலவரங்களை உருவாக்கி, அவரது அரசு கலைக்கப்பட காரணமாக இருந்ததே இந்து வெறியர்கள் தாம். பாரதீய ஜனதாவின் தாய்க் கட்சியான ஜனசங்கத் தலைவர்கள்தாம்.

இன்றளவும் காஷ்மீருக்குத் தனி அந்தஸ்து அளிக்கும்அரசியலமைப்புச் சட்டத்தின் 370வது பிரிவை நீக்கவேண்டும் என்பதை முக்கிய கொள்கையாக வைத்திருப்பது பாரதீய ஜனதா கட்சி. அதனுடன் கூட்டு வைத்துக்கொண்டு "சுயாட்சி கேட்கிறேன்" என்றால் ஃபாரூக்கை யார் நம்புவார்கள்? வாஜ்பேயி அரசு பிரச்சனையை தீர்க்கும்; காஷ்மீர் மக்களின் உணர்வுகளை மதிக்கும் என்று நினைப்பதே பைத்தியக்காரத்தனமல்லவா?

ஆக பிரச்சனை இன்னும் தீவிரமாகும், போராளிகள், பயங்கரவாதிகள், பாகிஸ்தானின் உதவியுடன் பல்வேறு கொடுஞ்செயல்களில் ஈடுபடுவார்கள். ஆயுதந்தாங்கிய கறுப்புப் பூனைகள் புடை சூழ, ஃபாரூக்கும், அவர் மகனும் வலம் வருவர். அப்பாவி மக்களின் துயரம் பெருகும்.

தமிழ்நாட்டில் எந்தக் கட்சியும் காஷ்மீருக்காகக் குரல் கொடுக்காமலிருப்பது, எந்த அளவு மாநில உரிமைகள் மீது கட்சிகளுக்கு அக்கறையிருக்கிறது என்பதைத்தான் வெளிப்படுத்துகிறது.

திண்ணையில் படுத்துறங்கி திராவிட நாட்டைப் பெறுவோமென்றார்கள். உறங்குவதற்கு பங்களாக்களைக் கட்டிக் கொண்டார்கள். இப்போது நாங்கள் மாநிலங்களுக்குச் சுயாட்சி வேண்டுமென்கிறோம், உண்மை தான், ஆனால் காஷ்மீர் பிரச்சனை வேறு மாதிரியானது, மத்திய அரசே முடிவு செய்யட்டும் என்கிறார் கருணாநிதி.

ஃபாரூக்கை அழைத்து தனது கட்சி மாநாட்டில் பேச வைத்துவிட்டு, பின்னர் காஷ்மீருக்கே சென்று மாநில உரிமைகள் பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு முழங்கிவிட்டு, இப்போ எல்லாவற்றையும் வாஜ்பேயி பார்த்துக் கொள்வார் என்கிறார் வைகோ.

விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தையும், கருணாநிதியையும் நாள்தோறும் தாக்கிக் கொண்டிருக்கும் இராமதாசுக்கு காஷ்மீர் பிரச்சனை பற்றி சிந்திக்கவே நேரமில்லை. இப்போதுதான் அவரது மகன் அன்புமணி பகிரங்கமாக அரசியலில் பங்கு பெறத் துவங்கியிருக்கிறார். சமீபத்தில் சென்னையில் நடந்த பாட்டாளி மக்கள் கட்சி பொதுக் கூட்டத்தில் தந்தையைவிட தனயனுக்கே அதிகமான கட்-அவுட்டுக்கள். இரண்டு அமைச்சர்களை வைத்துக் கொண்டே நிறைய பணம் புரள்கிறது. தி.மு.க.வைப் பற்றி கேட்கவே வேண்டாம்.

மத்திய அரசில் பங்கு வேண்டும், தங்கள் வாரிசுகள் வளர வேண்டும், கட்சியினரும் பிழைக்க வேண்டும், இப்படி தமிழகத்தலைவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, எந்தக் கொள்கை பற்றி யார் கவலைப்படப் போகிறார்கள்! ■



---

**வெளி நாடுகளுக்குச் சென்றவர்கள், அங்கு அவர்களுடைய தஞ்சம் கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதும் அவர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுகின்றனர். அவ்வாறு இங்கு வருபவர்கள் படும் துயரம் தொடர்பாக மனித கௌரவத்துக்கான அமைப்பு விடுத்துள்ள அறிக்கையின் முதல் ஏழு பகுதிகளையும் கடந்த வாரங்களில் இங்கு தந்திருந்தோம். அதன் தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது.**

### மேற்கு நாடுகளில் தஞ்சம் மறுக்கப்பட்டு

## திருப்பி அனுப்பப்படுவோர் இங்குபடும் துயரங்கள் 08

பிரிட்டனிலிருந்து 1998 டிசம்பர் 10ம் திகதியன்று செல்லத்துரை நந்தகுமார் என்பவர் நாடு கடத்தப்பட்டார். அடுத்த நாள் 11ம் திகதியன்று இவர் கட்டுநாயக்காவில் வந்திறங்கினார். அவருக்கு என்ன நடந்தது என்பதை உடனடியாக அறிந்து கொள்ள முடியவில்லை. நந்தகுமார் தொடர்பாக பிரிட்டன், எஸ்செக்ஸ், ஹில்ஃபோர்ட், ஹென்லி வீதி, 76ம் இலக்கத்திலுள்ள நந்தகுமாரின் சகோதரி திருமதி ஆர்.சிவநேசன் தனது சகோதரன் காணாமல் போயிருப்பதாகவும் அவரைக் கண்டு பிடித்துத் தருமாறும் மனித கௌரவத்துக்கான அமைப்புக்கு முறையிட்டிருந்தார்.

இது தொடர்பாக மேற்படி அமைப்பின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம், தொல்லை தவிர்ப்பு குழுவுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். இக்கடிதத்தில், திரு.நந்தகுமார் ஒரு மனநோயாளி என்றும் தன்னுடைய பெயரையோ பிறந்த திகதியையோ நினைவு கூர முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு எழுதப்பட்ட கடிதம் தொடர்பாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. 13.03.99 சனிக்கிழமையன்று வீரகேசரி அலுவலகத்திலிருந்து மகேஸ்வரி வேலாயுதம் அவர்களுக்கு ஒரு அழைப்புக் கிடைத்தது. திரு.செல்லத்துரை நந்தகுமார் நீர்கொழும்புச் சிறையில் வைக்கப்பட்டிருப்பதாகத் தங்களுக்குத் தகவல் கூறப்பட்டதாக சொல்லப்பட்டது.

இத்தகவலைத் தொடர்ந்து இவ்வமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணியொருவர் நீர்கொழும்புச் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இருப்பினும் திரு.நந்தகுமாரை அந்த சட்டத்தரணியால் கண்டுபிடிக்க முடியவில்லை. அடுத்தநாளும் இதே முயற்சி மேற்கொள்ளப்பட்டு தோல்வியில் முடிவடைந்தது.

பலத்த பிரயத்தனங்களின் பின்னர் நீர்கொழும்பு சிறையிலேயே நந்தகுமார் வைக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. அவரைப் பிணையில் எடுத்தோம். பின்னர் நீர் கொழும்பு நீதிமன்றத்தில் 17.08.99அன்று இவர் விடுதலை செய்யப்பட்டார்.

மற்றுமொரு மனநோயாளியான கிருஸ்ணபிள்ளை சகாதேவன் (28 வயது) இலண்டனிலுள்ள மனநோயாளர் மருத்துவமனையிலிருந்து 03.02.99 அன்று நாடுகடத்தப்பட்டார். இவருடைய உறவினர்கள் எவரும் இங்கில்லை. இவர் காணாமல் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் இவர் திருகோணமலையில் தனது மனநோய்க்கு மருத்துவ உதவி பெறுவதாக தகவல் கிடைத்தது.

<u>நாடு கடத்தப்படுபவர் எந்தவிதமான வலுவான காரணமுமின்றி கைது செய்யப்பட்டு தடுத்து வைப்பதற்கான சில காரணிகள்:</u>

1. தேசிய அடையாள அட்டை மற்றும் பொலிஸில் பதிவு செய்ததற்கான சான்றிதழ் வைத்திருக்காமை.
2. ஒருவருடைய உடம்பில் காயத் தழும்புகள் அல்லது வடுக்கள் காணப்படுவது.
3. நடமாட முடியாத நிலையிலிருப்பது.

<u>தேசிய அடையாள அட்டை அல்லது பொலிஸ் பதிவு:</u>

சட்டப்படி அவசியமில்லாத போதும், இலங்கையர்கள் அனைவரும் தேசிய அடையாள அட்டையினை எப்போதும் வைத்திருக்க வேண்டும். எவராவது இவ்வட்டையினைத் தொலைத்து விட்டால் அதற்குப் பதிலாக ஒரு புதிய அட்டையைப் பெற்றுக் கொள்வது இலகுவான காரியமல்ல. நாடு கடத்தப்பட்டவர், தன்னுடன் தேசிய அடையாள அட்டையை வைத்திருக்க முடியாத நிலையில் பல பிரச்சனைகளை எதிர் கொள்ள வேண்டும். ஒரு புதிய தேசிய அடையாள அட்டையை அந்த நபர் பெறுவதானால் அவர் பல மாதங்கள் கொழும்பில் தங்கியிருக்க வேண்டும்.

(மேலும் வரும்)

## அலசுவது - இராஜதந்திரி

## தமிழ் அரசியல் கட்சிகளுடன் சந்திப்பு

# ஏமாற்றத்தைத் தாங்கமுடியாத மனநிலையில் ஜனாதிபதி சந்திரிகா

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கிய வெற்றி, என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் வர்ணிக்கப்பட்ட ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையேயான உடன்பாடு தற்போது முறிவடைந்துள்ளது.

இரு பிரதான கட்சிகளுக்கிடையே தோன்றிய உடன்பாடொன்று இருவாரங்கள் கூட நிலைத்து நிற்கவில்லை என்பதே தற்போது இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு புதிய விடயமாக இருக்கின்றது.

இந்நிலையில் விக்கிரமாதித்தன் கதைகளில் போன்று வேதாளம் மீண்டும் முருங்கையில் ஏறியது போலவே ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே தோன்றியதாகத் தெரிவிக்கப்பட்ட கருத்தொருமிப்பு, தற்போதுநிலை தளர்ந்து போயுள்ளது. ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் தம்மிடையே உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தம், வடக்கு-

இவ்விரு கட்சியினரிடையேயும் தமது இக்கட்டானநிலை குறித்து ஜனாதிபதி விளக்கமளித்துள்ளதுடன் தாம் தயாரித்துள்ள உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனைகளை நிறைவேற்ற ஆதரவளிக்குமாறும் கேட்டிருந்தார். கூடவே ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவின்றியே தம்மால் உத்தேச அலசியலமைப்புச் சீர்திருத்த யோசனைகளைப் பாராளுமன்றில் நிறைவேற்றமுடியும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

தமக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைத் தாங்க முடியாத ஒரு மனநிலையில் ஜனாதிபதி சந்திரிகா இருப்பதையே, அவா தெரிவித்த மேற்படி கருத்துக்கள்புலப்படுத்துகின்றன.

ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் ஒன்றையொன்று காலைவாரிவிடும் நடவடிக்கை இலங்கை அரசியலில் புதிதான தொன்றல்ல.

ஜனாதிபதி சந்திரிகாவும், எதிர்க்கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்கவும் பழைய அரசியல்

உடன்பாட்டைச் சமர்ப்பிப்பது பற்றி திரு.டி.எம் ஜயரட்ண கருத்து வெளியிடுகையில், புலிகளிடம் நோர்வே விசேட பிரதிநிதி மூலமாக உடன்பாட்டிலுள்ள விடயங்களைச் சமர்ப்பிக்கப் போவதாகவும் ஆனால் அவர்கள் அதனை ஏற்றாலென்ன அல்லது ஏற்காவிட்டாலென்ன அதுபற்றித் தாம் கவலை கொள்ளப்போவதில்லை என்று திரு.டி.எம்.ஜயரட்ண தெரிவித்திருந்தார்.

அரசு ஐ.தே.க. உடன்பாட்டில் திருப்திப்படாத தமிழ் அரசியல் கட்சிகள் ஒரு முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டுமெனக் கேட்டிருந்தனர்.

ஆனால் இதுபற்றி ஐக்கிய தேசியக் கட்சிச் செயலாளர் காமினி அத்துக்கோரள கருத்து வெளியிடுகையில், தமிழ் அரசியல் தரப்பைச் சேர்த்து ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் பேச்சு நடத்தினால் பௌத்த அமைப்புக்களும் அரசியல் பேச்சுக்களில் தலையை நுழைக்க எத்தனிக்கலாம் என்று கூறியிருந்தார்.

கிழக்குப் பிரச்சனை ஆகியவைதொடர்பாக சுமார் மூன்று மாதகாலம் பலசுற்றுப் பேச்சுக்களை நடத்தி பல்வேறு விடயங்களிலும் உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தன.

ஒரு சிலவிடயங்கள் தொடர்பாகவே இறுதிமுடிவுகள் எடுக்கப்பட வேண்டியிருப்பதாகவும், அதன் பின்னர் அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனைகளை தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்பதாக பெரும்பான்மைப்பலத்துடன் நிறைவேற்ற முடியுமென்றே ஆளுங்கட்சி எண்ணியிருந்தது.

ஆனால் பொது ஜன ஐக்கிய முன்னணி உத்தேச அரசியலமைப்புச்சீர்திருத்தம் தொடர்பாகக் கண்டகனவு இலவு காத்த கிளியின் கதையாகவே மாறியுள்ளது.

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க இறுதிச்சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலிருந்து வெளியேறியமை, அரசதரப்பினரின் காலைவாரிவிட்ட தொரு செயலாகவே அமைந்துள்ளது.

இதுதவிர இலங்கையின் அரசியல் விடயங்களில் எப்போதுமே அழுத்தங்களைக் கொடுத்துவருகின்ற பௌத்த மகாசங்கத்தினரும் உத்தேச அரசியலமைப்புச்சீர்திருத்தத்தை முழுமையாக நிராகரித்துள்ளனர்.

இந்நிலையில் சந்திரிகா அம்மையாருக்கு உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்ற முயற்சியில் பலத்த அடி வீழ்ந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

தமக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியாதவராக ஜனாதிபதி சந்திரிகா இருப்பதை அறியமுடிகின்றது.

முற்றிலும் எதிர்பாராதவகையில் ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க காலைவாரிவிட்டுள்ளதையடுத்து தமது திட்டத்தை நிறைவேற்ற ஜனாதிபதி சந்திரிகா தமிழ் அரசியல் கட்சிகளின் தயவையும் நாடியுள்ளார்.

கடந்தவாரம் தமது கண்சிகிச்சைக்காக லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா கொழும்பு திரும்பியதுமே முதல் வேலையாக தமிழர் விடுதலைக் கூட்டணியினரையும், புளொட் உறுப்பினர்களையும் சந்தித்திருந்தார்.

சந்ததியிலிருந்து வேறுபட்ட, 21ம் நூற்றாண்டின் புதிய அரசியல் சந்ததியைச் சேர்ந்தவர்கள் என்றே அரசியல் அவதானிகள் எதிர்ப்பார்த்தனர்.

ஆனால் இந்த இரு அரசியல் தலைவர்களும் கூட தமது மூதாதையர்களிலிருந்து எவ்விதத்திலும் வேறுபட்டவர்களல்ல என்பதையே அவர்களது தற்போதைய அரசியல் நடவடிக்கைகள் மூலம் அவதானிக்க முடிகின்றது.

ஐக்கிய தேசியக்கட்சி உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்த உடன்பாட்டிலிருந்து விலகியதையடுத்து, ஜனாதிபதி சந்திரிகா தமிழ் அரசியல் கட்சிகளிடம் தமக்குதவுமாறு கோரியிருந்தார்.

ஆனால் கடந்த மூன்றுமாதகாலமாக எதிர்க்கட்சியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியபோது தமிழ் அரசியல் கட்சிகளின் முக்கியத்துவத்தை ஆளுங்கட்சியினர் எவ்வளவுதூரம் உணர்ந்திருந்தார்கள் என்பதே கேள்விக்குரியதாக இருக்கின்றது.

ஆளுங்கட்சியினர் மட்டுமல்ல. எதிர்க்கட்சியினர் கூட தமிழ் அரசியல் கட்சிகள் குறித்துப்பாராமுகமாக இருந்ததையே அவதானிக்க முடிந்தது.

ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையேயான உடன்பாடு பற்றி அறிவிக்கப்பட்டதும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரான அமைச்சர் டி.எம்.ஜயரட்ண கருத்து வெளியிடுகையில், தமிழ் அரசியல்தரப்பின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டிருந்தார்.

தமிழ் அரசியல் தரப்பின் பார்வைக்கு மட்டும் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உடன்பாட்டைச் சமர்ப்பிப்பதென்ற நிலைப்பாட்டையே திரு.டி.எம் ஜயரட்ண கொண்டிருந்தார்.

தமிமீழ விடுதலைப்புலிகளிடம் உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றிய ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி

எனவே ஆளுங்கட்சியோ அல்லது எதிர்க்கட்சியோ தமிழ் அரசியல் தரப்பைக் கருத்தில்கொள்ளாமலேயே தமது உடன்பாட்டை எட்டியிருந்தன.

இருந்தபோதிலும் ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையேயான உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்த உடன்பாடு தற்சமயம் தோல்விகண்டுள்ளது. ஆனால் அந்த உடன்பாடு, திட்டமிட்டபடி இருபிரதான கட்சிகளினதும் சம்மதத்துடன் பாராளுமன்றம் வரை சென்று ஒரு புதிய அரசியலமைப்பாக நிறைவேறியிருக்குமேயானால் தமிழ் அரசியல் தரப்பின் நிலையென்ன?

இந்த ஆண்டில் ஆரம்பத்தில் வடக்கே ஆனையிறவு முகாமின் வீழ்ச்சியையடுத்து தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டுமென்ற நிலைப்பாடு உள்நாட்டிலும், சர்வதேசரீதியாகவும் பெரிதும் உணரப்பட்டிருந்தது.

இலங்கைக்கு அமெரிக்க, பிரிட்டிஷ், இந்திய, நோர்வே பிரதிநிதிகள் விஜயம் செய்து இனப்பிரச்சனைத் தீர்வுகுறித்த அரசியல் அணுகுமுறைகளை ஆராய்ந்தனர்.

நோர்வேயின் இலங்கை விவகாரத்துக்கான விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம், இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுக்களில் உதவும் வகையில் உதவிக் கரம் நீட்டியிருந்தார்.

ஆனால் நாட்டின் பிரதான பிரச்சனையான வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குத் தீர்வுகாணும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதை விடுத்து, ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் தம்மிடையேயான முரண்பாடுகளைத் தீர்க்கவே பேச்சுக்களை ஆரம்பித்தன.

ஆயினும் தற்போது அப்பேச்சுக்களிலும் இருதரப்புமே தோல்வியைத் தழுவியுள்ளதையே

அவதானிக்கமுடிகின்றது.

எதிர்க்கட்சியும் காலைவாரிவிட்டுள்ள நிலையில், ஆளுங்கட்சிக்குள்ளேயும் உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கு எதிராகக் குரல் எழுந்துள்ளது.

சுமார் ஆறுவருடங்களுக்குமுன்னர் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்பவற்றில் போட்டியிடத்தயாரான காலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி, தற்போதைய அரசியலமைப்பை மாற்றப் போவதாகக் கூறியிருந்தது.

ஆனால் ஜனாதிபதிப் பதவிக்கு இரண்டாவது தடவையாகவும் வந்த நிலையில், பாராளுமன்றப் பதவிக் காலத்துக்கும் இரண்டாவது தடவையாகப் போட்டியிடவுள்ள பொது ஜன ஐக்கிய முன்னணி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையைக்



கொண்டதாக இருக்கும் தற்போதைய அரசியலமைப்பை மாற்றியமைக்க முடியாத நிலைக்கே தள்ளப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியுடனான உடன்பாட்டில் தோல்வி ஏற்பட்டிருக்காவிட்டாலும் கூட, பௌத்த மகாசங்கமும், ஏனைய தீவிரவாதசிங்கள அமைப்புக்களும் உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கெதிராக போர்க்கொடி உயர்த்தியிருக்குமென்றே கருதமுடியும்.

இதேவேளை இம்மாத இறுதியில் தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்படவிருப்பதையடுத்து, பொதுத்தேர்தலில் போட்டியிடுவதிலேயே அனைத்து அரசியல் கட்சிகளும் கவனஞ் செலுத்துபவையாக இருக்கும்.

இந்நிலையில் இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகள், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் போன்ற விடயங்கள் மீண்டும் ஓரந்தள்ளிவைக்கப்படும் நிலையே தோன்றியுள்ளது.

இது இவ்வாறிருக்க வடக்கே யாழ்குடாநாட்டில் இராணுவ உயர்மட்டத்திலும் பிணக்குத் தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனையிறவு முகாம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்ததைத்

தொடர்ந்து, வடக்கே இராணுவத்தினருக்கு பாரிய இழப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் விதத்தில் இரு மேஜர்ஜெனரல்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா, மற்றும் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோரே அந்த இரு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுமாவர்.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா இராணுவ தலைமைப்பீடத்தில் தலைமை அதிகாரியாக இருக்கின்றார்.

ஆனையிறவு வீழ்ச்சியையடுத்து மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா வடபகுதித் தளபதியாக நியமிக்கப்பட்டதையடுத்தே தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னேற்றத்தை ஓரளவு தடுத்து நிறுத்த முடிந்தது.

புலிகளது எதிர்ப்பைக் கையாளும் விதத்தில் வடக்கே பொறுப்புக்களை ஏற்றிருந்த மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவும், அவரது துணை அதிகாரியான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும் தற்போது தம்மிடையே கருத்து வேற்றுமைகளைக் கொண்டுள்ளனர்.

இதனையடுத்து இந்த இரு முக்கிய அதிகாரிகளும் வடக்கேயிருந்து கொழும்புக்கு உடனடியாக இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் புதிய வடபகுதித் தளபதியாக வன்னி மாவட்ட இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த மேஜர் ஜெனரல் அன்டன் விஜேந்திரா நியமிக்கப்பட்டுள்ளார்.

எனவே அரசியல் கோதாவில் மட்டுமல்ல; இராணுவ வட்டாரத்தில் கூட மோதல்கள் தோன்றியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு இன்னும் ஒரு சில வாரங்களே எஞ்சியிருக்கையில் ஆளுந்தரப்புக்கு உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்தத்தை முன்னெடுப்பதில் ஏற்பட்டுள்ளதேல்வி மற்றும் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் தொடரும் மோதல்கள் என்பவை மிகுந்த சங்கடத்தையே ஏற்படுத்திவிட்டுள்ளன.

தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை இழப்பதற்கு எதுவும் இல்லை என்ற நிலையே காணப்படுகின்றது.

ஏனெனில் எப்போதுமே ஏமாற்றங்களுக்குப் பழக்கப்பட்டவையாகவே தமிழ் அரசியல் கட்சிகள் விளங்குகின்றன.

எனவே பாராளுமன்றம் இம்மாத முடியில் கலைக்கப்படும் பட்சத்தில், தோன்றவுள்ள தேர்தல் காலம், ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே ஏற்பட்ட உடன்பாடு முறிவடைந்தநிலையில் மிக மூர்க்கமான பிரசாரங்களுக்கு களம் அமைத்ததாக இருக்குமென்றே எதிர்பார்க்க முடிகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



**மறைந்த அமைச்சர்** தர்மசிறி சேனநாயக்கா மனிதருள் ஒரு மாணிக்கம் என்றால் அது மிகையாகாது. தமிழ் மக்கள் மீது அப்பழுக்கற்ற அன்பு கொண்டிருந்தவரே மறைந்த தர்மசிறி சேனநாயக்கா. ஓரிரு வருடங்களுக்கு முன்னர் தமிழில் தேசிய கீதம் பாடுவது தொடர்பாக சர்ச்சை எழுந்திருந்தது. அப்போது தமிழில் தேசியகீதம் இசைப்பதற்கு எவரும் தடைபோடமுடியாது. சிங்கள மொழிக்குள்ள உரிமையே தமிழுக்குமுண்டு எனப் பாராளு மன்றில் ஆணித்தரமாகக் கூறியிருந்தார் தர்மசிறி சேனநாயக்கா. கொழும்பு ஆனந்தாக் கல்லூரி பழைய மாணவரான தர்மசிறி சேனநாயக்காவின் ஆசான்களாக தமிழர்களே இருந்துள்ளனர். அவருக்கு ஆனந்தாவில் ஆங்கிலம் கற்பித்தவர் தமிழரான தனபாலசிங்கம் என்ற ஆசிரியரே என்பதும் குறிப்பிடத்தக்கது.

**தனது முதல் திருமணத்தைக்** கோட்டைவிட்ட கிரிக்கெட் அணித்தலைவர் சனத் ஜயசூரியவுக்கு இரண்டாவது காதல் மலர்ந்துள்ளதாம். பெண்ணொரு அழகி என்பது மட்டுமே தெரியுமே தவிர ஏனைய விபரங்கள் பெரிதாக வெளிச்சத்துக்கு வரவில்லை. மின்னுவதெல்லாம் பொன்னல்ல. அழகிலேயே ஆபத்துமிருக்கும். முதலாவது இன்னிங்ஸில் நம்பி ஏமாந்ததுபோல இரண்டாவது இன்னிங்ஸிலும் சனத் ஏமாறாமல் இருந்தால் சரி.

**வடக்கே புலி வேட்டைக்குப்** பொறுப்பான இரு முக்கிய தளபதிகளுக்கிடையே மோதல். இருவரும் கொழும்புக்கு இட மாற்றஞ் செய்து புதியவரை வடக்கிற்குப் பொறுப்பாக எல்லாம் வல்ல அம்மையார் நியமித்துள்ளார். ஒருவருக்குத் தெரியாமல் மற்றொருவர் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு இழப்புக்களை ஏற்படுத்தியிருந்தனராம் வடபகுதித் தளபதிகள். இராணுவ வீரர்களது உயிர்கள் தளபதிகளின் போட்டி பூசல்களால் வீணே விரயமாகுது.

**கிரிக்கெட்டிலிருந்து** ஓய்வு பெறவிருக்கும் அர்ஜுன ரணதுங்க அரசியல் களத்தில் குதிக்கவிருக்கிறாராம். ரணதுங்கவின் குடும்பமே அரசியலுடன் சம்பந்தப்பட்டது. தந்தையார் ரெஜி ரணதுங்க பிரதி அமைச்சராக இருக்கிறார். சகோதரர் ஒருவரும் அரசியலிலீடுபட்டுள்ளார். ரணதுங்கவின், அரசியல் பிரவேசம் என்பது அவர் விருப்பம். ஆனால் அவர் சேர்ந்து கொள்ள முன்வந்திருக்கும் அரசியல் கட்சிதான், குறுகிய எல்லைகளைக் கொண்டிருக்கிறது. உலகக் கிண்ணத்தை வென்றவர் தமது நோக்கங்களை குறுகிய அரசியல் நோக்கங்களுக்குள் வைக்கலாகாது.

**மூதுபெரும் பத்திரிகையாளர்** எஸ்.எம்.கோபாலரத்தினம் கிழக்கிலங்கையில் கௌரவிக்கப்படுகிறார். தனித்துவமுடன் துணிச்சலாக பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவரே எஸ்.எம்.ஜி.யாழ்ப்பாணத்தின் ஈழநாடு பத்திரிகையில் தமது முத்திரையைப் பதித்து புகழ் பெற்ற இப்பத்திரிகையாளருக்கு மட்டக்களப்பில் எடுக்கப்படும் பாராட்டுவிழா பத்திரிகைச் சமூகத்தின் மாண்பினை உயர்த்துவதாகவும் இருக்கின்றது.

# நடந்த கதை

# அடக்க முடியாத ஆசை!

## உண்மையில் நடந்த கதை

**( 2 வாரங்கள் மட்டும்)**

**அவள் ஓர் அழகி. பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும் அளவளவான அவயவங்கள். ஆசிரியரான அவள் கணவர் ஒரு நாள் படுக்கையில் பிணமாகக் கிடந்தார். பொலிஸ் விசாரணை பல நாட்கள் தொடர்ந்தும் பலனில்லை. குற்றவாளி அகப்படவேயில்லை. பள்ளியில் பணிபுரியும் பியூன் கொடுத்த துப்பினால் கொலையாளி யார் என்பதை அறிந்து அவரிடமே வாக்கு மூலம் பெறப்படுகிறது.**

### புஷ்பா தங்கத்துரை

அந்த ரூபாவைத் தீவிரமாக விசாரிப்பது தான்! குறிப்பாக, அந்தக் கட்டிலில் கிடைத்த அந்த அந்நியனின் ரேகைதான் அவருக்கு அடிப்படையாக இருந்தது.

"கொலை நடந்தபோது தோழி வீட்டிலே இருந்தீங்க? அந்தக் குறிப்பிட்ட இராத்திரியிலே மட்டும் ஏன் போனீங்க?" என்றார் அவர்.

"அன்னிக்குத்தான் போகத் தோணியது, சார்!"

"இதுக்கு முன்னாடி அங்கே போயிருக்கீங்களா?"

"எத்தனையோ வாட்டி போயிருக்கேன்!"

"நீங்க போனது நரேந்திரனுக்குத் தெரியுமா?"

"அவர்கிட்டே அனுமதி வாங்கிட்டுத் தான் போவேன்!."

அந்தத் தோழியையும் அசோக் விடவில்லை. அவளையும் தீவிரமாக விசாரித்தார்.

அவர் செய்ய வேண்டியது எல்லாம் செய்துவிட்டதாகத் தோன்றியது! கேஸ் நெக்கு விடவில்லை! எங்கேயோ உண்மை மறைந்து கிடந்தது!

"என்ன சொல்லேன்? சொல்லு! கூச்சப் படாமல் சொல்லு!"

"கேசவன்னு ஒரு பையன் இருக்கான். அவன் ரூபா அம்மாவைப் பற்றி கெட்ட வார்த்தையெல்லாம் சொல்லுவான் சார்!"

"என்ன சொல்வான்?"

"அவங்களோடு படுத்துக்கிட்டதாகச் சொல்லுவான் சார்."

அசோக்கின் பார்வை எங்கேயோ வெறுமையானது.

"அப்படியா? என்னன்னு சொல்வான்?"

"ரூபா அம்மாவுக்கு இன்னது இப்படி இருக்குன்னு சொல்வான் சார்!"

"ஏன் அதில என்ன தவறு?"

"அப்படி இல்லை சார். அவள் அந்தரங்கம் எல்லாம் எப்படி இருக்குனு சொல்வான் சார்!"

"அப்படியா அவனுக்கு ரூபாவோடு தொடர்பு உண்டா?"

"இருக்கணும் சார்! இல்லாமல் அவ்வளவு தத்ரூபமாகச் சொல்ல முடியாது சார்!"

"ரூபா சம்மதிச்சிருப்பாளா?"

"சம்மதிக்காமல் எப்படி போயிருப்பாள்? இவன் மட்டுமில்லை சார்! இன்னொரு பையன் சந்திரசேகரன்னு பேரு! அவனும் அப்படிச் சொல்றான் சார்!"

"இரண்டு பேரும் இரண்டு கிடாப் பசங்க சார்!" அசோக்குக்கு புதுத்தடயம் கிடைத்தது. யோசித்தார்.

இந்தச் சமயத்தில் தான் கைரேகை நிபுணரை அவர் எதேச்சையாகச் சந்திக்க நேர்ந்தது.

"சார்! கட்டில் மேலே கிடைச்ச ரேகை இருக்கே, அது ஒரு பையன் ரேகை. சைஸ் சின்னதா இருந்திச்சு!" என்றார் அவர்.

அசோக்குக்கு அந்தச் செய்தி மனத்தில் நெருடியது.

'வயதில் சிறியவர்கள் யாராவது



நரேந்திரன் வீட்டுக்கு வருவார்களா? அவர்கள் யாராக இருக்கும்?' அப்போது தான் நரேந்திரன் ஓர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக இருந்தது நினைவுக்கு வந்தது.

அவரது பள்ளிப் பிள்ளைகள் யாராவது வீட்டுக்கு வருவார்களா?

பள்ளியில் சென்று நாசூக்காக வினவினார்.

பியூன் சுப்பையா ஒரு சரியான நபராகத் தோன்றினான்.

"நரேந்திரன் வீட்டுக்கு பசங்க போவாங்களா?" என்று அவனிடம் கேட்டார்.

"போவாங்க சார்! அவரே அழைச்சிட்டுப் போவாரு."

"அவர் வீட்டிலேதான் டியூஷன் நடக்குமா?"

"இல்லை சார். ஸ்கூல் முடிஞ்சவுடனே இங்கேயே நடத்திட்டுப் போயிடுவாரு! அங்கேயும் சமயத்திலே சொல்லிக் கொடுப்பாரு!"

"சரிப்பா! வீட்டிலே நரேந்திரனும், அவங்க மனைவியும் எப்படி இருப்பாங்க? அதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கியா?"

சட்டென்று சுப்பையாவின் முகத்தில் ஒருவித மாறுதல் ஏற்பட்டது.

"சொல்லுப்பா? என்ன விஷயம், சொல்லு?"

"ஒண்ணுமில்லை சார். ஏதாவது பேசிப்பாங்க!."

பியூன் சுப்பையாவின் உதவி மூலம் கேசவனின் கைரேகை ஒரு கண்ணாடி தம்ளரில் படும்படி ஏற்பாடு செய்து கொண் டார்!

அந்த ரேகையை நரேந்திரனின் வீட்டுக்குள் இருக்கும் கட்டிலில் கிடைத்த ரேகையோடு ஒப்பிட்டுப் பார்த்தார்.

பொருந்திவிட்டது.

ஆச்சரியம்! நேராக ஸ்கூலுக்கு வந்தார். கேசவனைத் தனியாக அழைத்துப் போய் விசாரித்தார். நல்ல கிடாப் பையன்தான்!

வளர்த்தி அதிகம்.

கேசவனை லேசில் மசிய் வைக்க முடியவில்லை. கூச்சமும் பயமும் தடை செய்தன.

அவனை ஒரு இயல்பான நிலைக்குக் கொண்டு வந்த பிறகு பேச ஆரம்பித்தார்.

கேசவனுக்கு பெரிய குஷி வந்தது. அசோக்கிடம் வெளிப்படையாகப் பேசினான்.

"ஆமாம். அந்த ரூபா உன்னை 'லவ்' பண்ணினாங்களா?"

'லவ்' இல்லை சார். என்னைப் பிடிக்கும்."

"சரி! எப்படி இந்தப் பழக்கம் வந்தது? அடிக்கடி வீட்டுக்குப் போனியா?"

"எப்பவாவது போவேன். ரூபா அம்மாவும், சாரும் சண்டை போட்டுப்பாங்க சார்!"

சட்டென்று அசோக் மேலே முகத்தை தூக்கினார். "சண்டை போட மாட்டாங்கன்னு கேள்விப்பட்டேனே?"

"எல்லாத்துக்கும் போட மாட்டாங்க. ஒரு விஷயத்துக்கு மட்டும் போடுவாங்க. அதை எனக்குப் புரிஞ்சுக்கத் தெரியாதுன்னு ஜாடைமாடையாகப் பேசிப்பாங்க. ஆனால் நான் புரிஞ்சுக்கிடுவேன்."

"என்ன விஷயம்? சொல்லேன்?."

"அந்த அம்மா ஆசிரியரை அடிக்கடி படுக்கைக்குக் கூப்பிடுவாங்க!"

"நீ இருக்கும் போது கூடவா?"

"ஆமா சார்! எனக்கு எதுவும் தெரியாதுன்னு நினைப்பாங்க!"

"உன்னோடு எப்படி தொடர்பு ஏற்பட்டுது?

"அதான் சார் ஆச்சரியம்! அந்த அம்மாவுக்கு என்னைக் கண்டாலே பிடிக்காது. இவனை எல்லாம் ஏன் வீட்டிலே சேர்க்கிறீங்க?" என்று திட்டுவாங்க."

"அவ்வளவு வெறுப்பா?"

"ஆமாம்! அப்புறம் என்ன நடந்ததுன்னு தெரியலை! கொஞ்ச காலமா அவங்க வீட்டுக்குப் போறதை நிறுத்திட்டேன்! ஒரு நாள் ஆசிரியரைத் தேடி வீட்டுக்குப் போனேன்."

அசோக் பார்வையை அழுத்தினார்.

"அப்போ அவங்க அலங்கோலமா இருந்தாங்க! என்னைக் கோபமாகப் பார்த்தாங்க! ஓடி வந்து என்னைப் பிடிச்சாங்க! பயந்துட்டேன்! திமிறப் பார்த்தேன்! விடல்லை!"

பையன் தயங்கினான்.

"அப்புறம் சொல்லு!"

"படுக்கை அறைக்குக் கொண்டு போனாங்க. கதவைத் தாழ்ப்பாள் போட்டாங்க! படுக்கையிலே என்னை உட்கார்த்தினாங்க! அப்புறம் சொல்றதுக்கு வெட்கமா இருக்கு சார்!"

"சொல்லு, பரவாயில்லை; நான் யாருகிட்டேயும் சொல்லமாட்டேன்!"

"அங்கே போய் கெட்டது செஞ்சாங்க!"

"அப்புறம்?"

"கையிலே 50 ரூபா கொடுத்து என்னை நல்லாச் சாப்பிடச் சொன்னாங்க. இன்னொரு நாள் வரச் சொன்னாங்க."

"போனியா?"

பையன் தலைகுனிந்தபடி தலையாட்டினான்.

பையனுக்கும் உடல் உறவிலே இச்சை வந்துவிட்டது.

ரூபா, அதை நன்கு பயன்படுத்திக் கொண்டாள். சில தினங்களில் அவனுக்கு அவள் மாத்திரைகளைக் கொடுத்து அவனது இன்ப நிலையை வெகுநேரம் நீட்டி வைத்தாள்.

இந்த விதத்தில் உறவு தொடர்ந்திருக்கிறது.

இது போதுமானதாக இருந்திருக்கிறது, அசோக்குக்கு! அடுத்தது ரூபாவை விசாரித்தார். வெளிப்படையாக, தைரியமாக விசாரித்தார்.

அவள் தயங்கினாள்.

"சொல்லுங்க மேடம்! நீங்க சொல்லாட்டி, அந்தப் பையன் கேசவனைப் பிடிச்சு, அவன்தான் நரேந்திரனைக் கொன்னான்னு தூக்கிலே போடப் போறோம்!."

குரூரமாக அதைச் சொல்ல, அவள் விசித்தாள்!

"சொல்றேன் சார்! நான் என் கணவர் நரேந்திரன்கிட்டே அதிகம் உறவு எதிர்ப்பார்த்தேன். அதனாலே என்னை 'ராட்சசி'ன்னு சொல்லி எரிஞ்சு விழுவாரு. கடைசியில் என் பசிக்கு கேசவன் பலியானான்.

உலகத்திலே நான் ஒரு பெண்ணாகப் பிறந்திருக்கக் கூடாது! எனக்கு ஏன் அவ்வளவு பசி வந்ததுன்னு தெரியாது! ஒரு லேடி டாக்டரைக் கேட்டேன்! இது மனக்கோளாறு. இதற்கு மருந்து கிடையாது என்று சொல்லிட்டாங்க. உண்மையிலே இது ஒரு மனநோய் தான் சார்! எனக்கு வேகம் வந்தா, தாங்க முடியாது சார்! அந்தச் சமயத்திலே எனக்கு அறிவே மழுங்கி விடும். அதனாலேதான் அந்த அநியாயத்திற்கும் இடம் கொடுத்தேன்!"

பெருமூச்சு விட்டார் அசோக்.

"ஆனால் சார்! என் வேகம் போய் நான் நார்மல் ஆயிட்டேன்னா, நான் செஞ்ச காரியத்தை நினைச்சு நானே வருத்தப்படுவேன் சார்! என் மேலே எனக்கு வர்ற ஆத்திரத்துக்கும், கோபத்துக்கும் கணக்கு வழக்கே கிடையாது சார்!" என்றாள் ரூபா.

"என்ன ஆச்சு? சொல்லுங்க...!"

"சொல்றேன். கொஞ்ச நாளிலே என் மேல உள்ள வெறுப்பும் அதிகமாச்சு! என்னை இந்த நிலைக்கு இவர்தானே ஆளாக்கினார்னு நினைச்சேன்! அவர் மேலேயே ஆத்திரம் வந்திச்சு! என்னை படுமோசமான நிலைக்கு ஆளாக்கிட்டாருன்னு நினைச்சேன். அவரைத் தீர்த்துக் கட்டணும்னு நினைச்சேன்," என்றாள்.

கேஸ் பெரிய பரபரப்பை உண்டு பண்ணியது! கோர்ட்டில், நீதிபதி வெளியாருக்குத் தெரியாமல் பல விசாரணைகள் நடத்தினார்!

நீதிபதி, இந்த கேசை ஒரு அனுதாபத்துடன் மன்னித்திருக்க வேண்டும்.

ரூபாவுக்கு இரண்டு ஆண்டுகள் தண்டனை கொடுத்தார். சமூக சேவை ஆட்கள் ரூபாவை நன்கு கவனித்து, மனம் திருந்த உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

(நடந்த கதை முடிந்தது)

## மீண்டும் மீண்டும் திருமணம்



திருமணம் செய்து கொள்வதில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆசை. கப்பலில், விமானத்தில், பரசூட்டில், புகையிரதத்தில் என்று தமக்குப் பிடித்தமான இடங்களில் திருமணம் செய்து தமது ஆசைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

ஆனால் அமெரிக்கத் தம்பதி ஒன்று திரும்பத்திரும்ப மணமுடித்துப் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றார்கள். ஜோடி ஒன்றுதான். திருமணங்கள் தான் வெவ்வேறு இடங்களில்.

இதுவரை 11 முறை திருமணம் செய்துகொண்டுள்ள இத்தம்பதியின் பெயர் சாம் சில்வர்ஸ்டீன்-லிஸா. பூங்கா, புல்வெளி, காடு என்று தமக்குப் பிடித்தமான எந்த இடத்தைக் கண்டாலும் உடனே திருமணம்தான்.

இவர்களது முதல் திருமணம் நடந்தது கென்யாவில் உள்ள புல்வெளியில். இரண்டாவது திருமணம் பாலி என்ற இடத்தில் உள்ள பூங்காவில், மூன்றாவது திருமணம் ஜெருசலம் நகரில் உள்ள அருங்காட்சியகத்தில்.

இதைத் தொடர்ந்து ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து, வெர்ஜின் தீவு, ஃபிஜி, லேக்தகே, நிவடா, பராவே, கரீபியன் கடற்கரை ஆகிய இடங்களில் திருமணம் செய்து கொண்டார்கள்.

எதற்காக மீண்டும் மீண்டும் திருமணம் செய்கிறீர்கள் என்று கேட்டால்.

"வாழ்க்கையை ஆனந்தமாகக் கொண்டாட எத்தனையோ பேர் எத்தனையோ வழிகளைக் கையாள்கிறார்கள். எங்களுக்குத் தெரிந்த வழி இதுதான்!" என்கிறார்கள் அவர்கள்.

## கிரிக்கெட் விபரீதம்

கிரிக்கெட் சூதாட்ட விவகாரம் இந்தியாவில் ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கும் வேளையில் இன்னொரு கிரிக்கெட் விபரீதம் இங்கிலாந்தில் நடந்தேறியிருக்கிறது.

வடக்கு இங்கிலாந்தில் 'ஷோல்ஸ் கிரிக்கெட் கிளப்' என்று ஒரு கிரிக்கெட் கிளப் இருக்கிறது. அந்தக் கிளப், கிரிக்கெட் போட்டியொன்றில் விளையாடி கோப்பையை வென்று விட்டது.

வெற்றியைக் கொண்டாடுவதற்காக அவர்கள், கிளப் மைதானத்தில் மின்னொளியில் பிறந்தமேனியுடன் கிரிக்கெட் விளையாடினார்கள். இது வெளியில் யாருக்கும் தெரியவில்லை.

இருப்பினும் அவர்கள் போட்ட கூச்சலால், வீதியில் சென்று கொண்டிருந்தவர்கள் வந்து எட்டிப் பார்த்திருக்கிறார்கள். அவர்களது கோலத்தைக் கண்டு திடுக்கிட்டு, உடனே பொலிசுக்கு அறிவித்து விட்டார்கள்.

சிறிது நேரத்தில் அங்கு விரைந்த பொலிஸார், கிரிக்கெட் வீரர்களை உடைகளை அணியச் செய்து, இனிமேல் இவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது என்று எச்சரித்து விட்டுச் சென்று விட்டனர்.

'வெற்றியைக் கொண்டாட-அதற்காக இப்படியா?, என்கிறீர்களா? அதுவும் சரிதான்.

## அரண்மனை ஊழியர்கள் நீக்கம்

இங்கிலாந்து மகாராணி எலிசபெத், தனது மாளிகையில் பணிபுரிந்த 4 ஊழியர்களைத் திடீரென வேலை நீக்கம் செய்துள்ளார்.

இவர்கள் நீக்கப்பட்டதற்குக் காரணம் என்ன?

வின்ஸ்டர் மாளிகையில் பணிபுரிந்து வந்த இந்த 4 ஊழியர்களுக்கும் நீண்ட நாட்களாக ஓர் ஆசை. மாளிகையில் விருந்தின் போது பரிமாறும் உயர்ரக மதுபானத்தை அருந்த வேண்டும் என்று.

அண்மையில் யாருக்கும் தெரியாமல் அந்த மதுபானத்தை எடுத்து, தமது நீண்ட நாள் ஆசையைத்தீர்த்துக் கொண்டனர்.

இவர்கள் செய்த காரியம் யாருக்கும் தெரியாது என்று நினைத்தது தான் தவறு.



இவர்களுடன் பணிபுரியும் மற்ற ஊழியர்கள் போட்டுக் கொடுத்து விட்டனர்.

## வாழைப்பழம் உண்ண உத்தரவு

'வாழைப்பழம் சாப்பிட்டு விவசாயிகளைக் காப்பாற்றுங்கள்' என்று தாய்வான் நாட்டுப் பாராளுமன்றத்தில் 12 சட்டவல்லுநர்கள் பாட்டாகவே பாடி இதை வலியுறுத்தி இருக்கிறார்கள்.

இதையடுத்து தாய்வான் இராணுவத்தினருக்கு, 'அதிக வாழைப்பழங்களைச் சாப்பிடுங்கள்' என்று உத்தரவு போடப்பட்டுள்ள' தாம். அத்துடன் மொத்த வியாபாரிகள், பல்பொருள் அங்காடிகளில் சிறப்பு விற்பனை மூலம் அதிக வாழைப்பழங்களை விற்பனை செய்யச் சொல்லியும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

தாய்வான் பாராளுமன்ற சபாநாயகர் 60 ஆயிரம் கிலோ வாழைப்பழத்தை வாங்கி வந்து, அதில் ஒரு பகுதியைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விற்று விட்டு, மீதியானவற்றை இலவசமாகக் கொடுத்து விட்டாராம்.

இதற்கெல்லாம் என்ன காரணம்?

தாய்வானில் வாழைப்பழம் அதிகம் விளைகிறது. அடுத்து, ஜப்பானுக்கு ஏற்றுமதியாவது தடைப்பட்டுள்ளது. தாய்வானில் 19 ஆயிரத்து 770 ஏக்கர்களில் வருடத்திற்கு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் தொன் வாழைப்பழம் உற்பத்தியாகின்றது.

## ஓரினச்சேர்க்கை ஊர்வலத்தில் ஹிலாரி

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் மனைவி ஹிலாரி அண்மையில் நியூயோர்க் நகரில் நடந்த பிரமாண்டமான ஊர்வலத்தில் கலந்து கொண்டார்.

நியூயோர்க் நகர ஆட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஹிலாரி, ஊர்வலத்திற் கலந்து கொள்வது ஒன்றும் பெரிய விடயம் இல்லையே என்கிறீர்களா?


ஹிலாரி கலந்து கொண்டது, பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் நடத்திய ஊர்வலத்தில்.



'அந்த ஊர்வலத்தில் ஹிலாரி ஏன் கலந்து கொண்டார்? அப்படியானால்?' என்று நினைக்கத் தோன்றும்.

அந்தளவிற்குக் கற்பனை செய்யவேண்டாம். காரணம் இதுதான்.

அந்த ஊர்வலத்தில் சுமார் 5 இலட்சம் பேர் கலந்து கொண்டனர். அந்த 5 இலட்சம் வாக்குகளைத் தன்பக்கம் இழுத்துக் கொள்ளவே ஹிலாரி ஊர்வலத்தில் கலந்து கொண்டார்.



## வலம் வரும் ஜோதி

→ விநோதமான ஆயுதமொன்றைக் கையில் ஏந்தியபடி நடனமாடி வரும் இவரைப் பார்த்தால் ஓர் ஆதிவாசி என்றே நினைப்பீர்கள். இவர் ஆதிவாசியுமல்ல. இவர் கையில் வைத்திருப்பது ஆயிதமுமல்ல.

புத்தாயிரமாம் ஆண்டின் முதல் ஒலிம்பிக் போட்டி அவுஸ்திரேலியநகரான சிட்னியில் வரும் செப்டெம்பர் 15ம் திகதி ஆரம்பமாவதை அறிவீர்கள்.

இதன் ஆரம்பக்கட்டமாக ஒலிம்பிக் ஜோதி 100 நாட்களுக்கு அவுஸ்திரேலிய நாடு முழுவதும் வலம் வருகிறது. அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரில் ஒலிம்பிக் ஜோதியைக் கையில் ஏந்தியபடி தனது ஓட்டத்தைத் தொடங்குகிறார் இந்த வீரர்.

## பறக்கும் மனிதன்


← மிக மிக உயரமான இடங்களில் இருந்து குதித் துச் சாகசங்கள் புரிவது மேலை நாடுகளில் சாதாரண விஷயங்களாகி விட்டது. மலை உச்சி, உயரமான கட்டடங்கள் என சாகசங்கள் புரிய களங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

நியூஸிலாந்தின் 'சாம்பிக்கன்' மலைச் சிகரம் ஐயாயிரத்து 905 அடி உயரம். இதன் உச்சியில் இருந்து வூலி கிகென்ஸ்காட்ஸ் என்ற 27 வயது இளைஞர் பரசூட் மூலம் குதித்துச் சாகசம் செய்வதையே படத்தில் பார்க்கிறீர்கள்.

மலை உச்சியில் இருந்து பறப்பது போன்று குதித்த 13 விநாடிகளுக்குப் பிறகே பரசூட் விரிய ஆரம்பித்தது.

## தகவல் பெட்டி






## பகுதி நேர வேலை

← பணக்காரர்களின் விளையாட்டு என்று கூறப்படும் கோல்ஃப் விளையாட்டு உபகரணங்களைத் தள்ளுவண்டியில் வைத்துத் தள்ளிக் கொண்டுச் செல்வதற்கு ஒருவர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பார்.

இங்கு கோல்ஃப் உபகரணத் தள்ளுவண்டியைத் தள்ளிச் செல்வது அபு என்ற சேர்க்கஸ் யானை. அவுஸ்திரேலியாவின் விக்டோரியா லியோன்கதா கோல்ஃப் கிளப்பில் சேர்க்கஸ் யானைகள் தள்ளுவண்டியைத் தள்ளிச் செல்லும்.

சேர்க்கஸ் பணி போக மற்ற நேரங்களில் பகுதி நேர வேலையாக யானைகள் இந்த வேலையைச் செய்கின்றன.

மனிதர்கள் மட்டும் தான் பகுதி நேரவேலை செய்ய வேண்டுமா என்ன?

## மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

↓ தலைக்கவசம் அணிந்தபடி வாயைக் கட்டிக் கொண்டு ஊர்வலமாகச் செல்பவர்கள் ஜப்பானிய மாணவர்கள்.

ஏன் இந்த ஊர்வலம்?

அமெரிக்காவுடன் ஜப்பான் இராணுவக் கூட்டு வைத்திருப்பதைக் கண்டித்துத் தான் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடந்தது.

ஜப்பானின் ஒகினாவோ நகரில் ஜி.8 நாடுகளின் கூட்டம் நடைபெற்றது. இந்த இடத்தை நோக்கி ஜப்பானிய மாணவர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்றது.

## அணியும் கணினி அதிசயம்

↓ தினம் தினம் புதிது புதிதாகக் கணினிகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. படத்தில் இருக்கும் கணினியின் பெயர் அணியும் கணினி (வெயரபிள் கொம்பியூட்டர்) ஆகும்.

கைவிரல்களின் அசைவில் கீபோர்ட்டை உபயோகித்து, வலது கண்ணுக்கு அருகில் உள்ள சிறிய திரையில் புரோகிராம் செய்து கொள்ளலாம்.

ஐபிஎம் கம்பனியுடன் இணைந்து ஒலிம்பஸ் கம்பனி இந்த அதிசயக் கணினியைத் தயாரித்துள்ளது





# விருதைத் தவறவிட்ட விக்ரம்

கடந்த ஆண்டிற்கான தேசிய திரைப்பட விருதுகள் அண்மையில் அறிவிக்கப்பட்டு விட்டன. விருதுகள் அறிவிக்கப்படும் போது ஒவ்வொரு முறையும் ஏமாற்றங்களும் ஏற்பட்டு விடுகின்றன.

சென்ற ஆண்டில் 'ஹேராம்' படத்திற்காக சிறந்த இயக்குநர் மற்றும் சிறந்த நடிகர் விருதுகள் கமலுக்குக் கிடைக்காதது பலருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

எனினும் சிறந்த நடிகராக தேர்வு செய்யப்பட்ட மலையாள நடிகர் மோகன்லாலும் சரியான தேர்வுதான். 'வானப் பிரஸ்தம்' என்ற மலையாளப்படத்தில் கதகளிக்கலைஞராக நடித்ததற்காக விருதுபெற்றார் மோகன்லால். இதற்கு முன் 'பரதம்' என்ற மலையாளப்படத்திற்காக மோகன்லால் சிறந்த நடிகருக்கான தேசிய விருது பெற்றுள்ளார்.

மோகன்லாலுக்கு அடுத்ததாக ஒரிரு வாக்குகள் வித்தியாசத்தில் வந்த 'சேது' விக்ரம் சிறந்த நடிகருக்கான விருதைத் தவறவிட்டு விட்டார்.

## லிவிங்ஸ்டன் ஜோடியாக கௌசல்யா நடிக்கும்

# 'எங்களுக்கும் காலம் வரும்'

'வைகாசி பொறந்தாச்சு' படத்தில் இருந்து அண்மையில் வெளியாகி வெற்றிபெற்ற 'தை பொறந்தாச்சு' உட்பட பல படங்களைத் தயாரித்த பிரபாகரனின் அம்பாலயா பிலிம்ஸ் பட நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் 'எங்களுக்கும் காலம் வரும்'.

இப்படத்தில் லிவிங்ஸ்டன்-கௌசல்யா ஜோடியாக நடிக்கிறார்கள். 'சொல்லாமலே' படத்திற்குப் பின் இவர்கள் இணைந்து நடிக்கும் படமிது.

இவர்களுடன் வடிவேலு, விவேக், மணிவண்ணன், பிருதிவிராஜ், கோவைசரளா, பாண்டு, வையாபுரி உட்பட பலர் நடிக்கின்றனர்.

திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் புதிய இயக்குநர் பாலருபன் இவர் விசேகரின் பல படங்களில் இணை இயக்குநராகப் பணியாற்றியவர்.

முழுக்க முழுக்க நகைச்சுவை ததும்பும் குடும்பக்கதையாக உருவாகும் இப்படம் தீபாவளித் திருநாளில் வெளிவரும்.

# சபாஷ் சேரன்

முதல் படத்தில் ஜாதி, இரண்டாவது படத்தில் ஊனம் என்று படத்துக்குப் படம் நல்ல கருத்துக்களைச் சொன்ன இயக்குநர் சேரன் மூன்றாவது படத்தில் மக்கள் பிரச்சனையைச் சொல்லப் போய் அரசியல்வாதிகளால் படாதபாடுபட்டு விட்டார்.

தற்போது ஓடிக்கொண்டிருக்கும் 'வெற்றிக்கொடி கட்டு' படத்தில் 'வெளிநாட்டு வேலை' என்கின்ற பெயரில் பணமோசடிக்களாக்கிக் கஷ்டப்படுவதை நன்றாகக் கூறியுள்ளார் சேரன்.

சினிமாவை வெறும் பொழுதுபோக்குக்காக மட்டுமல்லாமல் நல்ல விஷயத்திற்குப் பயன்படுத்தும் சேரனுக்கு ஒரு சபாஷ்.

## தயாரிப்பாளராக்கிய படம்


'அலைபாயுதே' படத்தின் தெலுங்கு உரிமையை வாங்கிய அசோக்குமார், பிரசாத் என்ற தயாரிப்பாளர்கள் அதை 'சகி'என்ற பெயரில் மொழிமாற்றிவெளியிட்டார்கள்.

தமிழை விட தெலுங்கில் 'அலைபாயுதே' வசூலை வாரிக்குவித்தது. இந்த வெற்றியைத் தொடர்ந்து அசோக்குமார், பிரசாத் முதன் முறையாகப் படமொன்றைத் தமிழில் தயாரிக்கவுள்ளார்கள்.

இப்படத்தில் கதாநாயகனாக 'அலைபாயுதே' மாதவன் நடிக்கவுள்ளார்.



மாளவிகா-முரளி-
படம்: வெற்றிக்



பிரகாஷ்ராஜ்-மாஸ்டர் கார்த்திக்-பேபி ஐஸ்வர்யா
படம்: சின்னச் சின்னக் கண்ணிலே



பாவனா
படம்: தசமி

# காதோடு சொல்லுகிறோம்

இடுப்பு மடிப்புக்குப் பேர் போன 'அம்ச'மான நடிகைக்குச் சத்தமாகப் படங்கள் இல்லை. சின்னத் திரையில் சில காலம் சில்லறை பார்த்தார். இப்போது அங்கும் வாய்ப்புக்கள் இல்லையாம் எனவே நடிப்புக்கு டாட்டா சொல்லிவிட்டு திருமணம் செய்து கொள்ளப் போகிறாராம்.

நகைச்சுவை வேடங்களில் 'சரள'மாக நடித்து வரும் நடிகை 'வைகை' நகைச்சுவை நடிகருடன் நெருக்கமாக நடித்து வருகிறார். இவரது மார்க்கெட்டை விட 'விவேக' நகைச்சுவை நடிகரின் மார்க்கெட் ஏறுமுகமாக இருப்பதால், 'விவேக' நடிகருக்கு ஜோடியாக நடிப்பதில் ஆர்வம் காட்டி வருகிறாராம் அந்த நடிகை.

நடன மாஸ்டரை 'லல்லி' வந்த 'சிம்ம' நடிகை படப்பிடிப்புத்தளங்களில் மிகுந்த சோகத்துடன் காணப்படுகிறாராம். யாருடனும் பேசுவது கூட இல்லையாம். இயக்குநர் சொல்வதை மட்டும் செய்து விட்டு போய்விடுகிறாராம். நடிகையின் காதல் வாழ்க்கையில் ஏற்பட்ட சிக்கல்கள் தான் இந்த விரக்திக்குக் காரணமாம்.

மணியான இயக்குநரின் 'அலை'யான படத்தின் அறிமுக நாயகன் கதை, கதாபாத்திரம் பற்றிக் கவலைப்படுவதில்லையாம். பெட்டியில் துட்டு எவ்வளவு என்பதைத்தான் முக்கியமாகப் பார்க்கிறாராம். அவர் எதிர்பார்ப்பது கிடைத்து விட்டால் உடனே ஓ.கே. சொல்லி விடுகிறாராம்.

சிகர இயக்குநரின் சீடரான 'வசந்த'மான இயக்குநர் மீது கடும் கோபத்தில் இருக்கிறாராம் 'சங்கம' நாயகி. இயக்குநர் தனது படத்திலிருந்து அந்த நடிகையை நீக்கி விட்டு, அவருக்குப் பதிலாக 'கவி' நடிகை ஒப்பந்தம் செய்திருப்பதுதானாம், நடிகையின் கோபத்துக்குக் காரணம்.

## மீசை இல்லாத அஜித்

'சேது' பாலா இயக்கத்தில் 'நந்தா' படத்தில் நாயகனாக நடிப்பதாக இருந்த அஜித்குமார், இப்போது அதில் நடிக்கவில்லை. இப்படத்தைத் தயாரிக்கவிருந்த பூர்ணசந்திர ராவும் இப்போது அதைத் தயாரிக்கவில்லை.

'நந்தா' படத்தை வேறொருவர் தயாரிக்க, சூர்யா கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

தற்போது 'சிட்டிசன்' படத்தில் வித விதகெட் அப்களில் நடிக்கும் அஜித்குமார், படத்திற்காகத் தனது மீசையைத் தியாகம் செய்துள்ளார்.

# சொன்னபடி செய்து விட்டார்

சிரஞ்சீவி-சௌந்தர்யா நடித்து வெளியாகவிருக்கும் மொழிமாற்றுப் படமான 'மூத்தவன்' படத்தில் சிம்ரன் ஒரே ஒரு பாடல் காட்சியில் நடனமாடியுள்ளார்.

இந்தப் படத்தில் நடனமாடினால் தனது அடுத்த படத்தில் கதாநாயகி வாய்ப்புத்தருவதாகக் கூறித்தான் சிம்ரனை நடனமாட வைத்தார் சிரஞ்சீவி.

சொன்னது போலவே செய்து விட்டார். இப்போது சிரஞ்சீவி கதாநாயகனாக நடிக்கும் 'மிருகராஜு' என்ற தெலுங்குப் படத்தில் சிம்ரனைக் கதாநாயகியாக்கி விட்டார்.

# 'படப்பெயரான பாத்திரப்பெயர்

ஒரு படம் நன்றாக ஓடினால் அந்தக் கதை தனது சொந்த கதை என புகார் சொல்வது வாடிக்கையாகிவிட்டது.

சத்யராஜின் 'என்னம்மா கண்ணு' பட இயக்குநர் ஷக்தி சிதம்பரத்தின் மேல் புகார் சொல்லியிருப்பவர் கேசவன் என்ற புதிய இயக்குநர். இதில் எந்தளவு உண்மை என்று இது வரைத் தெரியவில்லை.

இது இருக்க, சத்யராஜை வைத்து மறுபடி ஒரு படத்தை இயக்கவுள்ளார் ஷக்தி சிதம்பரம். படத்தின் பெயர் 'குங்குமப் பொட்டுக் கவுண்டர்'. சத்யராஜின் திரையுலக வரலாற்றில் அவருக்குத் திருப்பத்தை ஏற்படுத்திய படங்களில் ஒன்றான 'முதல் வசந்தம்' படத்தில் சத்யராஜ் ஏற்றிருந்த பாத்திரத்தின் பெயர் தான் குங்குமப் பொட்டுக் கவுண்டர்.

# முகப்பில்

## விக்ரம்

## மந்த்ரா



லிவிங்ஸ்டன்-அ
படம்: நினைவ



திரையுலக மறுபக்கம் (159)

# படப்பிடிப்பில் ஏற்பட்ட பரபரப்பு

தமிழ்நாட்டிலிருந்து மயன்

பலத்த எதிர்பார்ப்புகளோடு உருவாகி வருகிறது ஒரு மூன்றெழுத்து நகைச்சுவைப் படம். பெரிய நடிகர் ஒருவருடன் இரண்டு முன்னணி நாயகிகள் கதா நாயகிகளாக நடித்து வருகிறார்கள்.

நடிகருக்கு ஜோடியாக நடிப்பவர் மூன்றெழுத்துத் தங்கை நடிகை. மற்ற நாயகி முருகனின் மனைவியின் பெயரைக் கொண்டவர். நடிகைகள் இருவரும் இந்த படத்தில் நடிப்பதற்கு முன்பே நட்பாக இருந்தவர்கள்.

படத்தில் 'நாயக' நடிகருக்கு ஜோடியாக நடிப்பதால், தங்கை நடிகை, நடிகரின் அருகிலேயே இருப்பார். இதனால் நடிகையின் 'பந்தா'வுக்கு அளவேயில்லை.

இப்படத்தின் படப்பிடிப்புக்கள் தமிழகத்தின் குளிர்ப் பிரதேசமான மூன்றெழுத்து ஊரில் நடந்து கொண்டிருந்தன. படப்பிடிப்பின் போது நடிகருடனும், படப்பிடிப்பு முடிந்த பின் படத்தின் இயக்குநருடன் அட்டை போல் ஒட்டிக் கொண்டிருந்தார் தங்கை நடிகை.

இது மற்ற நாயகிக்குக் கடும் எரிச்சலை ஏற்படுத்தி விட்டது. பொதுவாகவே தனக்குப் போட்டியாக இருக்கும் நடிகைகளைச் சகட்டு மேனிக்கு விமர்சிப்பார் இந்த நடிகை. இப்போது தன்னையும் முந்திக் கொண்டு வரும் தங்கை நடிகைமேல் இந்த நடிகைக்குப் பொறாமை.

'படவாய்ப்புக்காக நடிகரிடமும், இயக்குநரிடமும் தங்கை நடிகை எப்படியெப்படியெல்லாம் 'நெருங்கி' இருக்கிறார்.' என்று அருகிலிருந்தவர்களிடம் கேலியாகக் கூறியிருக்கிறார் மற்ற நடிகை.

அதுமட்டுமன்றி, தங்கை பக்கத்தால செல்லும்போது, நக்கலாகச் சிரிக்கவும், கொமண்ட் அடிக்கவும் செய்தார் நடிகை. முதலில் இதைக் தங்கை நடிகை கவனிக்கவில்லை.

தங்கையைப் பற்றி மற்ற நடிகை கேலியாகக் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருவர், தங்கை நடிகையிடம் சென்று அப்படியே ஒப்பித்து விட்டார்.

இதைக் கேட்ட தங்கை நடிகையும் அவரது தாயாரும் மற்ற நடிகை இருக்கும் இடத்திற்குச் சென்று, மோசமான வார்த்தைகளால் திட்டித் தீர்த்தனர்.

'நாங்களும் மும்பையிலிருந்து வந்தவங்க தான். நீயும் மும்பையிலிருந்து வந்தவ தான். நீ இங்கு நடிக்க வருவதற்கு முன் அங்கே என்ன பண்ணிட்டிருந்தேங்கறது எங்களுக்குத் தெரியும். என் மகளைக் கிண்டல் பண்ணுறியே, நீ வாய்ப்புப் பெற என்னென்னவெல்லாம் செய்தாய் என்று நான் சொல்ல ஆரம்பித்தால் நீ அவ்வளவு தான்" என்று தங்கை நடிகையின் தாயார் மற்ற நடிகையின் கடந்த காலத்தைப் பற்றிப் புட்டுப்புட்டு வைத்தார்.

'இதற்கு ஏதாவது திருப்பிப் பேசினால், ஆட்களுக்கு மத்தியில் தனது மானம் போய்விடும்' என்ற பயத்தில் பேசாமல் இருந்து விட்டார் மற்ற நடிகை.

இவர் மறுபேச்சுப் பேசாததால் தங்கை நடிகையும், அவரது தாயாரும் பேசாமல் சென்று விட்டார்கள். அத்துடன் அந்தப் பரபரப்பு அடங்கிவிட்டது.


## ஒரே ஒரு பாடல் காட்சியில் டி.ஆர்.

பிரபல நாயகிகள் ஒரே ஒரு பாடல் காட்சியில் நடனமாடுவது தமிழ்ப் படங்களில் சாதாரணமாகி விட்டது. இப்போது அஷ்டாவதானி டி.ராஜேந்தர் ஒரே ஒரு பாடல் காட்சியில் தோன்றி நடனமாடுகிறார்.

அர்ஜுன்-அபிராமி இணைந்து நடிக்க மனோஜ்குமார் தயாரித்து இயக்கும் 'வானவில்' படத்திற்காக ஒரு பாடலை எழுதிப் பாடி ஆடுகிறார் டி.ராஜேந்தர்.

இப்பாடலுக்கு தேனிசைத்தென்றல் தேவா இசையமைத்துள்ளார்.





லைலா-தாமு-வையாபுரி
படம்: பார்த்தேன் ரசித்தேன்



## மினி சினி

★ தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய 4 மொழிகளில் 'ஸ்ரீ மஞ்சு நாதசுவாமி' என்ற பக்திப் படமொன்று தயாராகிறது. இதில் சிரஞ்சீவி, அர்ஜுன், சௌந்தர்யா ஆகியோர் நடிக்கிறார்கள்.

★ டி.ராஜேந்தரின் 'சொன்னால்தான் காதலா' படத்தில் ஏகப்பட்ட நட்சத்திரங்கள் நடித்து வருகிறார்கள். இப்போது அவர்களுடன் குஷ்பூவும் கௌரவ வேடத்தில் நடிக்கவுள்ளார்.

★ தமிழில் புதிய படவாய்ப்புக்களின்றி இருக்கும் ரம்பா, ஓரிரு இந்திப் படங்களில் நடித்து வருகிறார். அவற்றில் ஒன்று 'பேட்டி நம்பர் வன்'. இதில் கோவிந்தா கதாநாயகனாக நடிக்கிறார்.

★ இயக்குநர் ஷங்கரிடம் உதவியாளராக இருந்த வசந்த பாலன் என்பவர் டாக்டர் ராஜசேகரை வைத்து பிரமாண்டமான அடிதடிப்படமொன்றை தெலுங்கில் இயக்கி வருகிறார். இது தமிழிலும் வெளியாகும்.

★ 'வீர நடை' படத்தில் நாயகியாக அறிமுகமான சுமித்ராவின் மகள் உமா, இப்போது பாரதிராஜா இயக்கும் 'கடல் பூக்கள்' படத்தில் 3 நாயகிகளில் ஒருவராக நடித்து வருகிறார். உமாவின் பெயரை கயல் என்று மாற்றி வைத்து விட்டார் இயக்குநர் பாரதிராஜா.

★ சுந்தர்.சி. இயக்கத்தில் சரத்குமார் நடிக்க ஒரு வருடத்திற்கு முன் தொடங்கப்பட்டு கிடப்பில் போடப்பட்டிருக்கும் 'ஸ்ரீராம ஜெயம்' படத்தின் படப்பிடிப்புக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

★ கமலின் 'ஹேராம்' படத்தில் நடித்துள்ள ராணி முகர்ஜி மறுபடியும் தமிழ்ப்படம் ஒன்றில் நடிக்கவுள்ளார். கே.எஸ்.அதியமான் தயாரிக்கும் இப்படத்தில் அர்ஜுன் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

★ விக்ரமனிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்த ஷாஜகான் புதிய படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்தில் 'காதலர் தினம்' குணால் உட்பட 4 கதாநாயகர்கள் நடிக்கின்றனர்.

## ஃபிஜித் தீவில் தயாராகும் 'புகழ்'

சரத்குமாரை நட்சத்திர அந்தஸ்துக்கு உயர்த்திய படம் 'சூரியன்'. இப்படத்தை இயக்கியவர் பவித்ரன். நீண்ட இடைவெளிக்குப் பின் பவித்ரன் இயக்கத்தில் சரத் நடிக்கும் படம் 'புகழ்'.

'நாட்டாமை', 'சூரியவம்சம்', 'நட்புக்காக' படங்களை அடுத்து இப்படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கிறார் சரத்குமார்.

இப்படத்தின் படப்பிடிப்புகள் ஃபிஜித்தீவிலும் நடைபெறவுள்ளன. படத்தில் 4 வில்லன்கள். அவர்களில் ஒருவர் பொன்னம்பலம். ஃபிஜித் தீவின் கிளர்ச்சித் தலைவர் ஜோர்ஜ் ஸ்பைட் போல் பொன்னம்பலம் மேக்-அப் போட்டு நடிக்கிறார்.

## அப்பாவாகும் இளம் நடிகர்

புகழின் உச்சியில் இருந்தபோதே திருமணம் செய்து கொண்ட இளம் நாயகன் சமீபத்தில் தனது பிறந்தநாளை கருணை இல்லங்களுக்குச் சென்று, அநாதைப் பிள்ளைகளுடன் கொண்டாடி மகிழ்ந்தார்.

மனைவியை அழைத்து வராமல் தனியாக வந்து பிறந்தநாளைக் கொண்டாடினார், ஏன் மனைவியை அழைத்து வரவில்லை என்ற கேள்வி பலருக்கு எழுந்தது.

அந்த இளம் நாயகன் விரைவில் அப்பாவாகப் போகிறார். இதனால் தான் மனைவியை அழைத்து வரவில்லையாம்.

விரைவில் ஒரு 'குட்டித் தளபதி' எட்டிப் பார்க்கவிருக்கிறது.

## வாரிசுகள் பாடிய பாட்டு

பிரகாஷ்ராஜ், சுகாசினி, நவீன், மந்த்ரா நடித்து விரைவில் வெளியாக இருக்கும் 'உன்னில் என்னைக் கண்டேன்' படத்திற்காக எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் மகன் சரண், மலேசியா வாசுதேவனின் மகன் யுகேந்திரன், கங்கை அமரனின் மகன் வெங்கட் பிரபு மூவரும் இணைந்து பாடலொன்றைப் பாடியுள்ளார்கள்.

'பட்டப் படிப்பு வேஸ்ட் -இதை
புரிஞ்சுக்கிட்டா வாழ்வில் சேஞ்ச்...'

என்று தொடங்கும் கங்கை அமரன் எழுதிய இந்தப்பாடலை மணிசர்மா இசையில் வாரிசுகள் இணைந்து பாடினார்.

## தமிழனின் தலைவிதி

தமிழனின் தலைவிதியோ
தலை விரித்தாடுகிறது!
புதிய ஆயிரமாம் ஆண்டில் கூட
புது வாழ்வு கிடைக்கவில்லை.
இடம் பெயர்வும் பொருளிழப்பும்
சொத்துக்கள் பறிப்புமே
இவ்வினத்தின் தலைவிதியோ?
வீடிழந்து உறவிழந்து
வீட்டிலிருந்த பொருளிழந்து
வீதியெங்கும் வீழ்ந்தெழுந்து
வீணாய்ச் சாவதுதான்–தமிழனின்
வாழ்க்கையாய் அமைகின்றது.
விழி திறந்து பாராய் உலகத்தமிழினமே...!
வீறு கொண்டு வாராய்
ஈழத்தமிழனுக்குத் தவிடவே...!

எம். விஜிதா–மன்னார்.



## யார்?

மண் இதைப் பறித்தவர் யார்?
மக்களைத் திணித்தவர் யார்?
கண்ணினுஞ் சிறந்த தான
கனித்தமிழ் அழித்தவர் யார்?
பெண்நலம் துவைத்தவர் யார்?
பெருநெறி சிதைத்தவர் யார்?
புண்வர வைத்தவர் யார்?
புனிதங்கள் கெடுத்தவர் யார்?
***
திட்டமாய்ப் போட்டவர் யார்?
தீமையாய்ச் செய்தவர் யார்?
மட்டமாய் நினைத்தவர் யார்?
மறிப்புகள் வைத்தவர் யார்?
கட்டுகள் இட்டவர் யார்?
கருவிகள் தந்தவர் யார்?
எட்டமாய்ப் போனவர் யார்?
எதிரியாய்ப் பார்த்தவர் யார்?
போரினைத் தொடுத்தவர் யார்?
புலிகளை விதைத்தவர் யார்?
பேரினைக் கெடுத்தவர் யார்?
பேரிழப் படைந்தவர் யார்?
சீரினைச் சிதைத்தவர் யார்?
தேய்ந்திடச் செய்தவர் யார்?
ஊரினை எரித்தவர் யார்?
உலகெலாம் கடத்தியோர் யார்?
***
செய்வன செய்தி டாமல்
செயத்தகா தவைகள் செய்து
மெய்களைச் சொல்லி டாமல்
மேதினி தன்னை ஏய்க்கப்
பொய்யையே சொல்லிச் சொல்லிப்
பொழுதினை ஓட்டப்பார்த்தால்...
ஐயகோ வரலா றெல்லாம்
அறிந்தவர் நம்புவாரோ?

அகதிக் கவிராயர்–திருமலை.

## கற்பனைக் குழந்தையே....

என் விடியல் ஒன்றில்–இருள் பிரியாத
அதிகாலைப் பொழுதில் யார் கையிலோ
இருந்த மழலை என் மனதில் ஊறவைத்த
உணர்வு இது;
உள்ளம் அள்ளிய அந்தப் பால்நிலா
மெல்லவே தாவியது என்னிடம்–அதனால்
உருகியது என் உணர்வு!
சின்னச்சின்னப் பிஞ்சு விரல்கள்–என்
நெஞ்சைத் தீண்டியதும் தீயாய்
கனன்ற என் கவலைகள்
கரைந்தது பனியாய்!
அந்த
குஞ்சுப் பாதங்கள் கொஞ்சினேன்
விஞ்சி நின்ற விரக்தி விலகிப்போனது;
காற்றில் பறந்த பஞ்சு போல....
அந்த
வண்ணக் கன்னம் வந்து முகம்மோத
எண்ணப் பறவை சிறகு விரித்து
விண்ணுயரப் பறந்தது பரவசத்தில்....
அந்தச் சின்னமணிக் கண்கள்
உருண்டபோது.
சிதறியிருந்த சிந்தை திரும்பியது
திருத்தமாய்....
அந்த
வண்ணக்குழந்தையிலே வாழ்வைப்
புதைத்து
எண்ணங்கள் ஏற்றம் பெற
இன்னும் இன்னும் இன்னும் வேண்டும்
இந்த இனிய கனா!
இதயமது இடியாமல் துடித்திருக்க
உதயமதில் உன் உருவம்
காணவேண்டும்.....!

எஸ். ஜெயா–பேராதனை வளாகம்.

## எங்களைப் பற்றியும் எழுதுங்கள்!

## ஆதங்கம்

நாங்கள் தமிழர்கள்;
எங்களைப் பற்றியும்
எழுதுங்கள்!
***
சந்தேகத்திற்காய்
சிறையிலிருக்கும்
சந்ததியினர்
இவரென
சங்கடமில்லாமல்
எழுதுங்கள்!
***
அடையாள
அட்டைக்காய்
அடிவாங்கும்
அபலைகள் இவரென
அனுதாபத்தோடு
எழுதுங்கள்!
***
பட்டாசு வெடித்தாலும்
பறந்தடித்து ஓடும்
பரிதாபத்தை
பார்த்து எழுதுங்கள்!
***
உதித்தது நாம்–இந்த
உன்னத ஈழப் பூமியில் தான்;
ஆனால் இறுதிவரை
உதை வாங்கியே
வாழ்வதை
உருக்கமாக
எழுதுங்கள்!
***
மையில் எழுதாதீர்கள்
மாற்றம் வராது!
***
இனிவரும் ஏடுகளில்
நாங்கள் சிந்தும்
இரத்தத்தில்
எழுதுங்கள்;
எங்கள்
இறந்த காலத்தை!


சி. சிவகுமாரன்–
வட்டகொட.

## நிராசையான என் ஆசைகள்

அப்பா அம்மாவுடன்
கொஞ்சி மகிழ ஆசைப்பட்டேன்;
அண்ணா அக்காவுடன்
அன்பாக ஆடிப்பாட ஆசைப்பட்டேன்;
தம்பி தங்கையுடன்
தவழ்ந்து விளையாட ஆசைப்பட்டேன்;
உற்றார் உறவினருடன்
உறவாட ஆசைப்பட்டேன்;
பக்கத்துவீட்டுச் சிறுவர்களுடன்
பந்து விளையாட ஆசைப்பட்டேன்;
துவிச்சக்கர வண்டியில்
துள்ளித் திரிய ஆசைப்பட்டேன்;
சொந்த மண்ணில் சுதந்திரமாக
சுற்றித்திரிய ஆசைப்பட்டேன்–ஆனால்
அநாதையான என் ஆசைகளெல்லாம்
நிராசைகளாகி விட்டனவே!

றோஜனா சின்னத்துரை–
கொழும்பு 13.

## வண்டிக்காரன் மகள்



நான் பிழைப்புக்காக என்னென்னமோ தொழில்கள் செய்திருக்கிறேன். இதில் மறக்க முடியாதது மதுரையில் ஜட்கா வண்டிக்காரனுக்கு உதவியாளனாக இருந்தது.

அந்த வண்டிக்காரனின் மனைவிக்குப் பெருவியாதி. வீட்டைக் கவனிப்பது, சமைப்பது எல்லாமே வண்டிக்காரனின் மகள்தான். அவளுக்குப் பதின்மூன்று, பதின்னான்கு வயதிருக்கும். அவள் தான் எனக்குச் சோறிடுவாள். மரியாதையாக நடத்துவாள். என்னை 'மாப்பிள்ளை' என்று அழைத்து வண்டிக்காரன் கேலி செய்யும்போது, அவள் ஓடி ஒளிவாள்; செல்லமாகச் சிணுங்குவாள்.


'நானும் கூட, இந்தக் கிழவன் சீக்கிரமாகச் செத்துப் போனால் நாம் தான் இந்த வண்டியையும் குதிரையையும் வைத்துக் கொண்டு, இவளைக் கல்யாணம் செய்து கொண்டு, இந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும்' என்ற நினைப்பில் ஒரு ஜட்கா வண்டிக்காரனாக மாறத் தீர்மானித்திருந்தேன்.

வீட்டை விட்டு ஓடிப்போன என்னை ஒரு நாள் சினிமாக் கொட்டகையில் கண்டுபிடித்த என் மாமா மகள், பிடித்த பிடியில் என்னை இழுத்து வந்து விட்டாள்.

அதன் பிறகு அந்த வாழ்க்கையும் மாறிப் போயிற்று.

**ஜெயகாந்தன் ஒரு கட்டுரையில்...**

## ஒரு ஜோடி இந்தி



இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ் நாட்டில் தீவிரமாக நடந்து கொண்டிருந்த காலம் அது. அப்போது 'இந்தி கற்பதால் கேடு ஒன்றுமில்லை' என்று ராஜாஜி சொல்லிக் கொண்டிருந்தார்.

ஒரு முறை ராஜாஜி ஒரு திருமண வைபவத்தில் கலந்து கொண்டபோது அங்கு வந்த ஒருவர் ராஜாஜியிடம்,

"ஐயா! இந்தி நமக்கு அவசியமில்லாதது. அதைப் பற்றித் தாங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயம் தவறானது!" என்றார்.

"நாம் வெளியில் சென்று வருவதற்குக் காலணியை உபயோகிக்கிறோம். அதற்காக அவற்றை நம் வீட்டிற்குள் கொண்டு வருவதில்லை. அதுபோலத் தான் நாம் இந்தியை வைத்துக் கொள்ள வேண்டும். வெளி மாநிலத்திற்கு மட்டும் இந்தியை வைத்துக் கொள்ளலாமே!" என்றார்.

அப்போது ஒருவர் எதையே தேடிக்கொண்டிருந்தார். ராஜாஜி அவரிடம், "எதைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டார்.

"எனது ஒரு ஜோடி இந்தியை இங்கு கழற்றி வைத்திருந்தேன். அதைக்காணவில்லை!" என்றார் அவர்.

அதைக் கேட்டு ராஜாஜியும் மற்றவர்களோடு சேர்ந்து சிரித்து விட்டார்.

## யார் இவர்?



வில்லனாக அறிமுகமாகி, பின்னர் கதாநாயகனாகியவர் ⁚பிரஞ்சுச் சக்கரவர்த்தியின் பெயரைக் கொண்ட இவர் யாரென்று கண்டுபிடித்துவிட்டீர்களா?

கண்டுபிடித்தவர்கள் விடையைச் சரி பார்க்கவும். கண்டுபிடிக்காதவர்கள் யாரென்று அறிந்துகொள்ளவும் பக்கம் 18க்கு நகருங்கள்.

## பேனா நண்பர்கள்



பெயர்: எம்.எஸ். நிஸாம்தீன்
வயது: 22
முகவரி: 155,பிரதான வீதி, கெக்கிராவ.
பொழுது போக்கு: கிரிக்கெட்.



பெயர்: கே. சரோ,
வயது: 21,
முகவரி: இருதய வைத்தியசாலை, பேசாலை..
பொழுது போக்கு: வழமையானவை.

## இந்தவாரம் உங்கள் பலன்

**06.08.2000 முதல் 12.08.2000வரை**

ஜோதிடர் 'கர்ணா'

**மேடம் :**
மாற்றமான நல்ல நிலை தோன்றும். எதிர்பார்த்த வசதிகள் பெருகும். குடும்ப பிரச்சனைகள் குறையும். பரீட்சைகள் கல்வி முன்னேற்றம் சீராக அமையும். அச்சுவினி நட்சத்திரருக்கு முன்னேற்றமான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 07, 11.

**இடபம்:**
அதிகாரத்திலுள்ளவர்களுக்கு சிறப்பான நேரமாகும். தொழில் நிலை வளர்ச்சியைக் கொடுக்கும். மருத்துவச் செலவு, குடும்பத்தில் சிற்சில பிரச்சனைகள் வந்து போகும். ஆலயதரிசனம் செய்வீர்கள். வீண் அலைச்சல்களுக்கு இடமுண்டு.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி.
அதிஷ்ட நிறம் : சாம்பல் வர்ணம்; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 07, 10.

**மிதுனம் :**
கடன் பிரச்சனைகள் தீரும். தொழில் மூலம் வருவாய் அதிகரிக்கும். திருமண முயற்சிகள் கை கூடி வரும். பெண்களுக்கு மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெறும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : கபிலம்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 09, 10.

**கடகம் :**
மாற்றமான முடிவுகள் வந்து போகும். திருமணத்தடைகள் விலகும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். பெண்களுக்கு உறவினர்கள் வருகையும் சுபகருமச் செயற்பாடுகள் என்பன காட்டும். ஆயிலிய நட்சத்திரர் நன்மையடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 10, 12.

**சிம்மம் :**
தொழில்நிலை வளர்ச்சி அடையும், பணவசதிகள் ஏற்படும். புதிய இருப்பிடமாற்றமும் பயண நிலையும் கொடுக்கல் வாங்கல்கள் கடன்பிரச்சனைகள் தரும். மக நட்சத்திரர் பெரிய வசதிகள் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 06, 12.

**கன்னி :**
குடும்பத்தில் கவலை கூடும், உத்தியோகத்தர்கள் தொழில் நிலையில் அவதியுற நேரிடும். விபத்துக்கள் அல்லது அவமானங்கள் எவையும் நேரிடப்பார்க்கும். அவதானமாக இருக்கவும். உத்தர அத்தப் பெண்களுக்கு கவனம் வேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 08, 11.

**துலாம் :**
பிரச்சனைகள் பல குறைவடையும், கணவர், காதலர் மகிழ்ச்சியடைவார்க்ள். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெறும் தூரதேச உறவினர்களின் நற்செய்திகள் கிட்டும், தொழில்துறை கல்வி முயற்சிகள் நன்மையைக் கொடுக்கும். சுவாதிப் பெண்கள் மகிழ்ச்சியை அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மரூண்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 10, 11.

**விருட்சிகம் :**
பணப்பிரச்சனைகள் குறைவடையும். மனதில் புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும், பிள்ளைகளின் முன்னேற்றம் நன்றாக இருக்கும்பயண முயற்சிகள் நன்மையைக் கொடுக்கும். அத்துடன் முன்னர் உள்ள தடைகள் நீங்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 09, 12.

**தனுசு :**
உடல்நிலை மாற்றமாக அமையும். அத்துடன் மருத்துவச் செலவுகள் இடையிட்டு அதிகரிக்கும். பல்கலைக்கழக கல்விபயில்வோருக்கு சிறப்பு வசதிகள் கிடைக்கும். வாகன தொழில் செய்வோர் இலாபம் அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், திங்கள்.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண் 06.
அதிஷ்ட திகதிகள் : 06, 09.

**மகரம் :**
அலைச்சல் சிக்கல்கள் சில வந்து போகும். வெளியிடத்தில் இருந்து பணபொருள்வசதிகள் வரும். முயற்சிகள் நன்றாக அமையும். தொழில் விடயங்களில் கவனம் செலுத்தவும். விவசாயத் தொழில் உயர்வான நன்மைகளைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 02.
அதிஷ்ட திகதிகள்: 07, 11.

**கும்பம் :**
தொழில் நிலையில் சண்டை சச்சரவுகள் வந்துபோகும். உடல் நிலை பாதிப்படையும். திருமணப் பேச்சுக்கள் முன்னேற்றமடையும். உறவினர்களால் சில உதவிகள் கிடைக்கும். எதிலும் நிதானமாக செயற்படவும். அவிட்ட நட்சத்திரபெண்கள் மகிழ்ச்சி஍யப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் :றோஸ்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 09, 10.

**மீனம் :**
கல்வி பரீட்சைகள் வெற்றியாக அமையும். எடுத்த கரும விடயங்கள் நன்மையைக் கொடுக்கும், சகோதரர்களின் உதவியும் பணப் பொருள்வசதிகள். பெரிய அளவில் கிடைக்கும். ஆலயதரிசனமும் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 10, 12.

## நில்– கவனி –முன்னேறு

ஒருவன் தனக்குத் தானே விரோதியாக செயல்படக் கூடாது.

விரோதிகள் வெளியில் தான் இருக்கிறார்கள் என்று அனைவரும் நினைத்து வருகிறார்கள். ஆனால், பெரும் பாலானவர்கள் தாங்களே தங்களுக்கு விரோதிகளாக செயல்பட்டு வருவதை உணருவதில்லை.

தன் திறமையைப் பற்றி சந்தேகப் படுபவன் தன்னுடைய முன்னேற்றத்திற்கு தானே எதிரியாக நடந்து கொள்ளுகிறான்.



எப்போது பார்த்தாலும் தேவையற்ற கவலைகளை வரவழைத்துக் கொண்டு கவலைப்பட்டு வருபவன் தன்னுடைய சந்தோஷத்தை தானே அழித்துக் கொண்டு விடுகிறான்.

அனைத்திற்கும் பயப்படுபவன் தன் மன அமைதியை அழித்துக் கொண்டு நிறைய வேதனையைக் கண்டு வருவான்.

தைரியம், நம்பிக்கை போன்றவைகளின் துணையுடன் செயல்படுபவனுக்குத் தான் வாழ்க்கையில் வெற்றித் தேவதையின் அருள் கிட்டும்.

தன்னுடைய இலட்சியங்களுக்கு உதவும் படியான மன நிலையை வளர்த்துக் கொண்டவனுக்குத்தான் வாழ்க்கையில் புகழ், பதவி, செல்வம் போன்றவைகள் கிட்டி அவன் வாழ்க்கையை நன்கு அனுபவித்து வாழ்ந்து வர முடியும்.

உங்களுடைய முயற்சிகளுக்கு நீங்களே முட்டுக்கட்டையாக நிற்காமல், உங்களுக்கு நீங்களே உதவி செய்து கொண்டால் நீங்கள் ஆசைப்பட்டவைகள் அனைத்தையும் உங்களால் அடைய முடியும்.

துன்பம் நிறைந்த வாழ்க்கைக்கு முக்கிய காரணம், ஒருவன் தன்னைத் தானே வெறுத்துக் கொண்டு தன்னையே தன்னுடைய விரோதியாக மாற்றிக் கொண்டு விடுவதுதான்.

அதற்கு மாறாக தன்னைத் தானே விரும்பி தனக்கு உதவும் நண்பனாகத் தன்னை மாற்றிக் கொண்டவனுக்குத்தான் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை கிடைக்கும்.

உங்கள் வெற்றிகளைப் பற்றி பெருமைப் படும் முதல் நபர் நீங்களாகத்தான் இருக்க வேண்டும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## வேண்டுமா சுட்டிக்குழந்தை?



**த**னக்குப் பிறக்கப் போகிற குழந்தை மிக அழகாகவும், அதிபுத்திசாலியாகவும் பிறக்க வேண்டும் என்று ஆசைப்படாத பெண்கள் உண்டா?

நீங்கள் நினைத்தபடியே நடக்கும், ஒரு காசு செலவில்லாமல்.

எப்படி?

கர்ப்பிணிப் பெண்கள் இனிமையான பாடல்களைக் கேட்டால் அவளுக்குப் பிறக்கும் குழந்தை அழகாகவும் புத்திசாலியாகவும் பிறக்கும்.

பாடல்களின் மெல்லிய ஒலி அதிர்வுகள் வயிற்றிலிருக்கும் குழந்தையின் மூளைத் திசுக்களை உற்சாகப்படுத்துகின்றது. இதன் காரணமாகத்தான் குழந்தை புத்திசாலித்தனமாகவும் அழகாகவும் பிறக்கிறது.

தாய்லாந்து நாட்டின் சுந்தோர்ன் மருன் வாட்னாகுக் என்ற மருத்துவர் நீண்டகாலமாக ஆராய்ச்சி செய்து இதைக் கண்டுபிடித்துள்ளார்.

"கர்ப்பிணிப் பெண்கள் வயிற்றில் குழந்தை யைச் சுமக்கும் 5வது மாதம் முதல் குழந்தை பிறக்கும் வரை மெல்லிய இசையை இரசிக்க வேண்டும்" என்கிறார் அவர்.

ஆகவே சகோதரிகளே! கர்ப்பகாலத்தின் பிந்தைய 5வது மாதத்தில் இருந்து மெல்லிய இசையைக் கொண்ட பாடல்களைக் கேளுங்கள்.

## உங்கள் உயரமும் நிறையும் என்ன?

**பெ**ண்கள் தங்கள் உயரத்திற்குத் தக்கபடி நிறையுடையவர்களாக இருக்கவேண்டும். பின்வரும் பட்டியல்படி நிறை இருந்தால் நல்லது.


| உயரம் | நிறை |
|---|---|
| 4 அடி 9 அங்குலம் | 40 கிலோ கிராம் |
| 4 அடி 11 அங்குலம் | 44 கிலோ கிராம் |
| 5 அடி 0 அங்குலம் | 46 கிலோ கிராம் |
| 5 அடி 3 அங்குலம் | 54 கிலோ கிராம் |
| 5 அடி 5 அங்குலம் | 58 கிலோ கிராம் |
| 5 அடி 7 அங்குலம் | 63 கிலோ கிராம் |
| 5 அடி 10 அங்குலம் | 68 கிலோ கிராம் |

இதிலிருந்து சுமார் 3 கிலோகிராம் நிறை கூடக்குறைய இருக்கலாம். அப்படியில்



லாதவர்கள் உயரத்திற்குத் தகுந்தபடி நிறையில் கவனம் செலுத்த வேண்டும்.

## உணவில் உப்பு அதிகமா?



'**உ**ப்பில்லாப்பண்டம் குப்பையிலே' என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் உணவில் உப்பை அதிகம் சேர்ப்பவர்களுக்கு இரத்தக் கொதிப்பு ஏற்படும்.

30 வயதைக் கடந்தவர்கள் உணவில் கண்டிப்பாக அதிகம் உப்பைச் சேர்க்கக் கூடாது. ஆரம்பத்தில் உப்புக் குறைந்த உணவு 'சப்'பென்று இருந்தாலும் நாளடைவில் அது பழகிவிடும்.

★ 'மேசையுப்பு எனப்படும் தூளாக்கிய உப்பை விட 'ரொக்சோல்ட்' எனப்படும் கல் உப்புத்தான் ஆபத்துக் குறைவானது. இதையே சமையலுக்குப் பயன்படுத்த வேண்டும்.

★ உப்பு அதிகமுள்ள பப்படம், ஊறுகாய், வடகம் போன்றவற்றையும் தவிர்ப்பது மிக நல்லது.

★ மரக்கறி சாலாட் செய்யும் போது உப்பே போடாமல் எலுமிச்சம்பழம், மாங்காய், மிளகுத்தூள், சீரகத்தூள் போட்டுச் சுவை கூட்டினால் போதுமானது.

★ இரசம் செய்யும் போது தேவைப்படும் அளவை விட 'அரை வாசி' அளவு உப்புப் போட்டுச் சாப்பிடப் பழகிக் கொள்ளுங்கள்.

★ உப்பு அதிகம் சேர்த்தால் பதற்றமும் படபடப்பும் ஏற்படும் என்று ஆய்வாளர்கள் கூறியிருக்கின்றனர்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** HZ

பெயர்:....................

முகவரி:....................

....................

தொழில்:....................

கையொப்பம்:....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 12.08.2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**மாத்தளை வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் ☞ | திலகவதி<br>20, மெதவத்த வீதி, மாத்தளை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


வழங்குவது புவனா

# 49 மோனிக்கா என் மோனிக்கா

**ஜ**னாதிபதி கிளின்ரன் மீது லிண்டா ட்ரிப்புக்கு மனஸ்தாபம் இருந்து வந்தது. வெள்ளை மாளிகையில் லிண்டா முன்னர் பணிபுரிந்தாள். கிளின்ரன் ஜனாதிபதியாக பதவியேற்று வெள்ளை மாளிகையில் குடியேறியதும் அவர் மீது லிண்டாவுக்கு நாட்டம் ஏற்பட்டது. சபல புத்தி கொண்ட அவரை எப்படியாவது தன் வலையில் வீழ்த்த வேண்டுமென்று லிண்டா எடுத்த முயற்சி ஓரளவு வெற்றி பெற்றது.

வெள்ளை மாளிகைக்கு புதிதாக நுழைந்த ஜனாதிபதி கிளின்ரன் பதவியேற்ற காலத்தில் மிகவும் சுறுசுறுப்பாக தனது செயற்பாடுகளில் ஈடுபட்டார். அவருடைய தரிசனத்துக்காக வெள்ளை மாளிகையில் பணிபுரியும் பெண்கள் பலரும் நாட்கணக்கில் காத்துக் கிடந்தனர். இவர்களில் லிண்டா ட்ரிப்பும் ஒருத்தி.

கிளின்ரனுடைய குணாதிசயங்களைப் பற்றி அவருடைய மனைவி ஹிலாரி கிளின்ரன் நன்றாக தெரிந்து வைத்திருந்தாரோ என்னவோ, அவருடைய ஓவல் அலுவலகத்துக்கு முன்னெச்சரிக்கை எதுவுமில்லாமல் ஹிலாரி சமய சந்தர்ப்பம் எதுவும் கவனிக்காமல் உள்ளே நுழைந்து விடுவார். இவ்வாறு ஒரு ஜனாதிபதியின் அலுவலகத்துள் திடீர் திடீரென்று நுளையும் ஹிலாரியை வெள்ளை மாளிகை பாதுகாப்பு அதிகாரிகளாலோ வேறு எந்த ஊழியர்களினாலோ தடுப்பதற்கு முடியாது. ஆகவே ஹிலாரி ஓவல் அலுவலகத்துக்குள் செல்வதை எவராலும் தடுக்க முடியவில்லை.

முக்கியமாக வெள்ளை மாளிகையில் பணிபுரியும் பெண் ஊழியர்கள் ஓவல் அலுவலகத்துக்குச் செல்வதை ஹிலாரி எப்படியோ மோப்பம் பிடித்து அங்கு ஆஜராகி விடுவார். இதனைத் தடுக்க ஜனாதிபதி கிளின்ரனால் முடியவில்லை.

அமெரிக்க ஜனாதிபதிக்கான விதி முறைகளில் அவருடைய குடும்பத்தவர் தானும் அவருடைய பிரத்தியேக பணிகளில் தலையிட முடியாது என்று கூறப்பட்டுள்ளது. இருப்பினும் ஹிலாரி இந்த விதிமுறைகளுக்குக் கட்டுப்படாமல் தான் விரும்பிய நேரம் உள்ளே போவதும் தனிப்பட்ட குடும்பப் பிரச்சனைகள் பற்றி ஓவல் பணிமனையில் இருந்த வண்ணம் கிளின்ரனுடன் விவாதிப்பதும் அடிக்கடி நடைபெற்று வந்துள்ளன.

லிண்டா ட்ரிப் கிளின்ரன் மீது ஒரு கண் வைத்திருந்ததை அவரும் அறிவார். இதன் காரணமாக லிண்டா அடிக்கடி ஜனாதிபதியின் ஓவல் அலுவலகத்துள் போய்வரத் தொடங்கினார். இந்தச் சம்பவத்தை எப்படியோ ஹிலாரி நோட்டமிட்டு அவதானித்து வந்திருக்கிறார். ஒருநாள் மதிய நேரம் உணவுக்காக கிளின்ரன் தனது இல்லம் செல்வதற்கு ஆயத்தமானார். இதே கால கட்டத்தில் லிண்டா ட்ரிப் கிளின்ரனின் அலுவலகத்துள் ஆவணத்துடன் சென்றுள்ளார். சற்று நேரத்துக்கொல்லாம் ஓவல் அலுவலகத்தின் பிரதான கதவைத் திறந்துக் கொண்டு ஹிலாரி உள்ளே நுழைந்தார். அங்கு என்ன நடந்ததென்று எவருக்கும் தெரியாது. சில நிமிடங்களில் கடுகடுத்த முகத்துடன் கடும் கோபம் கொப்பளிக்க ஓவல் அலுவலகத்திலிருந்து வெளியேறினார் ஹிலாரி.

இச்சம்பவம் நடைபெற்று ஒரு வாரத்துள் லிண்டா ட்ரிப் வெள்ளை மாளிகையை விட்டு வேறோர் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டாள்.

(லிண்டா ட்ரிப், கிளின்ரன்-மோனிக்கா விவகார விசாரணைகளின் போது ஜூரி முன்னிலையில் இத்தகவலை வெளியிட்டார்.)

ஜனாதிபதி கிளின்ரன் மீது லிண்டா ட்ரீப் வஞ்சம் தீர்ப்பதற்கு திட்டமிட்டு செயற்பட்டு வந்தமைக்கு பிரதானமான காரணமாக அமைந்தது மேற்படி சம்பவம்தான் என்று கருதமுடிகிறது. தனது வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கைக்கு மோனிக்கா பயன்படுத்தப்படுகிறாள் என்பதை அறிந்திருக்காத அவள் கிளின்ரனுடனான தனது நெருக்கமான உறவுகள் அத்தனையும் ஒன்று விடாமல் கூறி விட்டாள்.

மோனிக்கா தனக்கு வெள்ளை மாளிகையில் ஏதாவதொரு பதவி கிடைக்குமென்று இலவு காத்தகிளிபோல் காத்திருந்தாளே தவிர பதவியேதும் கிடைக்கவில்லை. இதனால் அவளுடைய மனோநிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. நியோர்க்கிலுள்ள தனது தாயாரிமாவது போய்ச்சேர்ந்து விடலாமா? என்று கூட எண்ணினாள். எதற்கும் மீண்டுமொருமுறை ஜனாதிபதியின் செயலாளரான பெட்டி கியூரியுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள நினைத்தாள். பல மணிநேர பிரயத்தனங்களின் பின்னர் பெட்டிகியூரியின் தொடர்பு கிடைத்தது.

தனக்கு வெள்ளை மாளிகை பணிக்கு ஏற்பாடு செய்து கொடுப்பதற்காக கிளின்ரனால் பிரஸ்தாபிக்கப்பட்ட மார்ஸா ஸ்கொட் தன்னைப்பற்றி எதுவுமே தெரியாது என்று கூறிவிட்ட சம்பவத்தை கியூரியிடம் தொலைபேசியில் சொல்லி அழுதாள். இது தொடர்பாக தான் உடனடியாக கிளின்ரனிடம் அறிவிக்கப் போவதாக கியூரி சொன்னாள்.

அன்று மாலையில் மார்ஸா ஸ்கொட்டிடம் இருந்து மோனிக்காவுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. மோனிக்காவைப் பற்றித் தனக்கு எதுவுமே தெரியாது என்று கூறி விட்டமைக்காக ஸ்கொட் முதலில் மன்னிப்புக் கோரினாள். தனது செயலாளர் உரிய முறையில் கோப்புகளை ஒழுங்கு செய்து தன்னிடம் ஒப்படைக்க முடியாமல் போனமையினாலேயே தவறு நேர்ந்து விட்டதாக 'ஸ்கொட்' தெரிவித்தார்.

இதன் பிறகு பெட்டி கியூரிக்கு தன்னுடைய நிலைபற்றி மோனிக்கா ஒரு நீண்ட கடிதம் எழுதினாள். இதில் மார்ஸா ஸ்கொட் வெள்ளை மாளிகையில் தனக்கு

## ஏமாற்றமும் ஏக்கமும்!



ஒரு வேலையை ஏற்பாடு செய்து தருவதற்கு இலாயக்கற்றவர் என்றும், பல வழிகளிலும் தான் ஏமாற்றப்பட்டு விட்டதாகக் குறிப்பிட்டிருந்தாள். கிளின்ரன் கூட தொலைபேசி மூலமாவது தன்னுடன் தொடர்பு கொள்ளவோ, அழைத்துப் பேசவோ முயற்சி எடுப்பதாயில்லை. இதனால் தான் செய்வதறியாது துன்பப்படுவதாகவும் பெட்டி கியூரிக்கு எழுதி இருந்தாள்.

பெட்டி கியூரிக்கு தான் கடிதம் எழுதி, தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாக லிண்டா ட்ரிப்பிடம் கூறினாள். ஆனால் லிண்டா பெட்டி கியூரிக்கு கடிதம் எழுதாமல் நேரடியாக கிளின்ர னுக்கே கடிதம் எழுதி இருக்கலாமே என்று கடிந்து கொண்டாள். உடனடியாகவே கிளின்ரனுக்கு கடிதம் எழுதி கியூரியிடம் கொடுத்தே அனுப்பி வைக்கும்படி ஆலோசனை கூறினாள்.

லிண்டாவின் தூண்டுதலினால் கிளின்ரனுக்கு ஒரு சிறு கடிதத்தை மோனிக்கா எழுதினாள். "கடந்த ஐந்து வாரங்களாக நீங்கள் என்னுடனான தொடர்பினை முற்றாகத் துண்டித்து விட்டீர்கள். எனக்கு இவ்வாறு செய்ததை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. தயவு செய்து என்னுடன் இவ்வாறு நடந்து கொள்ள வேண்டாம். தங்களுடைய கரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதனை நான் அறிவேன். எவ்வாறான போதிலும தங்களை ஒரு தடவையாவது சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தாருங்கள். செவ்வாய்க்கிழமை பிற்பகலில் உங்களைச் சந்திக்க விரும்புகிறேன்!" என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள்.

மோனிக்கா எழுதிய இக்கடிதத்தில் சில வார்த்தைகளை சற்றுக் கடுமையாக மாற்றி எழுதும்படி மோனிக்காவை லிண்டா வலியுறுத்தியிருந்தாள்.

அடுத்தநாட்காலை பெட்டி கியூரியிடமிருந்து மோனிக்காவுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் ஜனாதிபதி கடுமையான பணியில் ஈடுபட்டிருப்பதனால் தற்போது சந்திப்பதற்கு சந்தர்ப்பம் இருக்காது. என்று தெரிவித்தார். ஜூன் மாதம் 29ம் திகதியன்று கிளின்ரனுக்கு மேற்படி கடிதத்தை மோனிக்கா எழுதியிருந்தாள்.

பெட்டி கியூரியின் கூற்று மோனிக்காவுக்கு உண்மையில் பெரும் ஏமாற்றத்தை அளித்தது. அழுவதைத் தவிர, அவளுக்கு வேறு வழி எதுவும் தெரியவில்லை.

மோனிக்கா முதல் எழுதிய கடிதத்தில் 'என் மீது அன்பு கொண்ட அழகரே!' என்று தான் கடிதத்தின் ஆரம்பத்தில் விளித்திருந்தாள். ஜூலை 3ம் திகதியன்று கிளின்ரனுக்கு மற்றுமொரு கடிதத்தை மோனிக்கா எழுதினாள். இதில் 'டியர் சார்' என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தாள். மார்ஸா ஸ்கொட் தன்னை மிக மட்டரகமாக கருதிவிட்டாார். அவரால் எனக்கு வெள்ளை மாளிகையில் ஒரு வேலை பெற்றுத் தரவே முடியாது. ஆகவே நியூயோர்க் நகரிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையிலாவது தனக்கு ஒரு வேலை பெற்றுத் தந்தால், அங்கு வாழும் தனது தாயாருடன் தான் போய்ச் சேர்ந்து சற்று நிம்மதியாக வாழலாம். இந்த உதவியையாவது எனக்குச் செய்வீர்களா?" என்று கோரியிருந்தாள்.

மோனிக்காவின் இந்த கடிதத்திற்கு பதில் கிடைத்தது. அடுத்தநாள்-ஜூலை 4ம் திகதி அமெரிக்க தேசிய தினம். அன்று காலை 9.30க்கு தன்னை வெள்ளை மாளிகையில் வந்து சந்திக்கும்படி கிளின்ரன் கூறியதாக பெட்டி கியூரியிடமிருந்து அவளுக்கு தகவல் வந்தது. *(வருவாள்)*

## பாப்பா முரசு சிறுகதை

# பல்லக்குத் தூக்கிகள்

முன்னொரு காலத்தில் பெரும் பணக்காரர் ஒருவர் இருந்தார். அந்த காலத்தில் எல்லாம் இப்போது இருப்பது போல் கார், பஸ், விமானம் இல்லை எனவே மாட்டு வண்டியிலும் நடந்தும் மக்கள் பிரயாணம் செய்வர்.

அரசர்கள், பெரும் பிரபுக்கள் பல்லக்குகளில் பயணம் செய்வர். அழகிய பெட்டி போன்ற பல்லக்கில் இவர்கள் அமர்ந்து செல்வர். அதை அடிமைகள் தூக்கிச் செல்வர். இந்தப் பணக்காரப் பண்ணையாரும் பல்லக்கில் தான் பயணம் செய்வார்.

ஒரு நாள், இவர் மிகவும் செல்லமாக வளர்த்த கன்று குட்டி ஒன்று காணாமல் போய்விட்டது. உடனே பல்லக்குத் தூக்கிகளை அழைத்தார் பண்ணையார். "நீங்கள் நான்கு பேரும் போய் ஊர் முழுவதும் என் கன்றுக் குட்டியைத் தேடிப் பாருங்கள்" என்றார். அதற்கு அந்த நான்கு பேரும் பதில் சொல்லாமலும், நகராமலும் அப்படியே நின்று கொண்டிருந்தனர்.

"என்னப்பா! ஏன் இப்படியே நிற்கிறீர்கள். என்ன விஷயம்?" என்றார்.

"ஐயா! பல்லக்குத்தூக்குவதுதான் எங்கள் வேலை. கன்றுக்குட்டியைத் தேடுவது எங்கள் வேலை அல்ல," என்றனர்.

பண்ணையாருக்கு கோபம் பற்றிக் கொண்டு வந்தது. இவர்களைப் பற்றி எல்லா வேலைக்காரர்களும் சொல்லி இருக்கின்றனர். ஏடாகூடமாக பேசுவது, திமிர் பண்ணுவது, எதிர்த்துப் பேசுகின்றனர் என்று.

ஆனாலும், நான்கு பேர்களும் சரியான பலசாலிகள். இவர்களைப் போன்ற ஆட்களை இனிப் பிடிப்பது கஷ்டம் என்பது பண்ணையாருக்குத் தெரியும். எனவே கோபப்படாமல் அவர்களைத் திருத்துவது நல்லது என்ற முடிவுக்கு வந்தார்.


எனவே, "அப்படியா! சரி! நீங்கள் கன்றுக்குட்டியைத் தேட வேண்டாம். நான் தேடிக் கொள்கிறேன். பல்லக்கைத் தயார் பண்ணுங்கள்," என்றார்.

பல்லக்கில் ஏறி அமர்ந்து கொண்டு "இங்கே போங்கள், அங்கே போங்கள், அந்த மலைப்பக்கம் போங்கள்," என்று நாலாபக்கமும் நடக்க விட்டார்.

அதற்கு மேல் நடப்பதற்கு நான்கு பேர் உடம்பிலும் தெம்பில்லை. நொந்து போயினர் பல்லக்கு தூக்கிகள். எனவே, பல்லக்கை இறக்கி வைத்தனர். பிறகு, "ஐயா! எங்களை மன்னித்து விடுங்கள். உங்களை எதிர்த்துப் பேசியது தவறு. நீங்கள் வீட்டில் இருங்கள், நாங்கள் போய்க் கன்று குட்டியைத் தேடி வருகிறோம்," என்றனர்.

அன்று இரவுக்குள் கன்றுக் குட்டியுடன் திரும்பி வந்தனர். பண்ணையாரும் தன் திட்டம் பலித்ததை எண்ணிச் சிரித்துக் கொண்டார்.








கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த போது டின்னி அடித்த பந்து, மரக்கிளைகளில் மாட்டிக் கொண்டு விட்டது. பந்தை எடுக்க வழிகாட்டுங்கள் பார்ப்போம்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **12.08.2000.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 354**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


### வர்ணம் தீட்டும் போட்டி இல: 352

**பரிசுக்குரியவர்:**
என்.எம்.நிஸாம்,
மட்/அல்-ஹிறா வித்தியாலயம், காத்தான்குடி 05.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| அஸ்ரா ஃபர்வின்<br>முஸ்லிம் பாலிகா வித்தியாலயம், அக்குறண. | எம்.ஜ.நுஸ்ஹாஜெஸ்மின்,<br>மாளிகாஹேன முஸ்லீம் ம.வித்தியாலயம், பேருவளை. |
| ரா.லஷ்னா,<br>ஸ்ரீ சண்முகா இந்து மகளீர் கல்லூரி, திருகோணமலை. | எம்.அமிர்தர்ஷினி,<br>தமிழ் மகளீர் வித்தியாலயம், பதுளை. |
| பே.ஜயகணநாதன்,<br>அக்/கே/வி/ம/வித்தியாலயம், அக்கரைப்பற்று. | ஆர்.பத்மனி,<br>லிந்துல தமிழ் வித்தியாலயம், லிந்துல. |
| சித்தாரா கலீல்,<br>அல்-அஸ்ஹர் ம.க., திஹாரிய | தஸ்ஹா ரிஸ்லி,<br>முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு. |
| உ.ஜெயபிரகாஷ்,<br>சென்.ஜோன் பொஸ்கோ கல்லூரி, அட்டன். | சிராஜ் ஜிப்ரி,<br>சாஹிரா தேசிய பாடசாலை, மாத்தளை. |

## கைரேகை



← கைவிரல் ரேகைகள் ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு மாதிரி இருக்கும். ஒருவரின் ஆயுட் காலம்வரை இது மாறுவதில்லை. அமெரிக்காவில் குற்றவாளிகளின் கைரேகையை மட்டுமல்லாமல், இராணுவத்தில் பணி புரிபவர்கள், பொது ஊழியர் களிடமும் பதிவு செய்து கொள்கிறார்கள்.





↑ ஒருவரை அடையாளம் காண்பதற்காக அவரது கைவிரல்ரேகையைப் பதிவு செய்யும் பழக்கம் கி.பி. 700ம் ஆண்டிலேயே சீனர்களிடம் இருந்தது.

← ஜப்பானியப் பேரரசர்கள் தங்களது கை விரல் ரேகைகளை இரத்தத்தில் தோய்த்து, அதைக் காகிதத்தில் கையெழுத்தாகப் பதிவும் செய்கிறார்கள். அந்தக் காகிதம் அழியாதவரை அந்த இரத்தம் தோய்ந்த கைரேகைகளுக்கு மதிப்பு உண்டு.

## கொக்கித் தவளை



கொக்கித் தவளை எனப்படும் தவளைகள் 2 அங்குல நீளத்திற்கு இருக்கும். இவை இரவில் மரத்தின் உச்சிக்கிளைகளில் தங்கிக் கொண்டு, தங்களது உணவான பூச்சிகளைப் பிடித்துத் தின்னும். காலைப் பொழுது விடிந்ததும், பறவைகள் விழித்தெழுவதற்கு முன்னால் இவை மரத்தை விட்டுக் குதித்துக் கீழே இறங்கி வந்து பகல் முழுவதும் தரையில் இருக்கும்.

அப்போது இரவு முழுவதும் காய்ந்து போன தோல்களுக்குத் தேவையான ஈரப் பசையை மண்ணில் இருந்து உறிஞ்சிக் கொள்ளும். பிறகு பொழுது சாய்ந்ததும் மறுபடியும் மரக்கிளைகளின் உச்சிக்குச் செல்லும்.

உலக நாடுகள் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த கடும் முயற்சி செய்து வருகின்றன. இருந்தும் ஒவ்வொரு நாளும் உலகம் முழுவதும் ஏறக்குறைய 2 இலட்சத்து 20 ஆயிரம் பேர் பிறக்கின்றனர். இப்படியே போனால் 4000ம் ஆண்டில் பூமியில் மனிதர்கள் நிற்பதற்குக் கூட இடமில்லாமல் போகும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்



விறு விறு தொடர்

07

மண்டபத்தில் விஷால் தங்கியிருந்த அந்தத் தனியறையில் விஷாலும், ஜோதியும் மாறி மாறி சொல்லி முடிக்கும் வரை அமைதியாக சிகரெட் பிடித்தபடி கேட்டுக் கொண்டிருந்தான் பரத்.

தீபிகாவுக்கு அனுப்பப்பட்ட அந்த வெள்ளைப் புடவையை சுசீலா ஆராய்ந்தாள். அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தாள்.

"ஆகாஷ் எங்கே?" என்றான் பரத்.

"வேற ஒரு ரூமில நிம்மதியா தூங்கிட்டிருக்கான்!" என்றான் விஷால்.

"தீபிகா?"

"அவளும் தூங்கிட்டிருக்கா!" என்றாள் ஜோதி.

"வாட் ஈஸ் யுவர் ஐடியா விஷால்?"

"இப்படி ஒரு மிரட்டல் லெட்டர் வந்த விஷயம் அவங்க ரெண்டு பேருக்கும் தெரியக் கூடாது.

"ஒரு மொட்டைக் கடிதம் வந்திருக்கு ஆகாஷ். அதில.... அதில... அண்ணிக்கு கோவையில் இருந்தப்போ ஏற்கனவே ஒரு காதலன் இருந்ததா எழுதியிருக்கான் அந்தப் பொறுக்கி. எந்த ஆதாரமும் வைக்கலை. எழுதினவன் பேரு இல்லை. அதனால இதைப் பெருசு படுத்தக் கூடாதுன்னு யாருக்கும் சொல்லாம அதை எரிச்சுட்டேன். ஆனா உன்கிட்ட சொல்லிடறது பெட்டரோன்னு பட்டதால சொன்னேன். அது பொய்யாத் தான் இருக்கணும் ஆகாஷ். நீ அலட்சியப் படுத்திடு!."

"அது பொய் இல்லை விஷால்!"

"என்ன சொல்றே?"

"தீபிகா அந்தக் காதலைப் பத்தி என் கிட்ட விபரமா எல்லாம் சொன்னா. அவன் போதை மருந்து விற்கிற ஒரு பொறுக்கின்னு தெரியாம அவன் வார்த்தைக்கு சலனப்பட்டு அப்புறம் அவனைப் பத்தி தெரிஞ்சதும் சுதாரிச்சிட்டதா சொன்னா.

எனக்கு அந்த

பிடிச்சிக் கொடுத்தாகணும். அதுக்கு உங்க ஒத்துழைப்புவேணும்" என்றான்.

"அதுக்கு நான் என்ன செய்யணும்?" என்றாள் சங்கடமாக தீபிகா.

"அவனைப் பத்தின விபரங்கள் வேணும். இப்ப அவன் சென்னையிலதான் இருக்கணும். இங்கே அவன் எங்கே இருப்பான்னு தெரியுமா?"

"தெரியாது. அவனை நான் பார்த்தே மூணு வருஷம் ஆச்சு"

"ரைட் கோவையில அவன் அட்ரஸ்-ஐ மீன் - அப்போ உங்களுக்குத் தெரிஞ்ச அட்ரஸ் சொல்லுங்களேன்."

"அதெல்லாம் மறந்திடுச்சி அவன் பெயர் ரஞ்சித்! ஆனா இப்ப அவன் உயிரோட இல்லைங்க!" என்றாள் தீபிகா.

மூன்று வருடங்கள் முன்பு தன்னைச் சுற்றிய ரஞ்சித் இப்போது உயிருடன் இல்லை என்று தீபிகா சொன்னது விஷாலுக்கு மிக அதிர்ச்சியாக இருந்தது.

"அந்த ரஞ்சித் இப்போ உயிரோட இல்லையா? உங்களுக்கு நல்லாத் தெரியுமா அண்ணி?" என்றான் விஷால்.

"நல்லாத் தெரியும்" என்றாள் தீபிகா.

"எப்படிச் சொல்றீங்க?"

"ஒரு வருஷம் முன்னாடி அவன் ஒரு விபத்துல செத்துப் போய்ட்டதா என் ஃபிரண்டு ஒருத்திதான் என்கிட்ட சொன்னா."

"அப்படியா?" என்று யோசனையில் ஆழ்ந்தான்.

"என்ன யோசிக்கிறீங்க?"

"உங்களைப் பத்தி தப்பா எழுதினவன் யாரா இருக்கும்னுதான் யோசிக்கிறேன்."

"அந்த லெட்டர் காமிங்க."

"அது.... அது...



உடனே எரிச்சுட்டேன்" என்று தன் அண்ணனிடம் சொன்ன அதே பொய்யைச் சொன்னவன், "சரி, யாரா இருந்தா என்ன, ஏற்கனவே இந்த விஷயம் அண்ணனுக்குத் தெரிஞ்சி அவர் இதை இக்னோர் பண்ணிட்டதால, அந்த லெட்டருக்கு மரியாதையே இல்லை, பாவம் அவன்! தன்னோட லெட்டர் ஒரு பெரிய பூகம்பத்தை ஏற்படுத்தும், கல்யாணமே நின்னுப் போயிடும்னு எதிர் பார்த்துக்கிட்டிருந்து ஏமாந்து போகப் போறான் அவன்! நீங்க வொரி பண்ணிக்காம தூங்குங்க. டிஸ்டர்ப் செஞ்சதுக்கு ஸாரி."

விஷால் கதவை மூடிக் கொண்டு வெளியேறினான்.

அவன் அறையில் காத்திருந்த பரத் சுசீலாவிடம் விபரங்களைச் சொன்னதும், பரத், தன் மோவாயைத் தடவினான்.

"இந்தக் கடிதத்தை ரஞ்சித் தான் எழுதியிருக்கான். ஆனா ரஞ்சித் விபத்துல இறந்துட்டதா தீபிகா நம்பிக்கிட்டிருக்காங்க" என்றாள் சுசீலா.

"இதில ஒண்ணுதான் உண்மையா இருக்க முடியும். ரஞ்சித் செத்துட்டது உண்மைன்னா இந்த லெட்டரையும், வெள்ளைப் புடவையையும் அனுப்பிச்சது வேற யாரோ! ஆனா ரஞ்சித் போர்வையிலே அனுப்பிருக்கான். இல்லைன்னா இதை அனுப்பிச்சது ரஞ்சித்! அவன் சாகலை, தீபிகாவுக்குக் கிடைச்சது தப்பான தகவல்!" என்றான் பரத்.

"தீபிகாவுக்கு கிடைச்சது தப்பான தகவலாத்தான் இருக்கணும். ஏன்னா செத்துப்போன ரஞ்சித்துக்காக யாரோ ஒருத்தன் இத்தனை எமோஷனலா ரியாக்ட் பண்ணத் தேவையில்லை."

"இதை ரொம்ப சுலபமா சரி பார்த்துக்க முடியும் சுசீ."

"எப்படி?"

"தீபிகாவுக்கு ரஞ்சித்தோட கையெழுத்து தெரியாதா என்ன? இந்த லெட்டரைக் காமிச்சா உடனே சொல்லிடப் போறாங்க. ஆனா நாளைக்கு இந்தக் கல்யாணம் நடந்து முடியற வரைக்கும் அவங்க மூடைக் கெடுத்துடக் கூடாதுங்கறதால அதைச் செய்யமுடியாது."

"இப்போ நம்மகிட்ட ரெண்டு தகவல்கள் புதுசா இருக்கு. பேர் இல்லாம இருந்த இந்த லெட்டரை எழுதினது ரஞ்சித்ன்னு தெரிஞ்சிருக்கு."

"அப்புறம்?"

"இந்த வெள்ளைப் புடவையை நல்லி சில்க்ஸ்ல வாங்கியிருக்கான். விலை 1,230 ரூபாய். ஒரு மிரட்டலுக்கு வெள்ளைப் புடவை அனுப்ப நினைச்சவன் சாதாரணமா இருநூறு ரூபாயில கூட வெள்ளைப் புடவை எடுக்கலாம். நல்லில வெண்பட்டு எடுத்து அனுப்பியிருக்கான்னா...."

"ரஞ்சித் இப்போ வசதியா இருக்கான்னு அர்த்தம்."

"அது மட்டுமில்லை பரத். இந்த கிஃப்ட் ராப்பரைப் பாருங்க. இது காஸ்ட்லி பேப்பர், தனியாஸ்டேஷனரி கடையில விலைக்கு வாங்கியிருக்கான். கடையிலேயே கிஃப்ட் பார்சல் செய்யச் சொன்னா அவ்வளவு காஸ்ட்லி பேப்பர் போட்டு பேக் செய்யமாட்டாங்க." என்று சுசீலா பிரிக்கப்பட்ட அந்த பார்சல் காகிதத்தைக் காட்டினாள்.

நாளைக்கு முகூர்த்தம் நடக்கிறதுக்கு முன்னாடி இந்த அயோக்கியனை போலீஸ்ல பிடிச்சிக் கொடுத்துடணும். உன்னால முடியுமா? இது உனக்கு ஒரு சேலன்ஞ்!"

"இரு! இரு! உசுப்பேத்தாதே! இதில உன் அண்ணனோட உயிருக்கு மட்டும் மிரட்டல் இல்லை. இன்னொரு விஷயமும் இருக்கு"

"என்ன?"

"தீபிகாவுக்கு கோவையில ஒரு காதல் இருந்திருக்கு - இந்த லெட்டர்ல இருக்கிற விஷயங்கள் உண்மையா இருக்கிற பட்சத்தில்!"

"ஆஃப்கோர்ஸ்! ஸோ வாட்? இப்ப இல்லைன்னு லெட்டர் சொல்லுதே?"

"இது வாழ்க்கை. விளையாட்டில்லை. ஆகாஷுக்கு இதைப் பத்தித் தெரியுமான்னு முதல்ல தெரிஞ்சுக்கணும்."

"இந்த புடவை, இந்த லெட்டர் இதெல்லாம் இப்ப தூக்கத்திலேர்ந்து அவனை எழுப்பிக் காட்டினா பயங்கரமா அப்செட் ஆகிடமாட்டானா?"

"விஷால், கொஞ்சம் பொறுமையா இரு. உயிர் மிரட்டலை மறைச்சிடலாம். நான் சொல்ற மாதிரி இப்ப நீ நடந்துக்கணும். அப்படி நடந்துக்கிட்டா நமக்குச் சில தகவல்கள் கிடைக்கும். அதை வைச்சி அவனை மடக்க முயற்சி பண்ணலாம். இப்போதைக்கு அவன் பேர் கூடத் தெரியாதே, அதுக்குத் தான் சொல்றேன்."

"ரைட், இப்ப நான் என்ன செய்யணும்?" என்றான் விஷால்.

பரத் தன் யோசனையை விவரித்தான்.

ஆகாஷ் உறங்கிக் கொண்டிருந்த அறைக்குள் வந்த விஷால் அங்கிருந்த சூட்கேஸை வேண்டுமென்றே ஓசையுடன் திறந்து மூடினான்.

புரண்டு படுத்த ஆகாஷ் "என்ன விஷால், இன்னும் நீ தூங்கலையா?" என்று கொட்டாவி விட்டான்.

"இல்லை!" என்று டியுப் லைட்டைப் போட்டுவிட்டு, கட்டிலில் அவனருகில் அமர்ந்து, "ஆகாஷ், நான் ஒரு விஷயத்தை மறைச்சுட்டேன். அதை மறைச்சது சரியா, இல்லை உன்கிட்ட சொல்லிடறது சரியான்னு தவிச்சுக்கிட்டிருக்கேன்!" என்றான்.

"என்ன விஷால்? என்ன, சொல்லு!" எழுந்து உட்கார்ந்தான் ஆகாஷ்.

"இந்த ஊரே பார்த்து திருஷ்டி வைக்கிற மாதிரி ரொம்ப கிரான்டா இந்தக் கல்யாணத்தை நடத்திக்கிட்டிருக்கோமில்ல, அதனால பொறாமைப் பிடிச்சு எவனோ ஒருத்தன் செஞ்ச வேலையாகத்தான் இருக்கணும்."

"என்னாச்சு?"

விஷயத்தைப் பெரிசா எடுத்துக்கணும்னு தோணலை."

"யப்பா! ஏற்கனவே உனக்குத் தெரியும்! விடு! நிம்மதியா தூங்கு. உன் மனசுல குழப்பம் ஏற்படுத்தணும்னு அந்தப் பொறுக்கி ராஸ்கலே கூட எழுதிப் போட்டிருக்கலாம்."

"அந்த லெட்டரை நீ எரிச்சிருக்கக் கூடாது. போலீஸ்ல ஒப்படைச்சிருக்கணும்."

"என்னவோ பதட்டத்தில் என்ன செய்யறதுன்னு தோணாம எரிச்சுட்டேன். ஸாரிப்பா. தூக்கத்தைக் கெடுத்துட்டேன். தூங்கு நான் வர்றேன். ஆமாம், அந்த ராஸ்கல் பேர் என்ன, எங்கே இருக்கான்னு ஏதாச்சும் சொன்னாங்களா அண்ணி?"

"ரெண்டு, மூணு வருஷம் முன்னாடி கோவையில தீபிகா இருந்தப்போ நடந்த தாம். அவன் பேரை நான் கேக்கலை. தீபிகா மெட்ராஸ் வந்தப்புறம் அவனைப்பத்தி எந்தத் தகவலும் இல்லைன்னு சொன்னா. ஏன் கேட்டே?"

"ஒரு வேளை என் கண்ல பட்டா உதைச்சி உள்ளே தள்ளிடலாம்னு தான் கேட்டேன். பொண்ணுங்க வாழ்க்கையில விளையாடறது இந்த மாதிரிப் பசங்களுக்கு ஒரு பொழுது போக்காயிடுச்சே!"

விஷால் ஆகாஷின் அறையை விட்டு வெளியேறி நேராக தீபிகாவின் அறைக்கு வந்தான். கதவைத் தட்டினான்.

"யாரு?" என்று தீபிகாவின் தூக்கக் குரல் கேட்டது.

"நான் விஷால். மன்னிச்சுக்கங்க அண்ணி, உங்களைத் தொந்தரவு பண்ண வேண்டியிருக்கு."

"வாங்க, உள்ளே வாங்க!" என்று விளக்கைப் போட்டு தன் கூந்தலைச் சரி செய்து கொண்டாள் தீபிகா.

அறைக்குள் வந்த விஷால், "ஒண்ணுமில்லை. இப்ப கொஞ்சம் முன்னாடி ஒரு பொடியன் மூலமாக எனக்கு ஒரு மொட்டை லெட்டர் வந்திச்சு. மேல அண்ணன் பேர் எழுதியிருந்திச்சு. பிரிச்சுப் படிச்சேன். எவனோ ஒரு தடியன் பொறுப்பில்லாமல் உங்களைப் பத்தி தப்பா எழுதியிருக்கான். ஏற்கனவே நீங்க யாரையோ லவ் செஞ்சதா கிறுக்கியிருக்கிறான். தயக்கத்தோட அண்ணன் கிட்ட சொன்னன். அவர் தனக்கு எல்லா விஷயமும் தெரியும்னு சொன்னாரு. நீங்க தயவு செஞ்சி தர்மசங்கடப்படாதீங்க. இதனா ல உங்கமேல நாங்க வெச்சிருக்கிற மதிப்பும், மரியாதையும் கொஞ்சம் கூட மாறலை, இப்படி ஒரு லெட்டர் எழுதின அவனை போலீஸ்ல

(தொடர்ந்து வரும்)

மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

# கில்லாடி கிளின்ரன்



அமெரிக்க நாட்டின் இளம் வயது ஜனாதிபதி பில் கிளின்ரன் இருமுறை ஜனாதிபதியாக இருந்து விரைவில் ஆட்சிப் பொறுப்பில் இருந்து ஓய்வு பெறப் போகிறார்.

இவர் ஆட்சிக்கு வந்த ஆரம்பகாலத்தில் இவரைப் பற்றிப் பல்வேறு பாலியல் குற்றச்சாட்டுக்கள் கிளம்பின. ஆனால் அவையெல்லாம் பெரிதாக எடுபடவில்லை.

சில வருடங்களுக்கு முன் மோனிக்கா லிவின்ஸ்கியுடனான தொடர்புகள் வெளியான பின்னர் தான் கிளின்ரனின் சுயரூபத்தை உலகம் கண்டது.

நம் நாட்டைப்போல் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கலாசாரம் எல்லாம் அமெரிக்காவில் கிடையாது. பாடசாலை மாணவ மாணவிகளே பாலியல் விளையாட்டில் ஈடுபடுவார்கள்.

கணவன், மனைவியையும், மனைவி கணவனையும் மாற்றிக் கொள்வார்கள். இந்தக் கலாசாரம் கொண்ட நாட்டில், ஜனாதிபதியாக வருபவர் பெண்கள் விஷயத்தில் நேர்மையானவராக இருக்க வேண்டும் என அமெரிக்க மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

தேர்தலுக்கு வேட்பாளரைத் தேர்வு செய்யும் முன்பே அவரது கடந்தகால, நிகழ்கால அந்தரங்க மற்றும் பகிரங்க வாழ்க்கைகள் அலசப்படும்.

இந்த விஷயத்தில் கிளின்ரனிடம் அமெரிக்கர்கள் ஏமாந்து விட்டனர் என்றே கூற வேண்டும்.

இப்போது பவுலா ஜோன்ஸ், மோனிக்கா போன்றவர்கள் கிளின்ரனுடன் பாலியல் தொடர்புகளை வைத்திருந்தார்கள் என்று நிரூபிக்கப்பட்டு விட்டது. இதற்கு முதல் கிளின்ரன் ஜனாதிபதியாக வெற்றி பெற்று ஆட்சி நடத்திய ஆரம்ப காலத்தில் ஏராளமான பாலியல் புகார்கள் வந்தன.

கிளின்ரன் மீது முதன் முதலில் பாலியல் குற்றச்சாட்டை முன் வைத்தவர் அர்கன்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்த ஜெனிஃபர் ஃபிளவர் என்ற பெண். இவர் ஒரு காபரே நடனக்காரி.

கிளின்ரனுடன் தனக்கு 12 ஆண்டுகள் கள்ளத் தொடர்பு இருந்ததாகக் கூறினார் இவர்.

"கிளின்ரன் ஒரு பாலியல் வெறி பிடித்தவர். ஜனாதிபதி பதவிக்கு இலாயக்கற்றவர்!" என்று கூறியுள்ள ஜெனிஃபர், கிளின்ரன் படுக்கையில் எந்தளவு மோசமாக நடந்து கொள்வார் என்பதை பொதுக் கூட்டத்தில் விபரித்துள்ளார். தொலைக் காட்சிப் பேட்டியில் கூறியுள்ளார்.

கிளின்ரன் அர்க்கன்சா மாநில கவர்னராக இருந்த போது, இந்தத் தொடர்பு ஏற்பட்டதாகக் கூறியுள்ளார்.

அடுத்தவர் பெயர்- சார்லி பெர்ட்யூ. அமெரிக்க மாநிலம் ஒன்றின் அழகியாக ஒருமுறை தேர்ந்தெடுக்கப் பட்டவர் இவர்.

"கிளின்ரன் அடிக்கடி என் வீட்டுக்கு வருவார். என்னுடன் பலகாலம் தொடர்பு வைத்திருந்தார்!" என்று கூறியுள்ளார் சார்லி.

இன்னொருவர் லோரி நிக்கலஸ். கிளின்ரன் கவர்னராக இருந்த போது அவரது உதவியாளராக இருந்தவர் தான் லோரி.

"என்னுடனும் கிளின்ரன் பாலியல் தொடர்புகளை வைத்திருந்தார்!" என்று கூறுகிறார் லோரி.

இவர்கள் மட்டுமல்ல, மேலும் நால்வரும் கிளின்ரன் தம்முடன் பாலியல் தொடர்புகளை வைத்திருந்தார் என அப்போது தெரிவித்திருந்தனர்.

அவர்கள் யார் தெரியுமா?

* எலிசபெத் வார்ட், இவரும் உள்ளூர் அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். நீலப் படங்களில் நடிப்பவர்.
* லென்கோலா சுலிவன். இவர் கிளின்ரன் அலுவலகத்தில் முன்பு வேலை பாார்த்தவர்.
* டெபோரா மேதிஸ். இவர் ஒரு நிருபர்.
* சுசிஸ் விட்டாகர். இவரும் கிளின்ரன் அலுவலகத்தில் பணியாற்றியவர்.






தன்னுடன் கிளின்ரன் நடந்து கொண்டதை கூட்டத்தில் விபரிக்கும் ஜெனிஃபர்



சுலிவன்



எலிசபத்



டெபோரா

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 14

இந்தியா அந்நிய நாட்டிடமிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதற்காக எண்ணற்ற போராட்டங்களை நடத்தியது. மாபெரும் தியாகங்களைச் செய்தது. மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் ஜவஹர்லால் நேரு போன்ற தலைவர்களின் வழிகாட்டலில் வன்முறைகளுக்குச் சிறிதளவும் இடங்கொடுக்காத அகிம்சை வழிப் போராட்டங்கள் தொடர்ந்தன. 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற நாமக்கல்

## 'சங்கிலியன்' அரங்கேற்றம்

கவிஞர் அவர்களின் வார்த்தைகளுக்கு உயிர் கொடுப்பது போல் இந்தியாவில் விடுதலை வேட்கை கொண்ட மக்கள் கிளர்ந்தெழுந்தனர்.

அகிம்சை வழிப் போராட்டம் ஒரு புறம்; மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த அதே வேளையில், நாடு தழுவிய ரீதியில் ஆங்காங்கே வன்முறைச் சம்பவங்களும் இடம் பெறாமலில்லை. வெள்ளை ஆட்சியாளர்களின் அடக்கு முறைகள் வரம்பு மீறியதாக இருந்தன. மேற்கொண்டும் பாரத நாட்டை தமது கட்டுப் பாட்டில் வைத்திருப்பது அபாயகரமானது என்று கருதியே வெள்ளையாதிக்கம் 1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி நாட்டுக்குச் சுதந்திரம் அளித்துவிட்டு நாட்டை விட்டு அகன்றது.

இந்தியாவில் இடம்பெற்ற சுதந்திரப் போராட்டங்களில் அக்காலகட்டத்தில் இலங்கையிலிருந்த சில தலைவர்களும் ஈடுபட்டனர். இங்கிருந்து அங்கு சென்று அகிம்சைப் போராட்டங்களில் கலந்து கொண்ட எமது நாட்டுத் தொண்டர்கள் பலர் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் இந்தியச் சிறைகளில் தண்டனை அனுபவித்துள்ளனர்.

டாக்டர் என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, ஃபிலிப் குணவர்த்தனா போன்ற இடது சாரித் தலைவர்களும் இந்தியா சென்று இந்திய சுதந்திரப் போராட்டங்களில் பங்கேற்றனர்.

இலங்கையில் சுதந்திரம் வேண்டி பாரியளவிலான போராட்டங்கள் எதுவும் நடைபெறாத போதும் இந்த நாட்டுக்கு 1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதியன்று சுதந்திரம் வழங்கப்பட்டது. சேர்.பொன் இராமநாதன், அவருடைய சகோதரர் சேர். பொன் அருணாச்சலம் மற்றும் சில சிங்களச் சகோதரர்கள் மட்டுமே பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை பெறவேண்டும் என்று குரல் கொடுத்தார்கள்.

'இலங்கை சுதந்திர நாடானால் அயலிலுள்ள பெரிய நாடான இந்தியாவை அனுசரித்தே தன்னுடைய செயற்பாடுகளை மேற்கொள்ளும்' என்று இந்தியத் தலைவர்கள் பெரிதும் நம்பி இருந்தனர். ஆனால் இந்த நம்பிக்கை மிகக் குறுகிய காலத்திலேயே சிதைந்து சின்னாபின்னப் பட்டுப் போய் விட்டது.

'இலங்கை நாட்டுக்கான சுதந்திரத்தைப் பெற்று அனுபவிக்க வேண்டியவர்கள் நாங்கள் மட்டுமே,' என்று கருதிய அன்றைய சிங்களத் தலைவர்கள் இந்த நாட்டில் வாழும் ஏனைய இன மக்களை அடக்கி ஒடுக்குவதற்கு அன்றே திட்டம் வகுத்தனர். மாகாணங்களிலிருந்தது எட்டு பேரும் மத்திய மலைப் பிரதேசங்களிலிருந்து எட்டுப் பேருமாக மொத்தம் 16 தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்றத்தை அலங்கரித்தனர்.

### ஐம்பதுக்கு ஐம்பது

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்படுவதற்கு முனனர், சோல்பரி பிரபுவின் தலைமையில் இலங்கைக்கு சுயாட்சி வழங்குவது தொடர்பாக இங்கு வந்திருந்த விசாரணைச் சபையின் முன்னிலையில், தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் தோன்றி, இந்நாட்டின் ஆட்சிமுறையில் 'ஐம்பதுக்கு ஐம்பது' பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டால் மட்டுமே சிறுபான்மையினரின் உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்பட வாய்ப்பு ஏற்படும் என்று வாதாடினார். இந்நாட்டில் பெரும் பான்மையாகவுள்ள சமூகத்தினரான சிங்களவர்களுக்கு ஐம்பது சதவிகித பிரதிநிதித்துவமும் சிறுபான்மையினரான தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மற்றும் ஏனைய இனத்தவர்களுக்கும் மொத்தமாக ஐம்பது வீத பிரதி நிதித்துவமும் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்பதே பொன்னம்பலம் அவர்களின் கோரிக்கை.



திரு.பொன்னம்பலம் அவர்களின் இந்தக் கோரிக்கைக்கு பெரும்பான்மை சமூகத்தினர் மட்டுமல்லாமல் சிறுபான்மையினரிடமும் ஆதரவு கிட்டவில்லை. இதனால் ஐம்பதுக்கு ஐம்பது என்ற கொள்கை பிசுபிசுத்துப் போய் விட்டது.


பாராளுமன்றில் தமிழர்களுக்கு கணிசமானளவு பிரதிநிதித்துவம் இருந்தால், பெரும்பான்மை சிங்கள மக்கள் வருங்காலத்தில் அழிந்து சிதைந்து விடக் கூடும் என்று கருதிய சிங்களத் தலைவர்கள் தமிழர்களுடைய பிரதிநிதித்துவத்தை சரி அரைவாசியாக வெட்டி விடத் திட்டமிட்டனர்.

'ஐம்பதுக்கு ஐம்பதா கேட்கிறீர்கள்? உங்களுடைய பலத்தையே ஐம்பதுக்கு ஐம்பதாகக் குறைத்து விடுகிறோம், என்று சபதமிட்ட சிங்களத் தலைவர்கள், மலையகத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவாகி வந்த மலையகத் தமிழ்ப் பிரதிநிதிகளின் பிரதிநிதித்துவத்தைப் பறித்தனர். இதற்காகக் கொண்டு வரப்பட்டதே 'இந்தியப் பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டம்.' மிகத் துல்லியமாகக் கணக்கிட்டு ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பின்னர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த எவருக்கும் இந் நாட்டில் பிரஜாவுரிமை கிடையாது என்று பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்ற வைத்தனர்.

இச்சட்டம் கொண்டுவரப்பட்டமையானது இந்தியத் தலைவர்களின் முகத்திலேயே கரிபூசியதற்குச் சமமாக இருந்தது. இதில் வேடிக்கை என்னவென்றால் ஐம்பதுக்கு ஐம்பது பிரதிநிதித்துவம் கோரி, குரலெழுப்பிய தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களே, இந்திய பிரஜா உரிமை சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தார் என்பதே.

### தமிழரசுக் கட்சி

தமிழ்க் காங்கிரஸில் திரு. பொன்னம்பலத்துடன் இணைந்திருந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் மற்றும் சி.வன்னியசிங்கம்



ஆகிய தலைவர்கள் தமிழ்க் காங்கிரஸிலிருந்து வெளியேறினர்.

"பெரும்பான்மையினரிடமிருந்து சிறுபான்மையினர் யாசித்துத்தான் உரிமையைப் பெற வேண்டும் என்ற நிலை ஏற்படாமல் இந்த நாட்டுக்கு சமஷ்டி முறையிலான கூட்டாட்சியே உகந்தது" என்று கூறி அந்தக் குறிக்கோளை அடைவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற புதிய கட்சியை திரு.செல்வநாயகம் அவர்கள் தோற்றுவித்தார்.

தமிழர்களுக்கு விரோதமான ஒரு பிரேரணையை ஆதரித்தமைக்காக தமது கொள்கையிலிருந்து மாறுபட்ட திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களுக்கு மந்திரி பதவியொன்று கொடுக்கப்பட்டது. அந்த மந்திரிப் பதவியை வைத்துக்கொண்டு தனது பாராளுமன்ற ஸ்தானத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று கருதிய திரு.பொன்னம்பலம் அவர்கள் அவருடைய தமிழ்க் காங்கிரஸ் கட்சி தமிழ் மக்களிடம் செல்வாக்கினை இழந்த அதே வேளை தமக்கென சுயநிர்ணய உரிமை

## இரா. பத்மநாதன்

பெற்ற சமஷ்டி ஆட்சி அமைப்பு முறையொன்று வேண்டும் என்று குரல் கொடுத்த இலங்கை தமிரசுக் கட்சி மக்களிடம் செல்வாக்கினைப் பெற்றது. இதன் அடிப்படையிலேயே மட்டக்களப்புத் தொகுதியில் இக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட திரு.செல்லையா இராஜதுரை அமோக வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார்.

மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளைப் பரப்புவதற்காக திரு. இராஜதுரை அவர்கள் பட்டி தொட்டிகளிலும் நாடுநகர்ப்புறங்களிலும் சென்று பிரசாரம் செய்யலானார். தமிழரசுக் கட்சியின் நேர்மையான கொள்கை உறுதிப்பாடும் இராசதுரை அவர்களின் அழகு தமிழ்ச் சொல்லாற்றலும் ஒன்றிணைந்து-இன்றைய அம்பாறை மாவட்டம் உட்பட அன்றைய மட்டக்களப்புத் தமிழகம் எங்கும் கட்சியின் கொள்கைகள் பூரணமாகப் பரவலாயிற்று. மக்களுடைய ஆதரவும் பெருகலாயிற்று.

திரு.இராஜதுரையைப் பின்பற்றி ஒரு பெரும் கூட்டமே திரளலாயிற்று. பாராளுமன்ற உறுப்பினர் என்ற பந்தா அவரிடம் எப்போதும் தலையெடுத்ததில்லை. அவரைவிட வயதில் முதிர்ந்தவர்கள் அவரைத் "தம்பி!" என்றும் வயதில் குறைந்தவர்கள் "அண்ணா!" என்றும் அழைத்தனர்.

இக்காலகட்டத்தில் மட்டக்களப்பு அரச அலுவலகங்களில் பணியாற்றி வந்த பல தமிழ் அலுவலர்களும் பெரும்பாலும் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்களாகவே இருந்தனர். இவர்களைத் தவிர கலாசாலைகளில் படித்து வந்த மாணவர்களும் திரு.இராஜதுரைக்கு ஆதரவாக முன்னும் பின்னும் திரண்டு நின்றனர்.

### சங்கிலியன்

யாழ்ப்பாணத்து கடைசித் தமிழ் மன்னனாக விளங்கிய 'சங்கிலியன்' வரலாற்றை நாடகமாகத் தயாரித்து மேடையேற்றுவதற்கு திரு.இராசதுரையுடன் நானும் இணைந்து முயற்சி எடுத்தோம். இருவரும் இரவு பகலாக சங்கிலியன் வரலாற்றை நாடகமாக வடிவமைத்தேன்.

தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு கிளைத் தலைவரான திரு.பூபாலரத்தினம் அவர்களுடைய இல்லத்தில் மாலை வேளைகளில் ஒத்திகைகளை நடத்தினோம். இந்நாடகத்தை மட்டக்களப்பு நகர மண்டபத்தில் அரங்கேற்றுவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்தோம். குறிப்பிட்ட தினத்தன்று மேடை அலங்காரப் பொருட்கள் யாவும் பிற்பகல் நகர மண்டபத்திற்கு வந்து சேர்ந்துவிட்டன. குறிப்பிட்ட வேளையில் நாடகமும் தொடங்கியது. காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

நாடகத்தின்படி இறுதியில் வெள்ளையரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு சங்கிலிய மன்னன் இரையாக்கப்படும் காட்சி இடம் பெறவேண்டும். நாடகத்தை இயக்கும் பொறுப்பிலிருந்த. நான் இறுதிக் கட்டத்தில் பயன்படுத்த வேண்டிய துப்பாக்கியை அதுவரை தேடாதிருந்து விட்டேன். இராசதுரை அவர்களின் சொந்தத் துப்பாக்கி அவருடைய வீட்டிலிருந்து, ஏனைய நாடக மேடைப் பொருட்களுடன் ஏற்கனவே வந்து சேர்ந்திருக்க வேண்டியது. ஆனால் மேடையில் உள்ளறைகளில் எங்கு தேடியும் அதனைக் காணவில்லை. என்னுடைய தவிப்பைக் கண்ட பலரும் வீட்டிலிருந்து துப்பாக்கியைக் கொண்டு வந்து சேர்ந்து விடலாம் என்று ஓடிச் சென்றனர்.

சரியான பொருத்தமான நேரத்தில் மேடைக்கு-கடைசிக் காட்சிக்கு-துப்பாக்கி வந்து சேர்ந்தது. சங்கிலியனை சுடுவதற்கு ஆயத்தமாக நின்றிருந்த வெள்ளைக்காரத் துரையாக நடித்த திரு.ஜோசப் என்பவரிடம் அத்துப்பாக்கி கொடுக்கப்பட ஆயத்தமான போது, ஏதோ ஒரு உந்து சக்தியால் தூண்டப்பட்ட நான், மேடையின் அருகில் மறைவிலிருந்து அத்துப்பாக்கியைப் பறித்தெடுத்தேன். இரட்டைக் குழல் துப்பாக்கியை பரீட்சித்துப் பார்ப்பதற்காக அதனை முறித்துப் பார்த்த நான் திகைத்து நின்றேன்.

(இன்னும் வரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 68**

# அரங்கம் அந்தரங்கம்

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

ஐநூறு ரூபாய் சம்பளத்திலா அதிகாரிகள் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்?

அழகான பங்களாக்கள் கட்டவும், அமெரிக்காவுக்குப் பிள்ளைகளை அனுப்பவும் அவர்களால் எப்படி முடிகிறது?

ஜனநாயகத்துக்குப் பொறுப்பேற்றுக் கொண்டகளிமண் மூளைகள், சட்ட நிர்வாகத்தில் அயோக்கியர்கள் தான் அதிகம் இருக்கிறார்கள் என்பதை உணராமல், வரட்டுத் தத்துவங்களால் மக்களை ஏமாற்றிப் போலீஸ்காரர்களைப் பணக்காரர்களாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பாஸ்டிலி சிறை உடைக்கப்பட்டதுபோல் ஒரு கட்டத்தில் போலீஸ் ஸ்டேஷன்கள் தகர்க்கப்படும் நிலை வராது என்று அவர்கள் நம்புகிறார்கள்.

சந்திரபுஷ்கரணியை விபசாரத்துக்கு அழைத்தவர்களே, அவளை இப்போது கைது செய்ய ஆள் அனுப்பி இருக்கிறார்கள்.

தங்கக் கட்டியில் பங்கு பெற்றவர்களே, தங்கத்தைக் கைப்பற்றி விட்டார்கள் அல்லவா!

சமுதாயத்தில்சிதறிக் கிடக்கின்ற சாதாரண மக்களுக்குப் பத்திரிகைகளில் வரும் செய்திகள் தெரிகின்றனவே தவிர, ஒவ்வொரு செய்திக்கும் உள்ள பின்னணி தெரியாது.


கைது செய்யப்பட்டவர்கள் யோக்கியர்களாகவும்,

கைது செய்தவர்கள் அயோக்கியர்களாகவும் இருப்பதை அவர்கள் அறிய மாட்டார்கள்.

சந்திரபுஷ்கரணி தனியாகவே இருந்தாள். கூட எந்த ஆடவனும் இல்லை. அவள் நன்றாகக் குளித்து முழுகிக் குங்குமப் பொட்டு வைத்திருந்தாள். அவள் விபசாரததில் ஈடுபட்டதாகப் போலீசார் கைது செய்தார்கள்!

அந்த அதிகாரிகளை நான் ஏதாவது செய்திருக்க முடியும். ஆனால், 'அதிகாரிகள் தங்கள் கடமையைச் செய்ய முடியாமல் தடுத்ததாக' என்றொரு சட்டம் இருக்கிறதே!

கற்பகம் தூணைப் பிடித்தபடி அழுது கொண்டிருந்தாள்; நாராயணசாமி தலையிலே கைவைத்தபடி உட்கார்ந்திருந்தார்.



நான் அமைதியாகச் சந்திரபுஷ்கரணியைப் பார்த்து, "நீ போம்மா, நான் வக்கீலோடு, வருகிறேன்!" என்றேன்.

அவள் அழுதாள்.

நான் காவல் அதிகாரிகளைப் பார்த்து, "ஸ்டேஷனில் ஏதாவது தீங்கு நடந்தால் பொறி பறக்கும், ஜாக்கிரதை!" என்றேன்.

என்னுடைய சக்தி எனக்குத் தெரியும்.

ஜனங்களைக் கிளப்பி விடுவது என்று நான் முடிவு கட்டினால், வானத்தில் இருக்கும் சந்திரசூரியர்களே இறங்கி வந்தாலும் அந்த வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த முடியாது.

போலீஸ் வேன் வரையில் அவளைக் கொண்டுபோய் நான் ஏற்றி விட்டேன்.

பின்னாலேயே என் காரில் ஏறிக் கொண்டு நேரே பழைய மதுக்குளத்து வக்கீல் வீட்டுக்குப் போனேன்.

அவர் பழையபடி மந்திரிகளையும், போலீஸ் அதிகாரிகளையும் என்னுடைய பாணியில் ஒரு தாக்குத் தாக்கினார்.

"அனார்க்கிஸம் ஒன்றுதான் இந்தியாவுக்குச் சரியான மருந்து!" என்றார்.

சாதாரணமாக ஜாமீன் எடுக்க அவர் போலீஸ் ஸ்டேஷனுக்கு எல்லாம் போவதில்லை. நான் கூப்பிட்டேன் என்று என்னோடு வந்து விட்டார். அதுவும் ஒரு அர்ச்சனையோடுதான் வந்தார்.

"இந்தத் திருட்டுப் பயல்களை எல்லாம் நடுத்தெருவில் வைத்துச் சுட வேண்டும்" என்றார்.

ஸ்டேஷனுக்குள் நுழையும்போதே, "கூ இஸ் தட் அசிஸ்டெண்ட் கமிஷனர்?" என்ற அதிகார தோரணையில் கேட்டுக் கொண்டேதான் உள்ளே நுழைந்தார்.

"எஸ். மை. செல்ப்!" என்றார் அங்கிருந்த அதிகாரி.

எப்பொழுதுமே போலீஸ்காரன் வீரன் போல் காட்சியளிப்பான்; எதிர்த்து வாதாடினால் பேதையாகி விடுவான்.

சந்திரபுஷ்கரணிக்கு ஒரு ஆசனம் கொடுத்து, லாக் அப்பில் உட்கார வைத்திருந்தார்கள்.

மனிதக் குரங்கை கூண்டில் அடைப்பது போன்ற போலீஸ் லாக் அப்புகள்; அங்கே மனிதாபிமானத்தைக் கழற்றி வைத்துவிட்ட சில எந்திரங்கள்.

ஆற்காடு நவாப்பால் உருவாக்கப்பட்ட கொத்தவால்கள், வெள்ளைக்காரனால் சட்டை மாற்றப்பட்டவர்கள்.

சட்டம் ஒழுங்கை காப்பாற்றுவதற்காகப் பதினோராவது அவதாரம் எடுத்தவர்கள்!

நான் கூட்டிப்போன வக்கீல், ஏற்கனவே கற்பகத்துக்கு ஆஜரானவர்தான். அவர் ஒரு கேள்வி கேட்டார்.

"ஒரு மனிதன் குடித்தான் என்பதற்கு அடையாளமாக அவன் வைத்திருக்கும் பாட்டிலைப் பிடிக்கிறீர்கள். விபசாரம் செய்ததற்கு அடையாளமாக...?"

"நாங்கள் என்ன செய்வது? அது எங்கள் கடமை!" என்றார் அதிகாரி.

"கடமையில், இந்த 'மை' இருக்கிறதே அது எல்லாவற்றுக்கும வருகிறது. கொடுமைக்கும் வருகிறது; நேர்மைக்கும் வரு

## கவியரசு கண்ணதாசன்

கிறது. நீங்கள் செய்தது என்ன என்பதை நான் கோர்ட்டிலே பார்த்துக் கொள்கிறேன். இப்போது அந்தப் பெண்ணை ஜாமீனில் விடுதலை செய்யுங்கள்!" என்றார்.

"கோர்ட்டுக்குத்தான் அந்த அதிகாரம்!" என்றார் அந்த அதிகாரி.

"உங்களுக்கும் உண்டு!" என்றார் வக்கீல்.

(அந்தரங்கம் வரும்)

# அகதியின் கனவு

அவனுக்கு இதுதான் முதல் விமானப் பயணம். எப்படியோ கனடாவிற்குப் போய்ச் சேர்ந்துவிடவேண்டும். இலங்கையிலிருந்து பட்ட துயரம் போதும். முடியாத முயற்சிகள், புலராத பொழுதுகள், கிடையாத பொருட்கள், அடிமுடிதேடும் ஆமிப்பட்டாளம், புரியாத புதினங்கள், இளமைத்துடிப்பின் இயக்கமிழந்த நிலைப்பாடு, பயம், பசி, ஏக்கம், ஒளி தெரியாத கிடங்கு வாழ்க்கை....கிடைத்தற்கரிய மானிட வாழ்வின் அருங்கொடையை அனுபவிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை.



மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இதயம் கலங்கும் பெற்றோரும், இளம் தங்கையும், தம்பியும். எப்படியாவது கனடா சென்று அவர்களையும் காப்பாற்ற வேண்டும். வெளிநாடு சென்றாலொழிய அவர்களைக் காப்பாற்ற முடியாது. தீர்மானித்த முடிவு மாற்றமேயில்லை.

சீராளன் ஒருவகையில் கொடுத்துவைத்தவன் என்றே சொல்லவேண்டும். சின்னத்தம்பிப் போடியார் வசதி படைத்தவர். ஊரில் பிரபல்யமானவர். தோட்டம், துரவு, உழவு இயந்திரம் எல்லாம் வைத்திருந்தார். எப்படியோ மகனின் பயணத்திற்குக் காசு திடீரெனப் புரட்டி முகவரையும் கண்டு எல்லா ஒழுங்குகளையும் செய்து விட்டார். மகன் ஒரு பிரச்சனையும் இல்லாமல் விமானம் ஏறிவிட்டதாகவும் செய்தி வந்துவிட்டதால் தனது சாய்மனைக் கதிரையில் அமர்ந்து நிம்மதியடைந்தார்.

சீராளன் கொழும்பிலிருந்து சிங்கப்பூர் மார்க்கமாகக் 'கராக்கஸ்' என்ற வெனிசுலா நாட்டுத் தலைநகரில் இரவு நேரத்தில் வந்து இறங்கினான். முகவரின் பணியாள் சொல்லியபடி சீராளனை விமானநிலையத்திலிருந்து ஒரு விடுதிக்கு அழைத்துச் சென்றான்.

அந்த விடுதியில் ஏற்கனவே கனடா போவதற்கென ஆறு பேர் வந்து இரண்டு மாதங்களாகக் காத்து நிற்கிறார்கள். சீராளனும் அவர்களுடன் சேருகிறான். மெக்சிக்கோ ஊடாக அமெரிக்கா சென்று அங்கிருந்து கனடா நாட்டு எல்லையில் உள்ள கனேடியக் குடிவரவுத் திணைக்கள அதிகாரியிடம் அகதிநிலை கோருவதுதான் எல்லாரது திட்டமும்.

"பலர் இப்படிச் சென்று கனடாவில் வாழ்கிறார்கள். அரசாங்கம் பண உதவியும் செய்வதால் இலங்கை வாழ்க்கையை விட மிகவும் உயர்ந்த நிலையில் வாழ்வதுடன், எந்தவித பயமோ துன்புறுத்தலோ இன்றி மிகவும் சுதந்திரமாக வாழ்கிறார்கள். நீங்களும் சென்றுவிடலாம். சற்றுப் பொறுங்கள். அங்கு செல்லும்வரை தியாக உணர்வுடன் பொறுமையாக என் சொல்லைக் கேட்டு நடங்கள். உங்களுக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது. உங்கள் கனவு நனவாகும்!" இது பயண முகவரின் உபதேசம்.

சீராளனுக்கு இனி அதிகம் கவலைப்படத் தேவையில்லை என்ற ஓர் உணர்வு. விரைவில் தன் கனவும் நனவாகிவிடும் என்ற நம்பிக்கை உணர்வு. அந்தப் பூரிப்பில் சாப்பாடும் இல்லாமல் இருந்தான். சோறு தண்ணி இல்லாவிட்டாலும் பரவாயில்லை. பட்டினி கிடந்தாவது கனடாவிற்குள் நுழைந்துவிடவேண்டும். இப்படித் திட சங்கற்பம் பூண்டு கொண்டான்.

நாட்கள் சில கழிந்தன, ஒரு நாள் தன்னுடனிருந்தவர்களில் நான்கு பேர்களுடன் ஏஜென்ட் புறப்பட்டான். இனி அடுத்தது சீராளனும் மற்ற இருவரும்தான். இரண்டு வாரங்களின் பின்பு ஈசன் என்ற அந்த ஏஜன்ட் மீண்டும் வந்தான். ஈசன் என்பது அவனது சொந்தப் பெயர் அல்ல. கொழும்பில் அவனுக்கு ஒரு கடையும் சொந்த வீடும் உள்ளன. மூன்று வருடங்களுக்கு முன்னர் ஈசன் மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் வாழ்ந்தவன். ஏஜன்ட் வேலை செய்தே வீடும், தான் வேலை செய்த கடையையும் வாங்கியவன். நிறையப்பேர் அவன் மூலமாக வெளிநாட்டுக்குப் போய் உள்ளார்கள் எனப் பேசிக் கொள்வார்கள். ஓரளவு நேர்மையானவன் போலும்!

விடுதிக்கு வந்த ஈசன் "நாளை மறுதினம் கொழும்பிலிருந்து இன்னொருவர் இங்க வருவார். அவரை அதிகாலையில் நான் போய் அழைத்து வருவேன்"-என்று கூறிவிட்டு அவன் தங்கி நிற்கும் வேறோர் மறைமுக விடுதிக்குச் சென்று விட்டான்.

ஒருமாதமாகிவிட்டது-ஈசன் இன்னும் சீராளனைக் கூட்டிச் செல்லவில்லை. பதிலுக்கு இடைக்கிடை வந்து கனடா எல்லையில் அதிகாரிகள் கேட்கும் கேள்விகளுக்கு எப்படி பதில் அளிக்கவேண்டும் என்ற பாடம் நடைபெறலாயிற்று. நாளை, மறுநாள் என்று நாட்கள் வேகமாக நகர்ந்தன. கடைசியில் ஒருநாள் இரவு வந்த ஈசன் நாளை சீராளனும் குமார் என்ற இன்னொரு பையனும் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்றும் நேரத்திற்கு தூங்குமாறும் கூறிவிட்டுச் சென்று விட்டான். அடுத்தநாள் அதிகாலையில் குறிப்பிட்டபடி கராக்காஸிலிருந்து மெக்சிக்கோ நகர் வந்ததும் அங்கு ஈசனின் கையாள் வந்து இருவரையும் அழைத்துச் சென்று ஒரு தோட்டத்து வீட்டில் தங்கவைத்தான். அவன் ஸ்பானிய மொழி பேசுபவன். கொஞ்சம் ஆங்கிலம் பேசுவான்.

அடுத்த நாள் மாலை 5 மணி போல மூவரும் ஒரு பிக்கப் வண்டியில் ஏறி ஒரு காட்டுப்பாதை வழியாக இரவு 11 மணிவரையும் ஒடி ஓர் இடத்தில் இறங்கினர். விமானநிலையத்தைத் தேடிய சீராளனின் புருவம் சுருங்கிற்று. ஒற்றையடிப்பாதையால் சற்றுத் தூரம் சென்றவர்களுக்கு வழியேயில்லாத புதர்கள் அடர்ந்த பகுதி எதிரில் தெரிந்தது. அதற்குள் அந்த இருட்டுவேளையில் இரண்டு மூன்று மைல்கள் நடந்த பின்பு ஓர் நீர்த்தேக்கத்தை அடைந்தனர். பின்னிரவாகிவிட்டது. சற்றுக் குளிராகவும் பயமாகவுமிருந்தது சீராளனுக்கு.

"இந்த ஆற்றைக் கடந்தால் அமெரிக்கா தான். அதோ தெரிகிறதே! அதுதான் அமெரிக்க எல்லையிலுள்ள தேடுதல் விளக்கு. அந்த விளக்கொளியில் படாமல் ஆற்றைக் கடக்க வேண்டும். சத்தமும் போடக் கூடாது. உங்களிடமிருக்கும் எல்லாப் பெறுமதியானவைகளையும் என்னிடம் தந்துவிடுங்கள். அந்தக்கரையில் பெற்றுக் கொள்ளலாம்!" என்றான் ஸ்பானியன். சீராளன் தன்தாய் கொடுத்த 5 பவுன் தங்கச் சங்கிலி தொடக்கம் தன்னிடமிருந்த டொலர் நோட்டுக்கள் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டான். விமானத்தில் போகாமல் இப்படியான பயங்கரப் பயணம் செல்வதாக ஈசன் இவர்களிடம் சொல்ல வில்லை. உடுப்புக்களையும் கழற்றித் தலையில் மூட்டை கட்டி வைத்தபடி மரக்கொத்துடன் சற்றுத் தள்ளி தள்ளி நடந்து கொண்டிருந்தார்கள். தேடுதல் வெளிச்சம் வரும் போதெல்லாம் தண்ணீருக்குள் ஒளிந்து கொண்டு ஆடாமல் அசையாமல் நிற்க வேண்டியிருந்தது. அப்படியே நடந்து அடுத்து கரையை அடை கையில் கிட்டத்தட்ட விடியற் சாமம் இரண்டரை அல்லது மூன்று மணியாகியிருக்கும். மீண்டும் புதர்கள், பற்றைகள், மேடுபள்ளம் தாண்டி இரண்டு மைல்கள் அளவில் வேறொரு திசையில் நடந்து வருகையில் வேறொரு ஸ்பானியன் அங்கு பிக்கப் ஒன்றுடன் காத்து நின்றான்.

**கலிகிதாசன்-கனடா**

அவர்கள் இருவரும் அவர்களது மொழியில்கதைத்த பின்பு எங்களைக் கூட்டி வந்தவன் "அடியோஸ் அமீகோஸ்!" என்று கையைக் காட்டிவிட்டுக் கிளம்பி விட்டான். சீராளனும் குமாரும் புதியவனுடன் பிக்கப்பில் காட்டுவழியாக வந்து ஒரு பாதையை அடைந்து, அங்கிருந்து இரண்டு மணித்தியாலங்களின் பின்பு ஒரு பஸ்தரிப்பில் பொழுது புலர்வதற்குச் சற்று முன்னர் சாடையான இருளும் ஒளியும் கொஞ்சம் குளிர்நேரத்தில் ஒரு கோப்பிக் கடைக்குமுன்பாக நிற்பாட்டி "இங்கிருந்து நீங்கள் பஸ் எடுத்து நியூயோர்க் போய் பின்பு அங்கிருந்து கனடா எல்லையில் உள்ள பிளாற்ஸ்போர்க்கிற்குப் போகலாம்!" என்று கூறியவன் அவர்களிடம் காசு, அடையாள அட்டை முதலியவற்றைத் தந்துவிட்டு அவனும் 'அடியோஸ், குட்லக்' என்று விட்டு மாயமாக மறைந்து விட்டான்.

அவர்கள் இருவரும் தனித்து விடப்பட்டனர். கோப்பிக் கடைக்குள் சென்று ஆளுக்கொரு கோப்பி குடித்துவிட்டு ஆளையாள் பார்த்தபடி வெளியே வந்து பஸ்தரிப்பை நோக்கி நடந்தார்கள். பஸ்ஸிற்குள் ஏறிவிட்டால் பிரச்சனை தீர்ந்துவிடும் என்றெண்ணியபடி இருவரும் அருகருகே நடந்தார்கள் பின்னால் வண்டிச்சத்தம் கேட்டது. ஸ்பானியன்தான் திரும்பிவருகிறான் என நினைத்துத் திரும்பினர்கள். "குட்மோர்ணிங் ஜென்றில்மென்!" அவ்வளவுதான். அது அமெரிக்க எல்லைப் பொலிஸ் வண்டி.

அந்தச் சிறையில் சீராளனும் குமாரும் ஆறு மாதங்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு இரவும் சீராளன் கனடா பற்றிக் கனவு காண்பான். பொது ஸ்தாபனங்கள், வழக்கறிஞர்கள், நண்பர்கள் வாதாடியும் ஒரு முடிவில்லை. 'இன்று சீராளன்' மட்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுகிறான். விமானத்தில் பறந்தபடி சீராளன் கனடாவில் வந்து இறங்குவதாகக் கனவு காண்கிறான்.

# உறவு

ராதாவின் கடிதத்தில் மறைமுகமாக இழையோடியிருந்த சோகம் மங்களத்தை உடனடியாகக் கொழும்புக்கு விரைய வைத்தது. மங்களத்தின் மகன் ரவி மூன்று வருடங்களாக விரும்பி இருந்த ராதாவை ஒற்றைக் காலில் நின்று திருமணம் முடித்தவன்; கட்டி இன்னும் இரண்டரை வருடங்கள் கூட ஆகவில்லை. அதற்கிடையில் என்ன பிரச்சனை இருக்கும் என்று மனம் அசை போட்டது. மங்களம் சாதாரணமாக எல்லோரையும் போல் மருமகள் மீது வசைபாடும் குணமுடையவள் அல்ல. அதனால் தீர்க்கமான முடிவு எடுத்து விட்டாள்.

"என்னங்க; நான் ஒருக்கால் உவன் இளையவன் ரவியைப் பாத்திட்டு வரட்டே? பேரனும் பிறந்து நாற்பத்தொண்டுக்கை பாத்தாப் போலை. இப்ப இரண்டு வரியமாச்சு," என்று கணவனிடம் அனுமதி கேட்டாள்.

"என்ன மங்களம் அவசரம்? இப்ப இஞ்சை வட பகுதியிலை இருந்து கொழும்புக்கு போறதென்ன லேசுப்பட்ட காரியமே? அது சரி பிள்ளை, மருமகள் ஏதும் ஏலாமல் இருக்கிறாவே?" என்று குரலை இறக்கினார் சந்தானம்.

"அதொண்டுமில்லையப்பா. உவன் கடைக்குட்டியாயிருந்ததிலை வளர்ந்தாப்போலையும் அம்மா எண்டு மடிக்கை வந்து கிடப்பான். இப்ப அவனே அப்பாவாயிட்டான். எனக்குப் பாக்க ஆசையிராதே... அதோடை இந்தப் பெத்தவயிறு கிடந்து துடிக்குது."

"ஓம்...ஓம்.... அம்மாமாருக்கு சென்டிமேன்டா ஒரு சொல்லுக் கிடக்கு. நாங்கள் என்னத்தைச் சொல்லுறது? நீ முடிவெடுத்திட்டாய். இனி அப்பீல் ஏது?" என்று அரைமனதுடன் சம்மதித்தார் சந்தானம்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்தால் சாப்பாடு என்னத்துக்கு எண்டிட்டு இப்ப பூசணிக்காயாம். ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் எண்டிறது சரியாப் போச்சு."

"ஆஹாஹா, அம்மையாருக்கு இப்பவும் உடம்பு அழகுராணிப் போட்டியில் கலந்து கொள்ளுமளவுக்கு ஸ்லிம்மாக இருப்பதாக எண்ணமோ? தாங்கள் தங்கள் திருவுடலைக் கண்ணாடியில் பார்ப்பதேயில்லையோ?"

"அந்த நேரம் எத்தினை பேர் என்ர வடிவைப் பாத்து லைனிலை நிண்டவை தெரியுமே...? உங்களட்டை வந்து..."

"ஓமோம், கடைசி என்னைப் போல ஒரு அடிமுட்டாள் தான் கொப்பருக்கு வசதியாச் சல்லிக்காசும் தராமல் வந்து மாட்டுப்பட்டன். சரிதான் போடி இவளே, ரம்பா, சிம்ரன் ஐஸ்வரியாராய் இந்தக் கனவுக் கன்னியின் திருக்கோலத்துக்கு முன்னாலை எந்த மூலைக்கு? அடியே? உன்னைக் கட்டின போதே இஞ்சை பூச்சுத்தியாச்சு. இன்னும் எத்தினை பூச்சுத்துறதா உத்தேசம்?" ரவி தனது காதைக் காட்டி பூச்சுற்றுவது போல் பாவனை செய்திருப்பான் என்று மங்களம் மனதினுள் கற்பனை பண்ணியபோது, அவளுக்குப் பொத்துக் கொண்டு சிரிப்பு வந்தது.

"அடடே, ஒன்பதுக்கு பத்து நிமிசம் தான் கிடக்கு. இந்தாங்கோ சாப்பாடு."

அடுத்த வினாடி சாப்பாட்டுப்பெட்டி 'ணங்'கென்று சுவருடன் மோதும் சத்தம் கேட்டது.

"மூண்டு வேளையும் கொட்டிக் கொண்டு காலுக்கு மேல்கால் போட்டுக் கொண்டு வீட்டிலை கிடக்கிற உனக்கு நேரத்துக்கு சமைச்சுத் தரத் தெரியாது. ஆம்பிளை வேலையாலை களைச்சு விழுந்து வாறவன் எண்டில்லாமல் வாய்க்கு வாய் கதைக்க மட்டும் கொம்மா பழக்கி வைச்சிருக்கிறா. உன்னைக் கட்டின பாவத்துக்கு இப்ப சாப்பாடு ஒண்டு தான் இல்லாத குறை."

ஸ்கூட்டர் இரைந்து கொண்டு புறப்படும் சத்தமும் ராதாவின் விக்கலும் இணைந்து கேட்டன.



மங்களம் மிகச் சிரமப்பட்டுக் கப்பல் மூலமாகக் கொழும்பு வந்து ரவி வீட்டிற்கு வருவதற்குள் அவளுக்குப் பாதி உயிர் போய்விட்டது. ஏற்கனவே வயது போன உடம்பு, கப்பலில் வாந்தி எடுத்த களைப்பு. ஒரு மணி நேரத்துக்கு குறைவாகவே மகன், மருமகள் பேரனுடன் அளவளாவிய பின், துவண்டு படுத்து விட்டாள்.

வழமையாக அதிகாலை ஆறுமணிக்கு முன்பே எழும் வழக்கமுள்ள மங்களம் அன்று எட்டு மணியாகியும் எழும்ப முடியாமல் அசந்து தூங்கிக் கொண்டிருந்தாள். வெளியே கேட்ட பலமான பேச்சுக்குரல்கள் அவளைக் திடுக்கிட்டு விழிப்படைய வைத்தன.

"ராதா சாப்பாடெல்லாம் ரெடியா?" பரப்பரப்பாக ரவியின் குரல் கேட்டது.

"ஒரு ஐஞ்சு நிமிசம் பொறுங்களேன். முட்டை பொரிக்கிறன்!" இது மருமகள் ராதாவின் கெஞ்சலான குரல்.

"ஏண்டி உங்கப்பன்ரை ஆபிசிலா நான் வேலை செய்யிறன்? நினைச்ச நேரத்துக்குப் போறதுக்கும் வாறதுக்கும்; நீயும் உன்னர முட்டைப் பொரியலும். வைச்சு நீயே முழுங்கு. இப்பவே பூசணிக்காய் மாதிரி மொத்திப் போயிருக்கிறியே, போதாதா?"

"இப்ப உங்களுக்கு என்னைக் கண்டாலே பிடிக்கிறேல்லை. லவ் பண்ணுமட்டும் கொடியிடை, மலருடல்,

**அல்வையூர் காந்தி அருணாசலம்**

பின்னேரம் நாலரை டாணென்று அடிக்கவும் ரவி வீட்டினுள் நுழையவும் சரியாக இருந்தது. மங்களத்தின் குரல் உள்ளே கர்ண கடூரமாய் ஒலித்துக் கொண்டிருந்தது.

"ஏண்டியம்மா தாயே, வேளை தவறாமல் மூண்டு நேரமும் மூக்குப் பிடிக்கச் சாப்பிட்டுட்டு தளுக்கி மினுக்கிக் கொண்டு திரியிறாயே. அவன் பொடியன் களைச்சு விழுந்து வருவான் எண்டு கொஞ்சமாவது யோசிக்கிறாயா? உன்னையும் உன்ர பொடியையும் வளர்க்க அவன் காலமை தொடங்கிப் பின்னேரம் வரை நாய்படாப்பாடெல்லோ படுகிறான். நீ அலுங்காமல் நலுங்காமல் பவுடரையும் பொட்டையும் போட்டுக் கொண்டு ஒரு பொடியைப் பாக்கிறதுக்கு ஏதோ வெட்டி முறியிற மாதிரி நடிக்கிறாய். சொல்லுறன் எண்டு குறை நினைக்காதே. கொஞ்சம் சாப்பாட்டைக் குறை. உடம்பு வெடிக்கிற மாதிரிக் கிடக்கு!" மங்களம் உச்சஸ்தாயியில் கண்டபடி தாளித்துக் கொண்டிருந்தாள்.

"என்னம்மா இது, நீங்களுமா? மாமியாரெண்டால் இப்படித்தான் இருப்பினம் எண்டமாதிரியல்லோ கதைக்கிறியள். இந்தக் குட்டிப்பயலைப் பார்க்க மட்டும் பத்துபேர் வேணும்மம்மா. சிலவேளை மடிக்கை அவனை வைச்சுக்கொண்டு தான் ராதா சாப்பிடுகிறாள். அதோடை கட்டி இந்தளவு காலத்துக்கு ஒரு சாரம் தோச்சு எனக்குத் தெரியாது. என்னைப் போல பத்து மடங்கு வேலை செய்யிறாள். கிட்டத்தட்ட சம்பளமில்லாத ஒரு வேலைக்காரி மாதிரி முந்தி இருந்த மினுமினுக்குக்கு என்னட்டை வந்தாப்போலை மெலிஞ்சு போனாள் எண்டு நான் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறேன். நீங்களென்னடா வெண்டால்... எங்களையே நம்பி வந்தவளை இப்படி வார்த்தையாலையே குத்துறது நியாயமில்லையம்மா."

பரக்கப்பரக்க விழித்துக்கொண்டிருந்த ராதாவை கையில் பிடித்து உள்ளே கூட்டிப்போன ரவி ராதாவிடம் கிசுகிசுப்பது மங்களத்துக்கு துல்லியமாய் கேட்டது.

"ராதும்மா! அம்மாவுக்கு வயது போட்டுதுதானே, அவவைக் குறை நினைக்காதே. உனக்குத்தான் நானிருக்கிறனே, பிறகென்ன?" ராதா மகிழ்ச்சியுடன் விசும்பினாள்.

இந்த உறவு இருக்கிறதே, விசித்திரமானது தான். தாங்கள் குறை சொல்வார்கள். மற்றையவர்கள் அதையே சொன்னால் கோபம் வந்து விடும். மங்களத்தின இதழ்க்கடையோரத்தில் குறும்புப் புன்னகை ஒன்று தோன்றி மலர்ந்தது. தான் வந்த காரியம் வெற்றிகரமாக முடிந்த சந்தோஷத்தில் பேரனை வாரி எடுத்து நெஞ்சுடன் அணைத்து உச்சி மோந்தாள்.

# அவள்!... அவ...



கோயில் மணி இன்னிசையாக அவன் காதுகளில் பாய்ந்தது. 'எங்கே அவளைக் காணவில்லை.' அவளை நீண்ட காலமாக அவன் காணவில்லை. ஆனாலும் விசேட தினங்களில் அவள் வரத்தவறுவதில்லை. அந்த நம்பிக்கையில் நான்கைந்து ஏமாற்றங்களின் பின்னும் காத்திருந்தான். பாடசாலை, காலேஜ் இங்கெல்லாம் எத்தனையோ பெண்களை சந்தித்திருக்கிறான். ஆனால் அவர்கள் ஏற்படுத்தியிராத ஏதோ ஒரு வகை உணர்வினை அவள் ஏற்படுத்தியிருந்தாள்.

கணேஷ் அவனுடைய இன்பதுன்பங்களை மட்டுமல்ல இரகசியங்களையும் பங்கு போட்டுக் கொள்பவன். "சட்டுப் புட்டெண்டு போட்டு உடைக்கிறத விட்டுட்டு ஏண்டா உள்ளுக்குள்ளவைச்சு புலம்பிக்கிட்டிருக்காய்?" என்பான். அப்போதெல்லாம், "காதல வெளிப்படுத்த வார்த்தை தேவை யில்லடா, மௌனம், செய்கை இவையே போதும்டா!", இதுதான் அவனுடைய பதிலாக இருக்கும்.

அவன் கண்கள் சுற்றுமுற்றும் தேடின; எஞ்சியது ஏமாற்றமே. 'எப்படியும் வருவாள்' உள்மனம் சொல்லியது.

அவன் மனதில் அந்த சம்பாஷணை நிழலாடிவிட்டுப் போனது. "ஏண்டா இந்தப் பிடிவாதம்?" கணேஷ் கேட்டான். "பிடிவாதமில்ல, காதல்; அவள பார்த்துக்கொண்டிருக்கிறதில ஏதோ ஒரு சந்தோஷம்!"

"அதுக்காக இப்படியே இருக்கப்போறியா?",

"முயற்சி செய்து கொண்டுதானே இருக்கிறன், இதுவரையில்லாட்டியும் இனியாவது அவள் புரிஞ்சுகொள்ள வாய்ப்பிருக்கில்லையா.?"

**க.ராகுலன்-வெள்ளவத்தை**

கணேஷ் குறுக்கிட்டான்."போடா உன்ர புரிந்துணர்வும் நீயும். எங்கையாவது ஒரு பொம்பிள வந்து உங்க காதல புரிஞ்சுகொண்டன், நானும் 'உங்கள விரும்பிற'னென்டு சொல்லியிருக்கிறாளா? ஆம்பிளைகள் தாண்டா ஆரம்பிச்சுவைக்கணும்!" என்று கணேஷ் சொன்னது அவனுக்கு சரியாகவேபட்டது. அதன்பின் அவனது காத்திருப்புக்களெல்லாம் அப்படியொரு சந்தர்ப்பத்துக்காகவே.

அவன் பார்வையில் அந்த உருவம் தெளிவாகத் தெரிய ஆரம்பிக்கிறது. அது அவளேதான். கிளிப்பச்சை நிறச் சேலையில் வருகிறாள்; அவனைக் கவர்ந்திழுக்கும் அந்தச்சாந்த முகத்தில் குங்குமம் கண்டு ஒருகணம் அவன் இரத்தமே உறைந்து போனது. கழுத்தில் மாங்கல்யம் ஜொலித்தது.

"என்னடா?" கணேஷ் உலுப்பினான். "அவளக் கண்டனடா; கழுத்தில.... கழுத்தில தாலியோட!",

"என்னடா சொல்றாய்?"

"ம் அவளப்பார்த்தும் பாக்காததுபோல வந்திட்டன்டா, தற்செயலா அவள் என்னப்பாத்து பழசெல்லாம் ஞாபகம் வந்தா, அவளுக்குத்தானே மனக்கஷ்டம்; அவள்.... அவ சந்தோஷமா இருக்கணும்டா!", சொன்னபோது அவன் உதட்டில் உப்புக்கரித்தது.

# நாணம் துறந்த நிலை



அந்தச் சாலை வழியே வந்துகொண்டிருந்த விந்தன் எதிரே பாய்ந்து வந்துக்கொண்டிருந்த ஒரு காளை மாட்டைக் கண்டான். அருகில் ஒதுங்கி நின்று கொள்ளலாமா என்று யோசித்தவன், மாடு வந்த வேகத்தைக் கண்டு திரும்பி வந்தவழியே ஓடினான்.

சிறிது தூரம் வந்ததும் நின்று திரும்பிப் பார்த்தான். மாட்டைக் காணவில்லை. அது வேறு சந்தினால் திரும்பி விட்டிருந்தது.

இவனுக்கு மூச்சிரைத்தது. எங்காவது அருகில் உட்கார்ந்து கொள்ள இடம் கிடைக்குமா என்று விழிகளால் தேடினான். அபயனைக் கண்டான். அபயன் சிரித்தபடி வந்தான்.

"என்ன விந்தா! யாரைக் கண்டு இப்படிப் பயந்தோடி வருகிறாய்? மூச்சு உன் உடல் முழுவதையுமே வாங்குகிறது..."

## இலக்கிய நயம்

"ஒன்றுமில்லை. வா. முதலில் அந்த மரத்தினடியில் போய் இருந்து கொள்ளலாம்...."

இருவரும் போய் அமர்ந்தார்கள்.

"ம்... இப்ப சொல்லு, எதைக் கண்டு அப்படிப் பயந்து தலைதெறிக்க ஓடி வந்தாய்?"

"மாடு ஒன்று வெறிகொண்டது போல துரத்தி வந்தது..."

"அஹ்ஹஹ்ஹா..." என்று பெருஞ் சத்தமிட்டுச் சிரித்தான் அபயன். தொடர்ந்து "களிறெறிந்து திரும்பும் காளைப் பரம்பரை ஒரு காளை மாட்டுக்குப் பயந்து இந்த ஓட்டம் ஓடியிருக்கிறது...." சொல்லிவிட்டு குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான்.

"சும்மா சிரிக்காதே. நீ சொல்லும் வீரமெல்லாம் ஆயிரம், இரண்டாயிரம் வருசத்திற்கு முந்தின விஷயம். இப்போ காளையை அடக்கத் தெரிந்தவனுக்கு சினிமாவில் ஸ்டண்ட் நடிகனாய்த்தான் வேலை கிடைக்கும். கம்பியூட்டர் சயன்ஸ் படிச்சிருந்தால்தான் எவனுக்கும் கல்யாணமே நடக்கும்..."

"போடா, காதலும் வீரமும் தானே நமது பண்பாடு. காதலும் வீரமும் தான் வாழ்க்கை. அச்சம் என்பது மடமைக்குணம். அதைவிட இழிவு வேறில்லை."

"சின்ன வயதில் ஒரு விளையாட்டு விளையாடுவோமே உனக்கு ஞாபகமிருக்கா அபயன்? 'காவலுக்கு நீ வீரனா, கள்வன் வந்தால் பயப்படாயா?' என்று கேட்டு மற்றவர் கண்களுக்குள் ஊதி, இமைகளை படக்கென மூடுவதைப் பார்த்துச் சிரிப்போமே... அதுதான் அச்சம். நமது இயல்பான குணம். சிறு வயதிலிருந்தே அந்தக் குணம் நமக்கு இருந்ததால்தான் இத்தனை வருட காலம் வாழ முடிந்திருக்கிறது. பயம் என்ற ஒன்று இல்லையென்றால், அதற்காக தற்காத்துக் கொள்ளும் இயல்புகள் நமக்கு அமையாது போயிருந்தால், நம் சந்ததியே என்றோ அழிந்திருக்கும்......"

"நீ என்னதான் சொல்லு..... அச்சம் என்பது மடமைதான். பயந்து நடுங்குபவர்களைக் கண்டாலே எனக்கு அருவருப்பாக இருக்கிறது. அஞ்சுவதைப் போல இழிவானது வேறொன்றுமில்லை.... அஞ்சினோர்க்குச் சதா மரணம் அஞ்சாத நெஞ்சத் தாடவர்க்கு ஒரு மரணம்."

"பார்த்தாயா.....'ஆண்களுக்குத்தான் வீரம். அஞ்சாமையும் வீரமும்தான் ஆண்மை' என்பதெல்லாம் நாமாக இட்டுக் கட்டி வைத்திருப்பவை. இந்த இயல்புகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானவைதான். எல்லோரிடமும் வீரமும் இருக்கிறது. அச்சமும் இருக்கிறது. உண்மையில் பார்த்தால் வீரம் இல்லாவிட்டால் கூட உயிர் வாழ்ந்துவிடலாம், பயம் இல்லாவிட்டால் வாழமுடியாது."

"பயந்து வாழ்வதை நான் வாழ்வு என்று ஒப்புக்கொள்வதில்லை."

"நீ இட்டுக் கட்டி வைத்திருக்கும் வீர உணர்வுகளை பற்றிச் சொல்லவில்லை நான். தெருவிலே எதிரில் வரும் வாகனத்திற்கு உடனடியாக விலகிவிடுவதுபோன்ற பலவித அச்சவுணர்வுகள் நமக்குள் இயல்பாக உண்டு. அவற்றையெல்லாம் நம்முடைய இழிகுணங்கள் என்று ஒதுக்கும் வீரத்தில் முட்டாள்தனம் தான் உண்டு. அஞ்சுவது அஞ்சாமை பேதமை என்பதுதானே வள்ளுவனின் கருத்தும்..."

அஞ்சுவது அஞ்சல்தான் அறிஞர்களின் தொழில் என்கிறாயா?" என்று கேட்டுக் கைத்த சிரிப்பொன்றை வெளியிட்டான் அபயன். பிறகு எள்ளல் தொனியில்,

**தருவது முழடில்யன்**

"நாய்கட்கு வேண்டுமாம் நாணமும் அச்சமும்.... பாரதி சொல்லியிருக்கிறான் இல்லையா?"

"ஆமாம். அது நாற்குணத்தையும் சொல்லிப் பெண்ணை அடக்கி வைப்போருக்கெதிராக அவன் சீற்றத்துடன் சொன்னது. 'நாணிலாய் பொறையுமில்லாய் கண்ணிய நிலைமை யோராய் நீதி நீ காண்பதுண்டோ? என்று நாணத்தின் அவசியத்தையும் பிறிதோரிடத்தில் வலியுறுத்துகிறான். அஞ்ச வேண்டியவற்றுக்கு அஞ்சுதல் அவசியம் என்பது போல நாணுதற்குரிய இடங்களில் வெட்கம் ஏற்படாவிட்டால் தான் அவர் தவறானவராவார் வெட்கமும் வேண்டும் அபயா, வெட்கமிலாச் செய்கை இழிவானதில்லையா?"

"பெண்ணுக்கு நாணம் வேண்டுமென்கிறாயா?"

"பார்த்தாயா, திரித்துப் பொருள் கொள்கிறாயே..... உன் வாதம் தவறென்று உணர்ந்து கொண்டுவிட்டாய் நீ. நாணமும் அச்சமும் நம் எல்லோருக்குமே இயல்பான குணங்கள். அடக்கி வைப்பதற்காக அவற்றைச் சிலருக்கு வலியுறுத்தும் போதுதான் அது தவறாகிறது. நாணத்தையும் அச்சத்தையும் சொல்லி வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்பதைத் தான் பாரதி எதிர்க்கிறான். நாணம் என்கிற இயல்பான பண்பைத் தொலைத்துவிடச் சொல்வது அவன் பாட்டின் பொருளாயிருக்க முடியாது. தீயன செய்ய அஞ்ச வேண்டும், நாண வேண்டும். காதலில் ஏற்படுகிற நாணமும் இருபாலாருக்கும் பொதுவானதுதான். அதே போல காதலிலும் நாணம் துறந்த நிலை உண்டுதானே......."

"அதென்ன நாணம் துறந்த நிலை?"

"நமது அன்புக்குரியவர்கள் நம்மீது கொண்ட காதலால், நமக்கு விருப்பமானவற்றைச் செய்யும் போது, நாணம் என்ற ஒரு பண்பு இருப்பதையே நாம் அறிவதில்லைத் தானே. இந்த நாணமற்ற நிலை கேலிக்கோ இழிவுக்கோ உரியதல்ல..."

"அதுபோல, வீரமில்லா நிலையும் இழிவானதில்லை என்கிறாய்....?"

"சரியாகச் சொன்னாய். நம்முடைய இயல்பான குணங்களை இயல்புகளை மறைத்து இட்டுக் கட்டும் போலிப் பெருமிதங்கள் வாழ்க்கைக்கு உதவாது என்கிறேன்."

**நாணென ஒன்றோ அறியலம்**
**-காமத்தால்**
**பேணியார் பெட்ப செயின்.**

(குறள் : 1257)

# ஸ்போர்ட்ஸ்

## இலங்கை வீரர்கள் முன்னணியில்



இலங்கை கிரிக்கெட் வீரர்களான மார்வன் அத்தப் பத்து, முத்தையா முரளீதரன், சனத் ஜயசூர்ய ஆகியோர் சியட் தரவரிசைப் பட்டியலின் முதல் 10 இடங்களுக்குள் வந்துள்ளனர்.

தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் நடைபெற்ற முத்தரப்புப் போட்டிகளின் போது திறமையாக விளையாடி சியட் தரப்பட்டியலில் தமது தரத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளனர்.

கடந்த மாதம் 27ம் திகதி வெளியான இந்தத்தரப்பட்டியலில் பாகிஸ்தானின் முன்னாள் கப்டனும் சகலதுறை ஆட்டக்காரருமான வாஸிம் அக்ரம் முதலிடத்தில் இருக்கிறார்.

கடந்த வருடம் சியட் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் இருந்த இந்திய கப்டன் சௌரவ் கங்குலியால் இம்முறை முதல் 20 இடங்களுக்குள் வரமுடியவில்லை.

சியட் தரவரிசைப்பட்டியலில் முதல் 10 இடங்களைப் பிடித்த வீரர்களும் அவர்களைப் பற்றிய விவரங்களும் வருமாறு:

| இடம் | வீரர் | நாடு | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | வாஸிம் அக்ரம் | பாகிஸ்தான் | 41 |
| 2 | மார்வன் அத்தப்பத்து | இலங்கை | 40 |
| 2 | முத்தையா முரளீதரன் | இலங்கை | 40 |
| 4 | அலெக் ஸ்ரூவர்ட் | இங்கிலாந்து | 39 |
| 5 | கொட்னி வோல்ஷ் | மே.இ.தீவுகள் | 38 |
| 6 | யூசுப் யூஹானா | பாகிஸ்தான் | 31 |
| 7 | சனத் ஜயசூர்யா | இலங்கை | 30 |
| 8 | இன்ஸமாம் உல்ஹக் | பாகிஸ்தான் | 29 |
| 9 | டரன் கொஃப் | இங்கிலாந்து | 21 |
| 10 | வவெல் ஹிண்ட்ஸ் | மே.இ.தீவுகள் | 20 |

## தவறான பந்துவீச்சு

கிரிக்கெட் உலகிலேயே மிகவும் வேகமாகப்பந்தை வீசுபவர் என்று கூறப்படுபவர் அவுஸ்திரேலிய இளம் வேகப் பந்து வீச்சாளர் பிரெட் லீ. இந்தப் புயல் வேகப்பந்து வீச்சாளர் பந்து வீசும் முறை தவறானது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் 10 பேர் கொண்ட, தவறாகப் பந்து வீசுபவர்களைக் கண்டுபிடிக்கும் குழுவினர் இவர் பந்தை எறிவதாகக் கூறியுள்ளனர்.

இதனால் பிரெட் லீ, தென்னாபிரிக்க அணியுடன் மோதவுள்ள அவுஸ்திரேலிய அணியில் இடம்பெறமாட்டார்



எனத் தெரிகிறது. இதற்குமுன் பாகிஸ்தானின் வேகப் பந்து வீச்சாளர் சொஹைப் அக்தர் மீதும் பந்தை எறிவதாகக் குற்றம் சாட்டப்பட்டதால், அணியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இவர்தான் அவர்



நெப்போலியன்

# சிந்தியா பதில்கள்

★ **வீதியில் தங்கள் வதனத்தை குடைகளினால் மறைத்துக் கொண்டு செல்பவர்களைப் பற்றி...?**

'தென்றல்', மன்னார்.

அமல்ராஜோ அடைக்கலராஜோ என்று ஒரு பெயரும் முகவரியும் இருந்தால் அவரைப் பற்றி நாம் அறிந்துகொண்டுவிட முடியும். ஆனால் 'தென்றல்', 'காற்று' என்று புனைப்பெயராக வைத்துக் கொண்டால் அவர் அழகானவராகவும் இருக்கலாம், அறிவானவராகவும் இருக்கலாம், உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவராகவும் இருக்கலாம்.. நாம் எப்படி வேண்டுமானாலும் ஊகித்து மரியாதைக்குரியவராக்கிக் கொள்ள இடமிருக்கிறது. அதுபோலத்தான், மறைத்துக் கொண்டு சென்றால், நீங்கள் ஓர் அழகான வதனத்தைக் கற்பனை செய்து கொள்ள முடியுமே!

○□

★ **சிந்தியா, 'இசைப்பேரரசு' பட்டம் தேவாவிற்குப் பொருத்தமானதா?**

எஸ்.பாமரன், அருப்பொல.

பல அரசுகளையும் தனக்குச் சொந்தமானதாக நினைத்துக் கொள்வதுதானே பேரரசு. எல்லா இசையையும் தன் இசையாக்கிக் கொள்ளும் தேவாவுக்குப் பொருத்தம் தான்!

○□

★ **கேள்வி கேட்பதா, விடை கூறுவதா எது சுலபம்?**

இராமச்சந்திரன், மாரதென்ன.

இதுபோன்ற கேள்விகளுக்கு விடை கூறுவது!

○□

★ **சிந்தியா! ஒரு குட்டிக்கதை?**

அ.அச்சுதன், சேனையூர்.

ஆ.... அப்படிக் கேளுங்கள். படித்து ரசித்ததை எடுத்துவிட இதுவல்லவோ வாய்ப்பு! ஐரிஸ் ஜோக்குகள் நூலிலிருந்து ஒரு குட்டிச் சங்கதி: அந்தப் பத்திரிகை அலுவலகத்துக்கு கவலையான முகத்தோடு ஒரு பெண் வந்தாள். "என் கணவர் இறந்து விட்டார். மரண அறிவித்தல் விளம்பரம் போட கட்டணம் எவ்வளவு?" என்று விசாரித்தாள்.

"ஒரு சொல்லுக்கு 50 ரூபா!" என்று பதில் வந்தது.

"என்னிடத்தில் 100 ரூபா தான் இருக்கிறது.... 'டேவிட் காலமானார்' என்று போடுங்கள் போதும்." என்று அழுதுகொண்டே சொன்னாள் வந்தவள்.

'வெறுமனே டேவிட் என்று போட்டால் எப்படி ஒருவரைத் தெரியப் போகிறது' என்று யோசித்த பத்திரிகைக்காரருக்கு அந்தப் பெண்ணைப் பார்க்கப் பாவமாக இருந்தது. "பரவாயில்லை மேடம், உங்களுக்கு சலுகைக் கட்டணம் தருகிறோம். உங்களிடமுள்ள நூறு ரூபாவுக்கு நாலு சொற்களை எழுதித் தாருங்கள். போட்டு விடுகிறோம்!" என்றார்.

அந்தப் பெண் இப்படி எழுதிக் கொடுத்தாள். "டேவிட் காலமானார். ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு...."

○□

★ **சிந்தியா! முன்னேற ஒரு வழி சொல்லுங்களேன்?**

க.அஜந்தக்குமார், அக்கரைப்பற்று.

செலவு குறைந்த வழி, சைக்கிளில் டபிள் போவதுதான்!

○□

★ **'இங்கே காது சுத்தம் செய்யப்படும்' என்று சக்தி வானொலி விளம்பரம் செய்கிறதே, சிந்தியா பார்த்தீர்களா?**

அ.விஜயா, வத்தளை.

ம்... இரைச்சல்களில் பெரிதாய் வித்தியாசமில்லாவிட்டாலும், தனியார் வானொலிகளில் உச்சரிப்பில் கவனம் செலுத்துவது சக்திதான் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். மற்றபடி, காதைச் சுத்தம் செய்வதெல்லாம் உயர்வு நவிற்சி.



ஸ்வர்ணமால்யா

★ **அநேகமான கிரிக்கெட் அணிகள் சொந்த நாட்டில் விளாசித் தள்ளிவிட்டு, வெளிநாடுகளில் மண் கவ்வுகின்றனவே என்ன காரணம்?**

சொ.நர்மதா, கொழும்பு 06.

பழகிய பிட்ச், பழகிய காலநிலை, மைதான ரசிகர்கள் தரும் உற்சாகம்... இவை தவிர சொந்த ஊரில் வெல்வதற்கு மற்றுமொரு வேதனையான காரணம் உண்டு. அடுத்த கேள்விக்கு வருக!

○□

★ **தென்னாபிரிக்காவுடனான இலங்கை அணியின் வெற்றிகள் எப்படி சிந்தியா?**

எம்.சி.பரீக், பாணகமுவை.

திறமையினால் நியாயமாகவே வென்றிருக்கக் கூடிய போட்டிகளில் எல்லாம் இந்த அம்பயர்கள் ஏன் சொதப்புகிறார்கள் என்பதைத்தான் சகித்துக் கொள்ள முடியவில்லை!

○□

★ **இரண்டு பேர் மட்டையை வைத்துக் கொண்டு பந்தைத் தட்டுகிறார்கள். சுற்றிவர கொஞ்சப்பேர் பந்தைத் துரத்திப் பொறுக்குகிறார்கள். கிரிக்கெட் என்ற இந்த விளையாட்டை வேலைமெனக்கெட்டுப் பார்க்க ஏன் இத்தனையாயிரம் பேர் பைத்தியமாக இருக்கிறார்கள்?**

வி.சுப்பிரமணியம், கொழும்பு 06.

விளையாட்டின் விதிகள் புரியாவிட்டால் எந்த விளையாட்டுமே பைத்தியக்காரத்தனம் போலத்தான் தெரியும். அதை விடுங்கள். கிரிக்கெட்டில் எனக்கு விளங்காத ஒன்று உண்டு. எந்த ஒரு மட்டையாளரும் (Batsman) பத்திருபது ஓவர்களுக்கு நின்று விளையாடிவிட்டால், ஃபோர்ம் (Form) வந்துவிடுவதாகவும், அதன் பிறகு அவருக்கு கைத்தாடனம் உண்டாகி, பந்தும் கண்ணுக்குத் தெளிவாகத் தெரிய ஆரம்பித்துவிடும் என்றும், அவுட்டாக்குவது சிரமம் என்றும் வர்ணனையாளர்களுட்பட எல்லோரும் சொல்கிறார்கள். என்னுடைய சந்தேகம் என்னவென்றால், இவர்கள் துடுப்பாட்டத் திற்காக களத்திற்குள் இறங்குமுன், ஒரு இருபது முப்பது ஓவர்கள் மைதானத்திற்கு வெளியே விளையாடிப் பார்த்துவிட்டு இறங்க முடியாதா? அப்படி உள்ளே, நுழைந்தால், நல்ல ஃபோர்மில் வெளுத்து வாங்கலாமே!

○□

★ **'தமிழன்னை' என்கிறோம் கன்னித்தமிழ் என்றும் சொல்கிறோம். அன்னை எப்படி கன்னியாக இருக்க முடியும்?**

எம்.நீலகண்டன், யாழ்ப்பாணம்.

யாரங்கே..... இந்தத் தமிழ்த் துரோகியைப் பிடித்துக் காராக்கிரகத்தில் தள்ளுங்கள்!

○□

★ **சிந்தியா, சக்தி ரி.வி.யில் 'புன்னகை' தொடர் பார்ப்பதுண்டா..... அதில் நடிக்கும் சொர்ணமல்யா பற்றி..?**

ப.நவநீதன், தோணிக்கல்.

பார்த்தவரையில்-அந்தத் தொடரை மணிரத்னம் தயாரிக்கிறார்.... மனோபாலா இயக்குகிறார் என்று போடப்படுகிறது. ஆனால் சொர்ணமால்யாவின் நடிப்பைப் பார்க்கும் போது, சுகாசினியல்லவா எல்லாவற்றையும் சொல்லிக்கொடுப்பதாகத் தெரிகிறது.

○□

★ **தன் கணவர் வழுக்கைத் தலையராய் இருப்பதை எண்ணி மனைவி மானசீகமாக வருந்துவதுண்டா?**

வீ.சிறீதரன், மல்லிகைத்தீவு.

தலைநிறைய முடியுள்ள பலரை எண்ணியும் அவர்தம் மனைவிமார் மானசீகமாக வருந்துவதுண்டு. கவலையை விடுங்கள்!

○□

★ **தீர்வுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறதே.....?**

கே. நிர்மலா, மட்டக்களப்பு.

வந்தவரை வாழ்த்துவோம்!

# மன்னாதி மன்னன் 17

## களங்கம் அடையாத கன்னி

விக்கிரமாதித்த மன்னன் பழைய படி வேதாளத்தை தன் முதுகில் சுமந்தவாறு நடந்து கொண்டிருந்தபோது, வேதாளம் தனது பத்தாவது கதையைச் சொல்லத் தொடங்கியது.

கோசல நாட்டில் தனதத்தன் என்ற ஒரு வணிகன் வசித்து வந்தான். அவனுக்கு தத்தன் என்றொரு மகனும் மதனசேனை என்றொரு மகளும் இருந்தனர். இவர்களுக்கு இளமையில் கல்வி முதலான கலைகளைப் புகட்டி அருமையாக வளர்த்து வந்தான். இவரும் உரிய வயதையடைந்ததும் மகன் தத்தனை தன்னுடைய வணிகத் தொழிலில் ஈடுபடுத்தினான். பேரழகியான மகள் மதனசேனையை சமுத்திரதத்தன் என்ற பெயருடைய தன் சொந்த மருமகனுக்கே மணம் முடித்து வைக்க ஏற்பாடு செய்திருந்தான். மதனசேனை மீது அவளுடைய சகோதரன் தத்தனுடைய நண்பனான தர்மதத்தன் நாட்டம் கொண்டிருந்தான். ஆனால் அவள் அவளுடைய சொந்த மாமன் மகன் சமுத்திரதத்தனுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்ததால் ஏமாற்றமடைந்தான். மதனசேனை தனது தோழிகளுடன் ஒருநாள் பூங்காவில் பந்து விளையாடிக் கொண்டிருந்தாள். தக்க தருணம் பார்த்து தர்மதத்தன் அவளை அணுகி தனக்கு ஒரு முத்தம் தரும்படி இரந்து வேண்டினான். மதனசேனை, தான் தனது மாமன் மகனான சமுத்திரதத்தனுக்கு மனைவியாகப் போவதை தருமதத்தனிடம் எடுத்துக் கூறினாள். இருப்பினும் தர்மதத்தன் தன்னுடைய ஆசையை எப்படியும் அவள் நிறைவேற்றியே ஆக



வேண்டும் என்று விடாப்பிடியாக நின்றான்.

தருமதத்தனைப் பார்த்து மதனசேனை, "இன்னும் சில தினங்களில் நான் இன்னொருவருடைய மனைவியாகப் போகிறவள். இந்நிலையில் உன்னுடைய விருப்பப்படி நான் நடந்து கொண்டால் நான் எனது வருங்காலக் கணவனுக்குத் துரோகம் செய்தவளாவேன். இருப்பினும் உன்னுடைய விருப்பத்தை எப்படியாவது நான் நிறைவேற்றியே தீருவேன். ஆகவே சற்றுப் பொறுமையாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்," என்று தன் நிலையை எடுத்துக் கூறினாள்.

மதனசேனை கூறிய வார்த்தைகளைக் கேட்டு தருமதத்தன் அமைதியடைந்தான்.

மதனசேனைக்கும் சமுத்திரதத்தனுக்கும் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. முதல் நாள் இரவு புதுத்தம்பதியினர் தனித்திருந்த போது தனது கணவனான சமுத்திரதத்தனின் பாதங்களைத் தொட்டு வணங்கிய மதனசேனை, "அன்பரே! நமது திருமணம் நிச்சயிக்கப்படுவதற்கு முன்னர் எனது அண்ணனின் நண்பரான தருமதத்தன் என்னை விரும்பியிருந்தான். ஆனால் இது எனக்கோ அல்லது என் பெற்றோருக்கோ, அண்ணனுக்கோ தெரியாது. நமது திருமண நிச்சயதார்த்தம் முடிந்த பின்னரே தருமதத்தன் என்னை நெருங்கி தனது எண்ணத்தைக் கூறி, தனக்கு ஒரு முத்தமாவது தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். ஆனால் நான் அதற்குச் சம்மதிக்கவில்லை. எனது வருங்காலக் கணவருக்கு நான் துரோகம் செய்ய முடியாது என்று கூறினேன். இருப்பினும், எனது கணவர் என்னைத் தீண்டுவதற்கு முன் எப்படியாவது அவருடைய ஆசையைப் பூர்த்தி செய்வேன் என்று கூறி சமாதானப் படுத்தினேன். ஆகவே தருமதத்தனுக்கு நான் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டிய கடமை எனக்கிருக்கிறது. தாங்கள் சம்மதித்தால் இன்றே அக்கடமையை நிறைவேற்றி விட்டுத் தங்களிடம் வந்து சேருவேன்!" என்று இரந்து கேட்டாள். சமுத்திரதத்தன் தனது மனைவி மதனசேனையின் நேர்மையையும் கள்ளம் கபடமற்ற தன்மையையும் மெச்சியவனாக அவள் கொடுத்த வாக்கினை நிறைவேற்றிவிட்டு வருமாறு அனுமதியளித்தான்.

அந்த இருள் சூழ்ந்த நேரத்தில் ஒற்றையடிப்பாதை வழியாக மதனசேனை தருமதத்தனின் இல்லம் நோக்கித் தனியாகப் புறப்பட்டாள்.

சற்றுத் தூரம் சென்றதும் கோர உருவத்துடன் ஒரு திருடன் மதனசேனையை வழிமறித்தான். அவனிடமிருந்து தப்பிச் செல்ல ஒரே வழிதான் இருக்கிறது என்று நம்பிய அவள் தன் நகைகள் அனைத்தையும் கழற்றி எடுத்து திருடனிடம் கொடுத்து விட்டு அப்பாற் செல்ல முயன்றாள். ஆனால் திருடனோ, அவள் கொடுத்த நகைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. மதனசேனையின் அழகில் தான் மயங்கிக் கிடப்பதாகவும், தனக்கு ஒரேயொரு முத்தம் தரும்படியும் அவளிடம் கேட்டான்.

மதனசேனை தன்னிலையை எந்தவிதமான ஒளிவு மறைவுமின்றி திருடனிடம் எடுத்துக் கூறினாள். தன் கணவன் தன்னைத் தீண்டுவதற்கு முன்னமே தான் தருமதத்தனுக்கு முத்தம் ஒன்று கொடுக்க வேண்டிய கடமைப்பாட்டில் இருப்பதாக எடுத்துக் கூறினாள். தன் முதற்கடமை முடிந்து திரும்பும் போது திருடனின் விருப்பத்தை நிச்சயமாக நிறைவேற்றி வைப்பதாக அவனிடம் கூறினாள். திருடனும் அதற்குச் சம்மதித்து அவள் தருமதத்தனிடம் போவதற்கு அனுமதித்தான்.

தருமதத்தனின் இல்லத்தின் முன் வாயிலில் நின்றபடி அவ்வில்லத்தின் கதவைத் தட்டினாள். சற்று நேரத்திற்கெல்லாம் கதவைத் திறந்த தருமதத்தன் வாயிலில் மதனசேனை வந்து நிற்பதைக் கண்டு திகைத்துப் போனான். பதற்றமடைந்தான் .

மதனசேனை தான் தருமதத்தனுக்குக் கொடுத்த வாக்கினை நிறைவேற்றுவதற்காகவே அங்கு வந்திருப்பதாகக் கூறினாள்.

மதனசேனையின் வார்த்தைகளைக் கேட்ட தருமதத்தன் பயந்து நடுங்கினான். இத்தகையதோர் உத்தமியைத் தான் துன்புறுத்த நினைத்ததையெண்ணி மனம் வருந்தினான். தன்னை மன்னித்து தன்னையும் ஒரு சகோதரனாக ஏற்றுக் கொள்ளும்படி தளுதளுத்த குரலில் கூறி அவளை தன் இல்லம் செல்லுமாறும் கேட்டுக் கொண்டான். அவளை அவள் வீடு வரை அழைத்துச் சென்று விட்டுவிட்டு வருவதாக தருமதத்தன் கோரிய போதும். அதற்கு அவள் சம்மதிக்கவில்லை. தான் வந்த வழியே தனியாக நடந்து சென்றாள்.

வழியில் அவள் ஏற்கனவே சந்தித்த திருடனும் நின்றிருந்தான். மதனசேனை தான் தருமதத்தனிடம் சென்றிருந்த போது அவன் கூறிய வார்த்தைகளைத் திருடனிடம் கூறினாள். இதனைக் கேட்ட திருடன் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டான். ஓர் உத்தமமான பெண்ணைத் தான் தீண்டி களங்கம் ஏற்படுத்தப் போவதில்லை என்று துணிந்தவனாக அவனிடம் இருந்த ஏராளமான நகைகளை மதனசேனையிடம் கொடுத்து, "சென்று வா சகோதரி!" என்று வழியனுப்பி வைத்தான்.

மதனசேனை தனதில்லம் திரும்பி அவள் கணவனின் கால்களில் வீழ்ந்து வணங்கினாள். தான் இல்லத்திலிருந்து போன போதும் தருமதத்தனைக் கண்டு திரும்பி வரும்போதும் நடைபெற்ற சம்பவங்களை ஒன்றுவிடாமல் கணவன் சமுத்திரதத்தனிடம் கூறினாள். அவனும் தன் மனைவியின் கற்புக்கு கெடுதி ஏற்படவில்லை என்பதனை உணர்ந்தவனாக அவளை ஏற்றுக் கொண்டான். இருவரும் மனமொத்த தம்பதியினராக நீண்ட காலம் வாழ்ந்திருந்தனர்.

இக்கதையைக் கூறிமுடித்த வேதாளம் விக்கிரமாதித்தனிடம் "மாமன்னரே! இக்கதையில் வரும் மதனசேனையின் கணவன் சமுத்திரதத்தன், அவளுடைய அண்ணனின் நண்பன் தருமதத்தன் மற்றும் திருடன் ஆகிய மூவரில் யார் சிறந்தவர்" என்று கேட்டது.

இராஜகுமாரன்

விக்கிரமாதித்த மன்னர், "மதனசேனையின் மனோதிடத்தைப் பாராட்டி தன்னிடமிருந்த நகைகளையும் அவளுக்கு அளித்து அவளைப் பத்திரமாக வழியனுப்பி வைத்த திருடனே சிறந்தவனாவான்!" என்று புதிரை விடுவித்தான்.

விக்கிரமாதித்தனின் பதிலைக் கேட்ட வேதாளம் மன்னனுடைய முதுகிலிருந்து குதித்து ஓடிச் சென்று பழைய படி முருங்கை மரத்தில் தாவி ஏறிக்கொண்டது. எதற்கும் தளர்ச்சியடையாத விக்கிரமாதித்தனும் வேதாளத்தைத் தொடர்ந்து சென்று, முருங்கை மரத்திலேறி அதனைப் பிடித்துக் கொண்டு தோளில் சுமந்த வண்ணம் நடக்கலானான்.

விக்கிரமாதித்த மன்னனின் தோளில் இருந்தவண்ணம் வேதாளம் மன்னரிடம் தனது பதினோராவது புதிர்க்கதையைக் கூறத் தொடங்கியது.

*(மன்னன் வருவான்...)*

# கத்தரித்த கடி ஜோக்ஸ்



ராமு: நான் வேலைக்குச் சேர்ந்த இடத்தில கண்டிப்பா தண்ணியடிக்கணும்னு சொல்லிட்டாங்க.
சோமு: எங்க வேலைக்குச் சேர்ந்தீங்க?
ராமு: தீயணைப்புப்படையில்.

**பேரன்:** பாட்டி, எனக்கு காலில் சிரங்கு. ஏதாவது ஒரு மருந்து சொல்லுங்களேன்.
**பாட்டி:** எனக்கு 'கை' வைத்தியம் தாண்டா கண்ணு தெரியும்.

பாபு: நான் ஊருக்குப் போகணும்னு இருந்தேன். இப்ப எனக்குப் 'பதிலா' எங்கப்பா போகிறார்.
கோபு: அப்ப உனக்குக் 'கேள்வியா' யார் போறாங்க?

**மகன்:** தாத்தா... பை.. பை..
**தந்தை:** தாத்தா பை.. பை.. இல்லை. தாத்தா பாய்... பாய்..ன்னு சொல்லணும்.
**மகன்:** அதில்லை அப்பா, தாத்தா பையை விட்டிட்டுப் போறார்ன்னு சொன்னேன்.



கந்தர்: மூக்குப்பொடி வாங்க கடைக்கு எப்படிப் போனீர்?
பொன்னர்: 'பொடி' நடையாத்தான்.

**பாலு:** சம்பளம் 'ப்த்தலை'ன்னு கேட்டதுக்கு, எங்க முதலாளி 'எரிஞ்சு எரிஞ்சு' விழறார்.
**வேலு:** எங்க வேலை செய்யிறீங்க?
**பாலு:** தீப்பெட்டித் தொழிற்சாலையில.

ஒருவர்: வியாபாரத்தில வர்ற பணத்தைச் 'சேமிக்கவே' முடியலை
மற்றவர்: என்ன வியாபாரம் செய்யிறீங்க?
ஒருவர்: 'சேமியா' வியாபாரம்.

**மாலா:** இந்த வீட்டில அவர் வைச்சதுதான் சட்டம்.
**விமலா:** அவர்தான் இந்தக் குடும்பத்தலைவரா?
**மாலா:** இல்லை. அவர் தான் இந்த வீட்டுக்குத் தச்சுவேலை செய்கிறவர்.

வேணு: அலுவலக நேரத்தில விளையாடிட்டு இருந்தோம். மனேஜர் சீட்டைக் கிழிச்சுட்டார்.
சீனு: அடடா, அப்புறம்?
வேணு: வேற சீட்டுக்கட்டு வாங்கிட்டோம்.




**அவர்:** எனக்குக் கண்ணே சரிவரத் தெரிய மாட்டேங்குது.
**இவர்:** நான் சொன்ன டாக்டரைப் போய்ப் பார்த்தியா?
**அவர்:** பார்த்தேன். அவரும் மங்கலாத்தான் தெரியுறார்.

மருத்துவர்: உங்களுக்கு வந்திருக்கிற கால் வியாதிக்கு ஒரு வாரம் நீங்கள் நடக்கவே கூடாது.
நோயாளி: ஒரு வேளை நடந்தா?
மருத்துவர்: நடக்கக் கூடாததெல்லாம் நடக்கும்.

**அப்பு:** யாரைப் பார்த்தாலும் உடனே போய் ஒட்டிக்கிறானே உங்க மகன், பையனோட பேர் என்னங்க?
**குப்பு:** வேலுநாய'கம்'



Regd. as a News Paper at the G.P.O.(QD/63/NEWS/2000)



அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lapik.com/arul
436337






ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


## பவனி



ஐரோப்பிய உதைபந்துக் கோப்பையை ஃபிரான்ஸ் அணி கைப்பற்றியதால் ஃபிரான்ஸ் நாட்டு மக்கள் பெரும் ஆரவாரத்தோடு கொண்டாடினார்கள். ஃபிரான்ஸின் தலைநகர் பாரிஸில் உதைபந்தாட்ட இரசிகர் ஒளிவெள்ளத்தில் தமது அணியின் வெற்றியைக் கொண்டாடும் காட்சி தான் மேல் படத்தில் உள்ளது.

உலகக் கோப்பை உதைபந்துப் போட்டிக்கு அடுத்து பிரபலமானது ஐரோப்பிய உதைபந்துக் கோப்பை உதைபந்துப் போட்டியாகும். உலகக்கோப்பைப் போட்டியைப் போல் இதுவும் 4 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுகிறது.

உலக சம்பியனாக இருந்து வரும் ஃபிரான்ஸ் ஐரோப்பிய சம்பியன் பட்டத்தையும் கைப்பற்றி வெற்றிமேல் வெற்றிகண்டுள்ளது.

1960 முதல் ஐரோப்பிய கோப்பை உதைபந்தாட்டப் போட்டி 4 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெற்று வருகின்றது.

இதில் ஜேர்மனி 3 முறையும், ரஷ்யா, ஸ்பெயின், இத்தாலி, செக்கோஸ்லாவாக்கியா, ஹொலன்ட், டென்மார்க் ஆகிய நாடுகள் தலா ஒவ்வொரு முறையும் ஐரோப்பிய சம்பியனாகி உள்ளன.

இம்முறையையும் சேர்த்து ஃபிரான்ஸ் இருமுறை ஐரோப்பிய சம்பியனாகியுள்ளது.

ஹொலண்ட் நாட்டில் கடந்த ஜூன் மாதம் 10ம் திகதி ஆரம்பமான ஐரோப்பிய கோப்பை போட்டிகள் ஜூலை 2ம் திகதி வரை நடைபெற்றன.

இறுதியாட்டத்தில் இத்தாலியை எதிர்க்கொண்ட ஃபிரான்ஸ், 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிகண்டது. ■



## வெற்றிமேல் வெற்றி

↑ பிரித்தானியாவிலுள்ள சைவக் கோவில்களில் பிரதானமானதாகக் கணிக்கப்படும் உயர்வாசற்குன்று திருவருள் மிகு முருகன் கோவில் வருடாந்த விழாவில் இவ்வாண்டு இரதோற்சவம் சிறப்பாக இடம்பெற்றது. ஜூலை 9ம் திகதியன்று நடைபெற்ற தேர்த்திருவிழாத் தொடக்கத்தில் தேரில் ஏற்றப் படுவதற்காக வள்ளி தெய்வானை சமேதரான முருகப் பெருமான் கொண்டுவரப்படுவதைப் படத்தில் காணலாம்.

இப்புதிய தேரை பிரபல தேர் அமைப்பாளரான திரு சரவணமுத்து ஜெயகாந்தன் அவர்கள் கொழும்பிலுள்ள தனது கலைக்கூடத்தில் வடிவமைத்து, கப்பல் மூலம் இலண்டன் மாநகருக்கு அனுப்பிவைத்தார். ஐரோப்பிய நாடுகளனைத்திலுமிருந்து ஏராளமான பக்தர்கள் தேர் உற்சவம் காணத் திரண்டு வந்திருந்தனர். ■

→ தந்தையைப் போல் நந்திதா தேவ் சென்னும் உலகப் புகழ் பெற்று விட்டார்.

கனடா-ஐரோப்பிய கூட்டுத் தயாரிப்பான 'வியாஜே இடாகா' படத்தில் நடித்திருக்கிறார். அதன் பின் ஸ்ரீநிவாஸ் கிருஷ்ணாவுடன் இணைந்து திரைக்கதை எழுதிய 'வெயிட்டிங் ஃபோர் மகாத்மா' படத்திலும் நடித்துள்ளார். இப்படத்தில் பிரபல இந்திய நட்சத்திரங்களான ஓம்பூரி, நஸ்ரு தீன்ஷா ஆகியோரும் நடித்திருக்கிறார்கள்.

இதை விட இலண்டனில் தயாராகவிருக்கும் ஒரு படத்திலும் நடிக்கவுள்ளார் நந்திதா சென்.

சரி. இவருடைய தந்தை யார்?

நோபல் பரிசு பெற்ற பொருளாதார மேதை அமர்தியா சென்.

## புகழ்



## 1வது பிறந்தநாள் வாழ்த்து

புஸ்பராசா கிருத்திகா

(சுபதிகா)

30.07.2000



திருகோணமலையைச் சொந்த புஸ்பராசா இந்திராணி தம்பதியின் செல்வப்புதல்வி கிருத்திகா (சுபதிகா) தனது முதலாவது பிறந்தநாளை கொழும்பில் தனதில்லத்தில் அக்கா பிரவீணாவுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அம்மா, அப்பா, அக்கா பிரவீணா, அம்மம்மா, பாட்டி, மாமாமாரான நடராஜா, தங்கேஸ்வரன், நிரோஜகுமார், பெரியம்மா சித்ரா, மாமிமார் செல்வமலர், வதனா, சித்தி பாமேஸ், சித்தப்பா ஸ்டாலின், அண்ணன்மார் பிரதாப், நளன், சுசாந்தன், நிஷாந்தன், அருண்பிரசாந்த், இளங்கோ, நிதர்சன், அக்கா விநோதாஷினி மச்சான்மார் ஜொனதன், சிந்து, மச்சாள் தர்ஷிகா, ஆன்டிமார் சர்மிளா, சுகிர்தா, யசோ, கனகா, யோகா, நந்தினி, சீதா, மிதிதா, அங்கிள்மார் சுகன், கிருபா ஆகியோரும் மூர்த்தி குடும்பத்தார், பவான் குடும்பத்தார், சாந்தன் குடும்பத்தார், அரிச்சந்திரா குடும்பத்தார், வசந்தன் குடும்பத்தார், வலம்புரி பூரணம் குடும்பத்தார் ஆகியோரும்.

திருமலை அப்பம்மா, அத்தைமார், மாமாமார், சித்திமார், சித்தாமார், யோகாநந்தம் குடும்பத்தார், சிறந்த அக்காக் நந்தன் குடும்பத்தார், அன்பப்பிள்ளை குடும்பத்தார், நதீமுகன் குடும்பத்தார், முருகானந்தம் குடும்பத்தார் அனைவரும் கிருத்திகாவை பலகலையும் கற்று பல்லாண்டுகாலம் துர்க்கை அம்மன் அருள் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: மூர்த்தி ஜுவலர்ஸ், வெள்ளவத்தை

→ மனிதர்களும் மிருகங்களும் செடி கொடிகளை தமது உணவாகக் கொண்டு உயிர் வாழ்வதைப் போல, சில செடி கொடிகளும் பூண்டுகளும் பூச்சி புழுக்களையும் வண்டுகளையும் பிடித்து தமது உணவாக்கி உயிர் வாழும் தன்மை கொண்டவை என்பதை ஏற்கனவே நாம் இப்பக்கங்களில் படம் போட்டுக் காட்டியிருக்கிறோம்.

அழகிய இரு பூக்களை இங்கு பார்க்கிறீர்கள். பார்ப்பதற்கு கவர்ச்சிகரமாகத் தோன்றும் இப்பூக்கள் மாமிச பட்சிணிகள் என்றால் நம்புவீர்களா? உண்மையில் இவை பூச்சிகளையும் வண்டுகளையும் பிடித்து விழுங்கி உயிர் வாழும் ஒரு பூண்டின் பூக்கள்.

இப்பூக்களின் மேல் விளிம்பில் பூச்சிகளை கவர்ந்திழுக்கும் நறுமணம் கொண்ட இனிமையான ஒருவகை சுரபிகள் உள்ளன. இவற்றால் கவரப்பட்ட பூச்சிகள் இப்பூவின் விளிம்பில் வந்து அமர்ந்ததும் குழாய் போன்ற பூவின் உட்பக்கத்துக்கு அவை இழுக்கப்பட்டு விடுகின்றன. உட்பக்கச் சுவரில் கீழ் நோக்கிய ஏராளமான முள் போன்ற அமைப்புகள் காணப்படுகின்றன. உள்ளே விழுந்து விட்ட பூச்சி எத்தனை முயன்றாலும் வெளியே வர முடியாதவாறு அம்முட்கள் தடுத்து விடுகின்றன. பூச்சிகள் செயலிழந்து இறந்து விடுகின்றன. உள்ளிருந்து சுரக்கும் திராவகத்தினால் அவை கரைக்கப்பட்டு பூவின் அடிப்பாகத்தால் உறிஞ்சப்பட்டு அப்பூண்டின் உணவாக மாறி விடுகின்றன. ■



## அழகிய ஆபத்து